# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2012

1-6-1981 50 காசு

துன்மதி-வைகாசி 19










# வீரபாண்டியக் கட்டபொம்மன் விழா

பாஞ்சாலங்குறிச்சி




(8-5-81—9-5-81)









காவலர்க்குச் சலுகைகள்



நாட்டுக்கு நன்னெறியைக் காட்டுங்கள்!

போக்கு வரத்துத் துறையில் மேம்பாட்டுத் திட்டங்கள்



திரைப்படம்-தொலைக்காட்சி தொழில் பயிற்சி நிறுவன விழா

முன்னேற்றப் பாதையிலே!




# தமிழரசு

மலர்:11 1-6-1981 இதழ்:23

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி-வைகாசி 19



## கீழ்மேட்டூர் நீர்மின் திட்டம்

பெரியார் மாவட்டத்தில் கூனேரிப்பட்டியில் அமைக்கப்பட்டுவரும் நீாமின் திட்டம் முடிவடையும்போது, மாவட்டத்தின் மின் தேவையில் பாதியை இத்திட்டம் ஈடுசெய்யும். ஒரு அடி ஆழமுள்ள ஓடும் நீரிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பணி நடைபெற்று வருகினறது. மின்சாரம் உற்பத்தி செய்ய உதவும் டர்பைன்களை இயக்க, 9 மீட்டர் உயரத்தில் இருந்து நீர் செலுத்தப்படும். கூனேரிப்பட்டி, நெருஞ்சிப்பேட்டை, செவக்கானூர் (சேலம்) மற்றும் ஊராட்சிக்கட்டை ஆகிய இடங்களில் டர்பைன்கள் அமைக்கப்படுகின்றன. இரு கரைகளிலும் நான்காவது கட்ட தோண்டும் வேலை முடிவடைந்துவிட்டது. 30 சதவீத மின்சார நிலையப்பணி முடிவடைந்துவிட்டது. ஒவ்வொன்றும் 30 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அளவில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த மின்சார நிலையங்கள், இலக்கு ஆண்டான 1984-ல் 120 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும். இத்திட்டத்துக்கான மொத்த மதிப்பீடு 85 கோடி ரூபாய். மேட்டூர் மற்றும் பவானி இடையே உள்ள நான்கு கரைகளும் உருவாகி வருகின்றன.

## கூட்டுறவுக் கடன் தள்ளுபடி

எந்த ஒரு அரசும் விவசாயிகளின் நலன் கருதி அளிக்காத சலுகைகளை 1977-லிருந்து 1981-வரை கிராமப் பொருளாதார முன்னேற்றத்திலும் விவசாயிகள் நலனிலும் மிக்க அக்கறையோடு செயல்படும் தமிழக அரசுதான் அளித்திருக்கிறது. அந்த வகையில் விவசாயிகளின் துயர் துடைக்க தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு இதுகாறும் 193½ கோடி ரூபாய் அளவிற்கான சலுகைகளைத் தமிழ்நாடு அரசு அறிவித்து இருக்கிறது.

வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டமுடியாத நிலை ஏற்பட்ட சிறு விவசாயிகளுக்குக் கடன் வட்டிகளை ரத்து செய்த போது நாணயமாக, நேர்மையாக, கஷ்ட நிலைமையிலும் கூட வாங்கிய கடனை காலத்தே திருப்பித் தந்தவிவ்சாயிகளுக்கு, விவசாயிகள் ஏமாந்தவர்களாகப் போய்விடக் கூடாது என்பதற்காக அத்தகைய சிறு விவசாயிகளுக்கும் சலுகையளிக்கின்ற வகையில் 1-4-80க்குப் பின்னர் காலத்தே வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்திய சிறுவிவசாயிகளுக்கு அவர்களது வட்டியையும் அபராத வட்டியையும் அவர்களுக்கே திருப்பித்தர தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. இதன் மூலம் அத்தகைய விவசாயிகளுக்கு வரும் ஆண்டில் 3 கோடி ரூபாய் சலுகை அளிக்கப்படும்.

[4-5-81 அன்று மாண்புமிகு சட்ட, கூட்டுறவுத் துறை அமைச்சர் சட்டப் பேரவையில்]

# தமிழகக் காவலர்க்கு 19 சலுகைகள்



**தமிழ்நாட்டில், காவலர்களுக்குச் சிறப்பு ஊதிய உயர்வு உள்ளிட்ட 19 புதிய சலுகைகளை 7-5-81 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார். அவை வருமாறு :**

(1) தமிழ்நாட்டிலுள்ள 10 ஆயிரத்து 33 காவல் நிலையங்களில் 450 காவல் நிலையங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக, இந்த ஆண்டு புதிதாக 150 காவல் நிலையங்கள் கட்டப்படும். இதற்கு 4 கோடி ரூபாய் செலவிடப்படும்.

(2) போக்குவரத்துக் காவல் துறைக்காகப் புதிதாகத் தொலை தூரத் தொடர்புக் கருவி பொருத்தப்பட்ட மூன்று வாகனங்கள் வாங்கப்படும்.

(3) காவல் துறையில் தற்போது ஆயிரத்து 873 பழைய வண்டிகள் உள்ளன. ஆண்டுக்குப் பத்து சதவிகிதம் வண்டிகளைப் புதுப்பிக்கும் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக, இந்த ஆண்டு ஒரு கோடியே 57 இலட்ச ரூபாய் செலவில் 187 புதிய வாகனங்கள் வாங்கப்படும்.

(4) சென்னை ஆவடியிலுள்ள காவலர் வாகனப் பராமரிப்பு நிலையம் பத்து இலட்சம் ரூபாய் செலவில் மேம்பாடு செய்யப்படும். மேலும், கோவை, மதுரை ஆகிய இடங்களிலும் இந்த மேம்பாட்டு நிலையங்கள் துவக்கப்படும்.

(5) கோவை, வேலூரிலுள்ள காவலர் பயிற்சிப் பள்ளிகளுக்குக் கூடுதல் வசதி செய்து கொடுப்பதற்காக மேசை, நாற்காலி வாங்கவும் 20 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

(6) குதிரைப்படைக் காவலர் பிரிவுமேலும்விரிவுபடுத்தப்பட்டு, கோவை, மதுரை ஆகிய இரு மாநகரங்களிலும் குதிரைப் படைக் காவலர் பிரிவு ஏற்படுத்தப்படும்.

(7) சென்னை அசோக் நகரிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரிக்குப் பேருந்து, ஜீப், கார், மோட்டார் சைக்கிள் ஆகியவை நான்கு இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கப்படும்.

(8) தமிழ்நாடு விசேடக் காவல் படையில் பத்தாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்கள் சட்டம் ஒழுங்குப் பிரிவில் மாற்றப்படுவர். அவ்வாறு மாற்றுவதற்கு முன்பு அவர்களுக்குக் குற்றவியல் சட்டத்தில் பயிற்சி அளிக்கப்படும்.

(9) ஏவலர் முறை (ஆர்டர்லி) ஒழிப்புக்காக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. காவல் அதிகாரிகளுடைய வீடுகளில் ஏவலர்களுக்குப் பதிலாக, அவர்கள் அடிப்படை ஊழியர்களை நியமித்துக் கொள்ள ஈட்டுத்தொகையாக அவர்களுக்குக் குறிப்பிட்ட தொகை கொடுக்கப்படும். இனி எக்காரணத்தைக் கொண்டும் காவலரை ஏவலர் பணிகளுக்குப் பயன்படுத்துவதை அரசு நிச்சயமாக அனுமதிக்காது.

(10) விசேட ஆயுதக் காவல் படையில் தற்காலிகப் பணியாளர்களாக உள்ள முடிதிருத்தும் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், சமையல் செய்வோர் ஆகியோர் பணி நிரந்தரம் செய்யப்பட்டு அவர்களுக்கு ஓய்வூதியம், விடுமுறை வசதிகள் ஆகியவை கிடைக்கும்.

(11) தமிழ்நாடு விசேடக் காவல் பிரிவில் இருக்கும் காவலர் அந்த முகாமிலிருந்து அவர்கள் குடும்பத்தினர் சென்னையிலோ அல்லது வெளியூர்களிலோ வாடகை வீட்டில் இருந்தால், அவர்களுக்கு வீட்டு வாடகைப் படி அளிக்கப்படும்.

(12) கிராமப்புறங்களுக்கு காவலர் வசதி கிடைக்கச் செய்யும் வகையில் கூடுதலாக 30 காவல் நிலையங்கள் இந்த ஆண்டு ஏற்படுத்தப்படும்.

(13) மாவட்ட ஆயுதக் காவல் படைப் பிரிவை மேலும் கண்காணிக்க மாவட்டக் காவலர் சூப்பிரண்டு, கூடுதல் காவலர் சூப்பிரண்டெண்டு தகுதியில் அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். பத்துக்கும் மேற்பட்ட பட்டாளங்கள் தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, திருச்சி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் சூப்பிரண்டெண்டும், மூன்று பட்டாளங்களுக்கு மேற்பட்ட செங்கல்பட்டு (மேற்கு) தஞ்சை (கிழக்கு), தர்மபுரி, கன்னியாகுமரி, நீலகிரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலும் ஒவ்வொன்றுக்கு ஒரு துணைக் கண்காணிப்பாளர் நியமிக்கப்படுவர்.

(14) காவலர் பயிற்சிக் கல்லூரிப் பள்ளிகளில் பயிற்சி அதிகாரிகள் திறமை, தகுதி, ஆர்வம் உள்ளவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கூடுதல் படி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது அங்குள்ள அனைவருக்கும் உண்டு.

(15) மாவட்டங்களில் மாவட்டக் காவல் அதிகாரிகளாக உள்ளவர்கள் சட்டம் ஒழுங்கு அமைதியைப் பராமரிக்கும் பணியிலேயே பெரும்பகுதி நேரம் செலவிட்டு விடுவதால், குற்றப் புலனாய்வு ஆகிய பணிகளைச் செம்மையாக நிறைவேற்றி முடிக்கும் நோக்கத்தோடு, எந்தெந்த மாவட்டங்களில் குற்றங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளனவோ, அங்கெல்லாம் கூடுதல் காவல் துறைக்கண் காணிப்பாளர் தகுதியில் அதிகாரிகள் நிய

## மகளிர் பாதுகாப்புக்குப் புதிய வசதிகள்

வெளியூரிலிருந்து புகைவண்டி மூலம் சென்னை எழும்பூர், சென்ட்ரல் புகைவண்டி நிலையங்களில் துணையின்றி வந்திறங்கும் பெண்கள், சிரமமின்றி தாங்கள் செல்ல வேண்டிய இடத்திற்குப் பாதுகாப்புடன் சென்றடைய தமிழ்நாடு அரசு புதிய ஏற்பாடுகளைச் செய்யவிருக்கிறது. வசதிகளைச் செய்து கொடுக்க தமிழ்நாடு அரசு தென்னிந்திய இரயில்வேயும் முன்வந்துள்ளன.

இதற்கென சென்னை சென்ட்ரல்-எழும்பூர் புகைவண்டி நிலையங்களில் காவல்துறை பெண் அலுவலர்களைக் கொண்ட வழிகாட்டும் நிலையம் ஒன்று (11-5-81) அன்று முதல் இயங்குகிறது.

துணையின்றி தனியாக புகைவண்டி நிலையங்களில் வந்திறங்கும் பெண்கள் இந்த அலுவலகத்திற்குச் செனறு தாங்கள் எந்த இடத்திற்குச் செல்லவேண்டும் என்பதையும், சொந்த ஊர் மற்றும் விவரங்களையும் தெரிவிக்க வேண்டும். இவர்கள் டாக்சி அல்லது ஆட்டோ ரிக்ஷாவில் பயணம் செய்வதாயின் அதற்சான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதோடு வண்டியின் எண், ஓட்டுநரின் பெயர் இவைகளைப் பதிவேட்டில் குறித்துக்கொள்ளப்படும்.

பேருந்தில் பயணம் செய்வதாயின், அந்தப் பேருந்து ஓட்டுநர், நடத்துநரின் பெயரைக குறித்துக் கொண்டு, பாதுகாப்பு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். இவர்கள் சேரவேண்டிய இடம் சேர்ந்ததும் அவர்களது உறவினர்களோ, டாக்சி ஆட்டோ போன்றவற்றின் ஓட்டுநரோ அருகிலுள்ள காவல் நிலையத்திற்குச் சென்று புகைவண்டி நிலையத்திலுள்ள அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலம் தகவல் கொடுக்க வேண்டும். இதற்கென ஒவ்வொரு காவல் நிலையத்திலும் தனிப் பதிவேடு ஒன்று அமைக்கப்படும்.

வீடு போய்ச் சேர்ந்தவர்களின் குடும்பத்தினர் காவல் நிலையத்திலுள்ள இப்பதிவேட்டில் தங்களது உறவினர் வந்து சேர்ந்த நாள், நேரம் இவைகளைக் குறிப்பிட்டு, கையெழுத்தை அந்தப் பெண்ணின் கையெழுத்தோடு இடவேண்டும். பெண்கள் தனியாக இரவில் வந்து இறங்கினால், புகைவண்டி நிலையத்திலேயே பெண்காவலர்களின் பாதுகாப்பில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுப் பின் காலையில் முன்னர் குறிப்பிட்டவாறு அவர்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

இம்முறை முதலில் சென்னை சென்ட்ரல், எழும்பூர் ஆகிய புகைவண்டி நிலையங்களில் செயல்படுத்தப்படும். பின்னர் மதுரை, கோவை, திருச்சி, தஞ்சை ஆகிய இடங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

---

மிக்கப்படுவார்கள்.

(16) போக்குவரத்துக் காவலருக்குச் சிறப்பு ஊதிய உயர்வு அளிக்கப்படும். சென்னை மாநகரில் முதல் கிரேடு, இரண்டாவது கிரேடு காவலருக்குத் தற்போது வழங்கும் சிறப்பூதியம் பத்து ரூபாயிலிருந்து இருபது ரூபாயாக உயர்த்தி தரப்படும். தலைமைக் காவலர்களுக்குத் தற்போது 14 ரூபாயாக வழங்கப்படும் சிறப்பு ஊதியம் 25 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்படும்.

(17) இந்தியக் காவலர் சர்வீஸ் (ஐ. பி. எஸ்.) அதிகாரிகளுக்கும், காவலர், தலைமைக் காவலர், உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் ஆகியவர்களுக்குத் தற்போது உடை அலவன்சு வழங்கப்படுகிறது. இதைக் கூடுதல் காவல் துறைக் கண்காணிப்பாளரிடமிருந்து நடுமட்ட அதிகாரிகள் வரை அதாவது துணை-சப்-இன்ஸ்பெக்டர்கள் வரை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி கூடுதல் காவல் துறைக் கண்காணிப்பாளர், துணைக் கண்காணிப்பாளர்க்கு 30 ரூபாயும், இளநிலை உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர், காவலர் ஆகியோர்களுக்குப் பத்திலிருந்து பதினைந்து ரூபாயாகவும் உயர்த்தி அளிக்கப்படும்.

(18) இரகசியக் காவல் குற்றப் புலனாய்வுக் காவலர் ஆகியவற்றில் பணியாற்றிவரும் காவலர் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சிறப்பு ஊதியத்தை உயர்த்தித் தர முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, சென்னை, நகரப் பகுதியில் பணியாற்றும் துணைக் கண்காணிப்பாளர், ஆய்வாளர், துணை ஆய்வாளர், உதவி ஆய்வாளர், தலைமைக் காவலர், முதல், இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு இதுவரை சிறப்பு ஊதியம் முறையே 75, ரூபாய், 50, 25 ரூபாய், 25 ரூபாய், 10 ரூபாய், 10 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தொகை இனி முறையே நூறு ரூபாய், 75ரூபாய், 50 ரூபாய், 35 ரூபாய், 25ரூபாய், 25 ரூபாய், 25 ரூபாய் ஆக உயர்த்திக் கொடுக்கப்படும். அதாவது பதினைந்து ரூபாயிலிருந்து 25 ரூபாய் வரையில் ஒவ்வொருவருக்கும் கூடுதலாகக் கிடைக்கும்.

(19)சென்னை தவிரமற்றப் பகுதிகளில் பணியாற்றும் உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர் முதல் இரண்டாவது கிரேடு காவலர்கள் ஆகியவர்களுக்கு இதுவரை சிறப்பு ஊதியமாக முறையே 35 ரூபாய், 35ரூபாய், 15 ரூபாய், 15 ரூபாய், 7ரூபாய், 5 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. இது இனி முறையே 90 ரூபாய், 50 ரூபாய், 35 ரூபாய், 25ரூபாய், 15 ரூபாய், 15 ரூபாய், 15ரூபாய் என உயர்த்திக் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது.

மேலே சொன்ன 19 சலுகைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் சட்டப்பேரவையில், காவலர் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில் அறிவித்தார். இதன் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்குப் பத்துகோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

● காவல் துறையினருக்கும், தீயணைப்புப் படையினருக்கும், அளித்த சலுகைகளைப் போல, குறைந்த விலையில் அரிசியும், 'ரிஸ்க் அலவன்சும்' காவல் துறையில் உள்ள சுருக்கெழுத்தர்களுக்கும் வழங்கப்படும். தமிழ்நாடு முழுவதும் காவல் துறையில் 41 சுருக்கெழுத்தர்கள் உள்ளனர்.

● காவல் நிலையத்தில் அலுவலர்கள் என்ற நிலையில். பணியாற்றுகின்றவர்களின் வேலைப் பளுவைக் குறைக்க, அவர்களுடைய எண்ணிக்கையைத் தேவையான அளவு உயர்த்த, அரசு ஆவன செய்யும்.



# நாட்டுக்குகந்த நன்னெறியைக் காட்டுங்கள்!

மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்

## திரு இராம. வீரப்பன்

இன்றைய விழா நாயகரான தவத்திரு அடிகளார் பன்றிமலை சுவாமிகள் அவர்கள் எழுதிய என்று கூட அல்ல தெரிவித்த கருத்துக்களைத்திரட்டி 'ஹோலி பஞ்சாட்சரா' என்ற தலைப்பில் ஒரு நூலை தயாரித்திருக்கிறார்கள். அந்த நூலை நான் வெளியிடவேண்டும் என்கிற அந்தப் பணியை எனக்கு அளித்ததின் மூலம் இந்த விழாவில் வாய்ப்பு அளித்தமைக்கு விழாக்குழுவினருக்கும் நான் எனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஏற்று இருக்கிற பொறுப்புக்காரணமாக நீங்கள் இதுவரை கேட்காததை - கேட்கவிரும்பாத கருத்துக்களை இங்கே நான் சொல்ல வேண்டிய கடமையிருக்கிறது. அது காலத்தின் கட்டாயம் என்பதை இந்த மாமன்றமும் வணக்கத்திற்குரிய அடிகளாரும் தெரிந்துசொள்ளவேண்டிய கடமையும் இருக்கிறது. அப்படிப்பட்ட கருத்துக்களை இங்கே தெரிவித்துக்கொள்ள வேண்டிய கடமைப்பாடும் எனக்கு இருக்கிறது.

வெளியிட இருக்கும் இந்த நூலில் பல்வேறு நாயன்மார்களைப்பற்றி தெரிவித்த கருத்துக்களை தொகுத்து வெளியிட்டு இருக்கிறார்கள். வேறு சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் அதேபோல ஆழ்வார்கள் கருத்துக்களும் இதில் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. ஆலயத்தின் அவசியம் ஆலயவழிபாட்டின் சிறப்புக்கள் ஆன்மீக நெறியின் உயர்வுகள் இங்கு எடுத்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலைமையில் அறநிலையத் துறைக்கு பொறுப்பேற்று இருக்கின்ற அந்த உணர்வின் அடிப்படையில் இந்நாட்டிலே இருக்கின்ற கோடானுகோடி சாதாரண மக்கள் ஏழை எளியவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை நீங்களும் எண்ணிப்பார்க்கவேண்டும்.

அவர்களுக்கெல்லாம் நீங்கள் என்ன வழி காட்டுகிறீர்கள் என்பதை வேண்டுகோளாக வைப்பதற்குத்தான் அவர்களின் பிரதிநிதி என்ற முறையில் நான் உங்கள் முன் நிற்கிறேன்.

இதற்கு காரணம் அடிகளாரை (பன்றிமலை) வாழ்த்துகின்ற வயது எனக்கு இல்லை, ஆனால் அன்புள்ளம் இருக்கிறது. அது வாழ்த்திக் கொண்டுதான் இருக்கிறது.

ஒரு முறை எங்களை எல்லாம் ஆளாக்கிய எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள், ''மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'' என்று அவர்கள் எங்களுக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை வணங்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களை வாழ்த்துகிறோம்.

ஆனால், சமுதாயத்திலே கோடிக்கணக்காக வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழை மக்களுக்கு ஏதும் அறியாத மக்களுக்கு எந்த வழியைக் காட்டுகிறீர்கள் எந்த நெறியில் நடைபோட வேண்டும் என்று தெளிவுபடுத்த போகிறீர்கள் என்பதுதான் இந்த சமுதாயத்தின் சார்பிலே என்னுடைய பணிவான வேண்டுகோளாகும்.

இன்றைக்கு இந்தியா ஆன்மீக நெறிபற்றி ''கடவுள் அருள்பற்றி சொல்லியிருப்பது போல உலகத்திலேயே எந்த நாட்டிலும் எந்த ஆன்மீக வாதியும் சொல்லவில்லை. இந்த நாட்டிலேதான் வறுமையிருக்கிறது. ஏழ்மைத் தாண்டவம் ஆடுகிறது. படிக்காதவர்களின் தொகை 57 சதவிகிதம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது.

கல்விக்கு என்று ஒரு கடவுளை வைத்துக்கொண்டு இருக்கின்ற இந்த நாட்டிலேதான் இந்த நிலைமை இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார்: ஆண்டவன் மனிதனைப்பார்த்து கேட்டார். 'படைப்பிலேயே உயர்ந்தப் படைப்பாக நான் மனிதனைப் படைத்து இருக்கிறேன். அவனுக்காகத்தான் எல்லாவித வாய்ப்பு வசதிகளையும் தந்து இருக்கிறேன்.

மனிதன் மண்ணைத்தோண்டினால் பொன் கிடைக்கிறது. கடலுக்குள்ளே போனால் முத்து கிடைக்கிறது. கானகத்திலே அவனுக்கு அளவற்ற செல்வம்கிடைக்கிறது. தோண்டிய இடமெல்லாம் வேண்டிய வசதி கிடைக்கிறது. இவையெல்லாம் விட எந்த ஜீவராசிக்கும் இல்லாத பகுத்தறிவை தந்து இருக்கிறேன். இவற்றையெல்லாம் பயன்படுத்திக்கொள்ளாமல் எனக்கு இந்த வரம்தா? அந்தவரம் தா? என்று என்னைக் கேட்டுக்கொண்டு இருக்கிறாயே! இதில் என்ன பெருமை இருக்கிறது. இத்தனையும் உனக்குத் தந்த எனக்குத்தான் என்ன பெருமை என்று கேட்பதுபோன்ற ஒரு கருத்தை ஆண்டவன் மனிதனைப் பார்த்துக்கேட்டால் போல் கூறுவார்கள்.

அப்படிப்பட்ட உணர்வு எப்படிவந்தது? என்பதை அருள் கூர்ந்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அறநிலையத்துறையில் பொறுப்பேற்று இருக்கிறவன் என்கிற வகையில் கடந்த சிலகாலமாக அதிகமான அளவு ஆன்மீகத்துறையில் ஈடுபாடு கொண்டு இருக்கிறேன்.

எங்களைப் போன்ற பொதுத் தொண்டு ஆற்றுவோருக்கு உங்களைப்போன்ற சான்றோர்கள்-பெரியோர்கள் ஒரு தெளிவான வழியை காட்டவேண்டும் என்றுதான் வேண்டிக்கொள்கிறேன்.

ஏழை எளியமக்கள் நாள்முழுவதும் பாடுபட்டாலும் ஒரு வேளை உணவுகூட கிடைக்காமல் திண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள்.

ஆன்மீகத்துறையில் அவர்களுக்கு எல்லாம் ஒரு வழியைக் காட்டுங்கள்! நீங்கள் காட்டும் அந்த நல்லபாதையில் அவர்களை எல்லாம் வழிநடத்திச் செல்ல எங்களுக்கு ஒரு வழியை ஏற்படுத்தித்தாருங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இதைத்தான் நான் பல்வேறு சமயநெறிக் கூட்டங்களில் நான் கேட்டுக்கொண்டு வருகிறேன்.

இப்படிப்பட்ட ஏழை-எளியவர்கள் பாமரர்கள் ஆகியோரை திருத்துவதற்கு ஒருவழி இல்லை என்றால் ஆன்மீகமும் இல்லை அறநெறியும் இல்லை என்றுதான் பொருள்.

அவர்களைச் சீர்திருத்தாமல் அவர்களுக்கு ஒரு நல்வழிக்காட்டாமல் இருக்கின்ற எந்த நெறியும் இந்த நாட்டை உயர்த்தாது.

ஆன்மீக நெறியைப் பரப்புவதற்காகவும் சமய நெறியை உயர்த்துவதற்காகவும் எவ்வளவோ பெரிரியவர்கள் எத்தனையோ அரிய கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள் என்பதைக் கேட்டு இருக்கிறோம். நான் பொறுப்பேற்றபிறகு இத்தகைய பெரியவர்களைப் பற்றி எல்லாம் கேள்விப்பட்டு இருக்கிறேன். பார்த்து இருக்கிறேன். இந்த மண்டபத்தை விட்டு வெளியே சென்றால் அதையும் தாண்டிப்போனால் 80,90 வயது பெரியவர் துறவறம்பூண்டு கால் நடையாகவே நாடுமுழுவதும் சென்று மக்கள் எளிமையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவரே ஒரு எடுத்துக்காட்டாக நடந்தே சென்று ஆன்மீகத்தை நிலைநாட்டிக் கொண்டு வருவதைக் காண்கிறோம். பிறகு தஞ்சை மாவட்டத்தில் பல பகுதிகளில் நுழைந்தால் மகேசனுக்கு நிகரான மடாதிபதிகள் சமயத்தை மொழியை காப்பாற்றும் பொறுப்பிலே உள்ள ஆதீனத்தலைவர்களை கண்முன்னே நிறுத்தப்படுகிறார்கள். இவர்கள் எல்லாம் மக்கள் மன்றத்தின் முன்னே வர விரும்பாமல் அங்கேயே உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் தங்களை மகேசனுக்கு நிகராகக்கருதிக்கொண்டு மக்கள் அங்கே வரவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

உயர்ந்த நெறிக்காக முன்னோர்கள் வைத்துச் சென்ற சொத்துக்களை எல்லாம் எப்படி சூறையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்கின்ற செய்தியும் எங்களுக்குக்கிடைக்கிறது. இதைப் பார்க்கிற துர்பாக்கிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதையும் தாண்டி குன்றக்குடி அடிகளாரைப் பார்க்கிறோம். அவர் சாதாரணமான மனிதரை போல சமயநெறிக்காக மட்டுமல்லாமல் தமிழுக்காகவும் பாடுபடுவது தவறல்ல என்ற தத்துவத்தை கடைப்பிடிக்கிற ஆதீனத் தலைவறாக அவரை நாம் பார்க்கிறோம்.

இதேபோல கன்னியாகுமரி வரை பல்வேறுபட்ட சமயநெறி தலைவர்கள் பல்வேறு கோணங்களில் காட்சியளிக்கிறார்கள்.

ஒரு கவிஞன் சொன்னான்: ''வாழ்கின்றார் முப்பத்து முக்கோடிமக்கள் என்றால் சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்'' என்று.

அதே போல நாட்டில் எத்தனை வேறுபாடுகள்.

இங்கே நூலில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். சந்தனத்தைத் தினமும் அரைத்து அபிசேகம் செய்கிறார் ஒரு நாயனார். அதை அரைத்துக் கொடுப்பவர் ஒரு சைவ சமயத்தவர் - சந்தனத்தை அரைத்துக் கொடுக்கும் அவருக்கு - கடவுளுக்கு அபிசேகம் செய்த சந்தனத்தைக் கொடுக்காதே என்கிறார் சைவ சமயத்தவர். ஆனால் சைவ சமய நாயனார் தனது பக்தியை நிலை நாட்ட கையை உடைத்து சந்தனப் பூ அபிசேகம் செய்கிறார் என்பது எதைச் சுட்டிகாட்டுகிறது. அற மனிதனின் தியாக உணர்வை அது எடுத்துக்காட்டவில்லையா?

கண்ணப்ப நாயனார் தான் வழிபடும் கடவுளுக்குத் தன் கண்ணையே பெயர்த்து அளித்தார் என்றால் அது வெறும் புராணம் மட்டும் அல்ல; மனிதன் தியாக உணர்வோடு வாழவேண்டும் என்பதற்காக வழிகாட்டும் வரலாறு ஆகும்.

15 நாளுக்கு முன்னால் கூட சென்னையில் உடன்பிறந்த சகோதரருக்கு தனது இரண்டு கிட்னியில் ஒன்றை அளித்து அவரது உயிரைக்காப்பாற்றினார் என்ற செய்தி வெளிவந்தது. இது அந்தக்கால கண்ணப்பநாயனாரை நினைவுபடுத்தவில்லையா? அந்த தியாக உணர்வு உள்ளவர் இன்றைய கண்ணப்ப நாயனராக கருதப்படுகிறார் அல்லவா?

செத்தவர்கள் தங்கள் கண்களை உயிரோடு இருப்பவர்களுக்கு அளிப்பவர்கள் இருக்கிறார்கள். இந்த நாட்டில் அப்படிப்பட்ட தியாக உள்ளம் கொண்டவர்கள் வாழ்ந்து இருக்கிறார்கள். வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

யார் எதைச்செய்தாலும் பிறருக்காக எதாவது செய்தாக வேண்டும் என்ற தியாக உணர்வோடு செயல்பட வேண்டும்என்பதைத்தானே தெய்வபக்தி என்கிறோம். தேசபக்தி என்று குறிப்பிடுகிறோம்.

இங்கே நீங்கள் அருமையான நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டீர்கள். இந்த நூலைப் பற்றி உலகத்திலேயுள்ள நாட்டு மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக ஆங்கிலத்தில் வெளியிட்டு இருக்கிறீர்கள். ஆனால் நாம் வாழும் நாட்டிலேயேஇதை பற்றி ஏதும் தெரியாமல் இருக்கிறானே அவனுக்கும் அல்லவா சொல்லவேண்டும்·அவனுக்கு தமிழில் சொல்லவேண்டாமா?

இந்த நூலில் சைவ சமயத்தைப் பற்றியும் சொல்லி இருக்கிறீர்கள். வைணவத்தைப் பற்றியும் சொல்லி இருக்கிறீர்கள். அதன் உள்ளே நுழைய நான் விரும்பவில்லை. இங்கே இந்த விழாவில் கலந்துகொள்ள ஆயிரக்கணக்கானவர்கள் வந்து இருக்கிறார்கள். உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மாண்புமிகு இஸ்மாயில் அவர்களும் இங்கே வந்திருக்கிறார்கள். இதிலிருந்தே அடிகளார் (பன்றிமலை) சமயங்களையெல்லாம் கடந்து நிற்கிறார் என்பது புலப்படுகிறது. அப்படிப்பட்ட அடிகளார் தெரிவித்த கருத்துக்கள் அடங்கிய இந்த நூலில் ஆழ்வாரைப்பற்றியும் கூறியிருக்கிறீர்கள், நாயன்மார்களைப்பற்றியும் சொல்லியிருக்கிறீர்கள். கீதையைப்பற்றியும் எடுத்துரைத்து இருக்கிறீர்கள்.

இவைகளெல்லாம் உள்ளடக்கிய ஒருவழியை எங்களுக்கு காட்டுங்கள் என்பதுதான் ஏழை எளிய பாமர மக்களின் சார்பிலே நான் வைக்கும் வேண்டுகோளாகும்.

காஞ்சிப்பெரியவர், ''திருப்பாவையும், திருவெண்பாவையும் ஒன்றுதான். இரண்டையும் ஒன்றாக கருதி விழா எடுங்கள்" என்று சொல்லியிருக்கிறார். இரண்டும் ஒன்றுதான் என்றால் இன்றைக்கும் அந்த வேறுபாடுகள் இருப்பானேன்? சைவ -வைணவம், வைணவத்திற்கு வடகலை-தென்கலை என்ற வேறுபாடு இருக்கத்தானே செய்கிறது? இன்றைக்கும் வேறுபாடு காரணமாக சின்னகோவிலில் கூட அடிதடி குத்து வெட்டு நடக்கத்தானே செய்கிறது.

சாதாரணமானவர்களின் பிரதிநிதி என்ற முறையில் சமுதாயத்தில் ஆமைகளாகவும் ஊமைகளாகவும் சபிக்கப்பட்டவர்களாகவும், தீண்டத்தகாதவர்களாகவும், தாய்மொழியே ஆலயத்துக்கு உள்ளே வரக்கூடாது என்று சொல்லுகின்ற மொழிக்கு சொந்தக்காரர்களாய் இருக்கின்றவர்கள் சார்பில் உங்களை நான் மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இவர்களையெல்லாம் வாழ்விக்க உயர்ந்த நிலைக்குக், கொண்டுவர ஒரு வழியை– ஒரு நெறியை நீங்கள் காட்டுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[சென்னை மயிலாப்பூர் ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் 4-5-'81 அன்று ஆற்றிய உரையிலிருந்து.

# போக்குவரத்துத் தொழிலாளர்கள்- பொது மக்களுக்குச் சலுகைகள்- மேம்பாட்டுக்கான எதிர்காலத் திட்டங்கள்!

27—4—81 அன்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் சட்டமன்றப் பேரவையில் போக்குவரத்துக் கழகங்களின் மீதான மானியக் கோரிக்கைக்குப் பதில் அளித்தபொழுது, பல்வேறு சலுகைகளையும் திட்டங்களையும் அறிவித்தார். அவற்றில் சில வற்றைத் தொகுத்து இங்கே தரப்பட்டுள்ளது.

- இரண்டு சக்கர வண்டிகள் மற்றும் கார்களுக்கான காலாண்டிற்கு ஒரு முறை வரி செலுத்தும் திட்டத்தினை ரத்து செய்து 6 மாதத்திற்கு ஒரு முறை அல்லது ஆண்டு ஒன்றுக்கு ஒரு முறை வரி வசூலித்தல்

- பின் இணைக்கப்பட்ட வண்டியுடன் (Trailers) கூடிய டிராக்டர்களுக்குச் சொந்த வேளாண்மைக் காரியத்திற்காகப் பயன்படுத்தப்பட்டாலும் அல்லது வேளாண்மை காரியத்திற்காக வாடகைக்கு விடப்பட்டாலும் தகுதிச் சான்றிதழ் புதிய வாகனங்களுக்கு 2 ஆண்டும், இதனை அடுத்து புதுப்பிக்கும்போது ஓர் ஆண்டும் ஆக மாற்றி அமைத்தல்.

- ஓட்டுனர் பயிற்சி உரிமத்தின் ( Learner's License ) செல்லுபடித்தன்மை 3 மாதக் காலத்திலிருந்து 6 மாத காலத்திற்கு நீட்டுதல். இதற்கு ஏற்றபடி கட்டணத் தொகையை அதிகப்படுத்துதல்.

- வரி ஏய்ப்பை அதிக அளவில் கண்டுபிடிக்கும் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கும், வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கும் நற்சான்றிதழ் வழங்குதல்.

- மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட மோட்டார் வண்டிகள் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள படிவங்களுக்கு ( Form ) கட்டணங்கள் வசூலித்தலை ரத்து செய்தல். இப்படிவங்கள் கட்டணம் இன்றியே இலவசமாக வழங்கப்படுதல். இதற்கான கட்டணத்தினைக் கோரப்படும் சான்றிதழ்களுக்கான கட்டணத்திலேயே கட்டுதல்.

- அரசு நிறுவனங்களால் விற்கப்பட்ட வாகனங்களுக்குப் பதிவுச் சான்று இதழ் கோரப்படும்போது வாகனங்களைக் காண்பிக்கத் தேவையில்லை.



மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

## திரு சு. முத்துசாமி

- பொதுமக்களுக்குத் தங்களது பல்வேறுபட்ட அலுவல்களின் மீது எத்தனை நாட்களுக்குள் நடவடிக்கை முடிக்கப்படும் என்பதைத் தெரிவிக்கும் வகையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் ''அறிவிப்புப் பலகைகள்'' அமைக்கப்படும்.

- ஒவ்வொரு திங்கட்கிழமையும் ''கோரிக்கை தீர்க்கும் நாளாகக்'' கடைப்பிடிக்கப்படும். பொதுமக்களின் கோரிக்கையைக் கேட்டு தக்க நிவர்த்தி அளிக்க வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் மண்டலப் போக்குவரத்துஅலுவலர்கள் திங்கட்கிழமை முற்பகல் நேரத்தில் தங்களுடைய தலைமையகத்தில் இருப்பார்கள்.

- தற்பொழுது வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 14 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு அரசு சொந்தக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- பெரிய மாவட்டங்களில் கூடுதலாக ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்தல்; எடுத்துக்காட்டாக மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல்லில் இதுபோன்ற அலுவலகம் ஒன்று துவங்கும்.

**பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்)**

- இவ்வாண்டு பெரம்பூரில் ரூபாய் 32 இலட்சம் செலவில் ஒரு புதிய பேருந்துப் பணிமனை கட்டி முடியும் நிலையில் உள்ளது. அது விரைவில் துவங்கப்படும்.

- திருவொற்றியூரில் இவ்வாண்டு 100 பேருந்துகள் தங்கும் வகையில் ஒரு புதிய பேருந்துப் பணிமனை ரூபாய் 23 இலட்சம் செலவில் கட்ட ஆரம்பிக்கப்படும்.

- இவ்வாண்டு மாதம் ஒன்றுக்கு 200 டன் உபயோகப்படுத்தியகழிவு இயந்திர எண்ணெய்யை சுத்திகரிக்கும் வகையில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ரூபாய் 20 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும். இந்நாட்டில் பொதுத் துறையில் சேரன் போக்குவரத்துக் கழகம் தான் முதல் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை ஏற்படுத்தியுள்ளது. அதற்கடுத்தபடியாக இது இரண்டாவது ஆலையாக அமையும்.

- ஓட்டுநர்களுக்கும், இயந்திரக் கம்மியர்களுக்கும் ( Mechanic ) பயிற்சி அளிப்பதற்காக குரோம்பேட்டையில் ஒரு கட்டடம் கட்டப்படும்.

- பல்லவன் போக்குவரத்துக் கழகம், (பெருநகர்) உடல் ஊனமுற்றோர்களுக்கு அதிக அளவில் வேலை கொடுத்ததற்காக இவ்வாண்டு முதற் பரிசைப் பெற்றது.

- சென்னை மாநகரில் பேருந்துகள் ஒழுங்காக ஓடுவதற்கும் விபத்து நடந்த இடங்களுக்கு விரைவில் செல்லவும் மற்றும் இரண்டு அலை வரிசைகளில் கூடுதலாக 20 கம்பியில்லாத் தந்திக் கருவிகள் அமைக்கப்படும்.

- சென்னை மாநகரில் நெரிசலைத் தவிர்க்க மேலும் 250 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு மத்திய அரசிடம் கடன் தொகை வாங்க, ஒரு உயர் மட்டக் குழு டில்லிக்கு அனுப்பப்படும்.

- ''பெண்கள் மற்றும் குழந்தைகள்'' தனிப் பேருந்து சேவைகளின் எண்ணிக்கை 246 லிருந்து 300 ஆக உயர்த்தப்படும்.

- பயணச் சீட்டுகள் அச்சடிப்பதற்காக ரூ. 40 இலட்சம் செலவில் ஓர் அச்சக இயந்திரம் அமைக்கப்படும்.

- சென்னை மாநகர் வளர்ச்சிக் கழகம், ரயில்வே மாநகராட்சி முதலியவைகளோடு கலந்தாலோசித்து, சென்ட்ரல் ஸ்டேஷனுக்கருகில், ஒரு பேருந்து நிலையம் அமைக்க முடிவெடுக்கப்படும்.

**பல்லவன் போக்குவரத்துக் கழகம் (புறநகர்)**

- புதுப்பட்டினத்தில் இரண்டு ஏக்கர் நிலத்தில் ரூபாய் 4 இலட்சம் செலவில் அனைத்து வசதிகளுடன் ஒரு புதிய பேருந்துப் பணிமனை அமைக்கப்படும்.

- மதுராந்தகத்தில் 2 ஏக்கர்பரப்பளவில், ரூபாய் 6 இலட்சம் செலவில் மற்றும் ஒரு பணிமனை கட்டப்படும்.

- திருத்தணி, காஞ்சிபுரம், திருவள்ளூர், பொன்னேரி ஆகிய இடங்களில் உள்ள தற்போதைய பட்டறைகள் ரூபாய் 16 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

- ஒரிக்கையில் உள்ள பேருந்துகளுக்கு கூண்டு கட்டும் கூடம் ரூபாய் 4 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்படும்.

- ஆண்டு ஒன்றுக்கு 10,000 டயர்களைப் புதுப்பிப்பதற்காக ஒரிக்கையில் ரூபாய் 10 இலட்சம் செலவில் ஒரு டயர் புதுப்பிக்கும் தொழிற் கூடம் கட்டப்படும்.

**பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம்**
**மதுரை**

- உசிலம்பட்டி, மதுரை-புதூர், திருமங்கலம், மேலூர், சாத்தூர், அருப்புக்கோட்டை ஆகிய

(தொடர்ச்சி 41 ஆம் பக்கம்)





# வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு



## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத் தலைவர் திரு துரை கோவிந்தராசன் பேட்டி

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வெளி மாநிலங்களிலிருந்தும், பிற நாட்டிலிருந்தும் தமிழகத்திற்கு வந்து போகிறவர்களுக்குத் தமிழகத்தினுடைய கலாச்சாரங்களைக் கண்டறியவும், அவர்களுக்கேற்றவாறு பன்னாட்டு உணவு வசதிகளைத் தயார்செய்து அவர்களைத் திருப்திப்படுத்தவும், சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்றவாறு வசதிகளை ஏற்படுத்தவும், தமிழகத்தினுடைய பழமையான இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்கவும், சிறப்புமிக்க ஆலயங்களையும், கோடை வாசஸ்தலங்களையும், சுற்றுலா மையங்களைப் பார்வையிடவும் ஏற்றவாறு பேருந்து வசதிகள் ஏற்படுத்தி சிறப்புமிக்க வகையில் பலரும் பாராட்டும் வண்ணம் நடத்தி வருகிறது. இதன் பணிகளைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் விளக்கினார்.

**தமிழ்நாட்டில் சுற்றுலாத் தலங்கள் (Tourist Centre) எங்கெங்கு இருக்கின்றன ?**

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இடங்களும், கண்கவர் இயற்கை எழுச்சியூட்டும் கோடை வாசஸ்தலங்களும், பாடல்பெற்ற புண்ணியத் தலங்களும், எழில்மிகு கடற்கரைப்பகுதிகளும், வனவிலங்கு மற்றும் பறவை சரணாலயங்களும் நிறைந்துள்ளன. எனவே குறிப்பிட்டுச் சில இடங்களைச் சுற்றுலாத்தலங்கள் என்று கூற முடியாது. எனினும், சென்னை, காஞ்சிபுரம், மாமல்லபுரம், தஞ்சை, திருச்சி, மதுரை, கன்னியாகுமரி, ராமேஸ்வரம், உதகை, கொடைக்கானல், முதுமலை, குற்றாலம், ஒகனேக்கல் ஆகிய இடங்கள் நாட்டிலுள்ள பயணிகளை மட்டுமின்றி வெளிநாட்டுப் பயணிகளையும் ஈர்க்கும் வகையில் சிறப்புற அமைந்துள்ள சில இடங்களாகும்.

**சுற்றுலா மாளிகைகள் இருக்கும் இடங்களில் உள்ள வசதிகள் பற்றி...**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள் தஞ்சை, திருச்சி, சிதம்பரம், கன்னியாகுமரி, மதுரை, இராமேஸ்வரம், உதகை, கொடைக்கானல், ஏர்க்காடு, ஒகனேக்கல், மாமல்லபுரம் ஆகிய இடங்களிலும். நெடுஞ்சாலை ஒய்வு விடுதிகள், ராணிப்பேட்டை, உளுந்தூர்ப் பேட்டை ஆகிய இடங்களிலும் இருக்கின்றன. இந்த மாளிகைகளிலும், ஒய்வு விடுதிகளிலும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான உணவு வசதிகளும் மேலும் குளிர்சாதனம் பொருத்தப்பட்டுள்ள அறைகளும் கூட்டங்கள் நடத்தும் அரங்குகளும் உள்ளன.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக கழகத்தினால் எத்தனை வகையான சுற்றுலாக்கள் எக்தெந்த நாட்களில்- நேரங்களில் அழைத்துச் செல்லப்படுகின்றன ’ அதற்கான கட்டணங்கள் எவ்வளவு ?**

1. **தமிழ்நாடு சுற்றுலா (7 நாட்கள்):**

இந்தச் சுற்றுலாவில் பயணிகள் திருச்சி, கொடைக்கானல், மதுரை, கன்னியாகுமரி, சுசீந்திரம், திருந்செந்தூர், இராமேஸ்வரம், தஞ்சாவூர், ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 6.30 மணிக்குப் புறப்படும் சுற்றுலா பேருந்து அடுத்த வெள்ளிக்கிழமை மாலை சென்னைக்குத் திரும்புகின்றது.

**கட்டண விவரம் :**

ரூபாய் 590—(இருவர் தங்கும் அறை)
ரூபாய் 660—(ஒருவர் தங்கும் அறை)

5 வயது முதல் 12 வயது முடிய உள்ள குழந்தைகளுக்குக் கட்டணம் ரூ. 490 ஆகும். 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டணம் ஏதும் இல்லை.

2. **தென்னிந்தியச் சுற்றுலா (7 நாட்கள்)**

இந்தச் சுற்றுலாவில் பயணிகள் பெங்களூர் மைசூர், சோம்நாத்பூர், சிரங்கப்பட்டினம், பிருந்தாவனம், முதுமலை, உதகை, கோவை, கொச்சி, குருவாயூர், சேலம், திருவண்ணாமலை, ஆகிய இடங்களுக்கு அழைத்துச்

பேட்டி
ஜி. ஆனந்தன்

செல்லப்படுகின்றனர். ஒவ்வொரு சனிக்கிழமை காலை 6.30 மணிக்குப் புறப்பட்டு அடுத்த வெள்ளிக்கிழமை மாலை சென்னைக்குத் திரும்புகின்றது.



**கட்டண விவரம் :**

ரூபாய் 5,90 (இருவர் தங்கும் அறை)
ரூபாய் 660 (ஒருவர் தங்கும் அறை)

5 வயது முதல் 12 வயது முடிய உள்ள குழந்தைகளுக்குக் கட்டணம் ரூ. 490 ஆகும். 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குக் கட்டணம் ஏதும் இல்லை.

மேற்கூறிய இரண்டு 7 நாள் சுற்றுலா பயணத்திற்கான கட்டணத்தில் தங்கும் வசதிக்கான கட்டணமும், பார்க்கும் இடங்களில் நுழைவுக் கட்டணமும் உள்ளடங்கும்.

3. **மாமல்லபுரம் சுற்றுலா (எல்லா நாட்களிலும்)**

காலை 6.45 மணிக்குப் புறப்பட்டு மாலை 5.30 மணிக்குத் திரும்புகின்றது. இந்தச் சுற்றுலாவில் கலந்து கொள்ளும், பயணிகள், காஞ்சீபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் ஆகிய இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

கட்டண வ்வரம் : நபர் ஒன்றுக்கு 35 ரூபாய்.

4. **சென்னை நகரச் சுற்றுலா : (எல்லா நாட்களிலும்)**

மாலை 2.00 மணிக்குப் புறப்பட்டு மாலை 6.00 மணிக்குத் திரும்புகின்றது. சென்னை நகரின் முக்கியமான சுற்றுலா மையங்களுக்குப் பயணிகள் இந்தச் சுற்றுலாவின் மூலம் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

கட்டண விவரம் : நபர் ஒன்றுக்கு 20 ரூபாய்.

5. **திருப்பதி சுற்றுலா ; (எல்லா நாட்களிலும்)**

காலை 6.00 மணிக்குப் புறப்பட்டு இரவு 7.00 மணிக்குத் திரும்புகின்றது. இந்தப் பயணத்தில் பங்கு கொள்ளும் பயணிகள் சொகுசுப் பேருந்து அல்லது குளிர் சாதன வசதி கொண்ட பேருந்தின் மூலம் திருப்பதி, திருமலை, திருச்சானூர் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

கட்டண விவரம் : நபர் ஒன்றுக்கு 120 ரூபாய் (இந்த கட்டணத்தில் திருப்பதிகோவில் சிறப்பு தரிசனத்திற்கான கட்டணம் ரூபாய் 25ம் அடங்கும்). குளிர் சாதனம் பொருத்தப் படாத சுற்றுலாப் பேருந்து மூலம் சென்று வர பயணக் கட்டணம் ரூபாய் 90 ஆகும்.

**சுற்றுலாத் துறையில் எத்தனைப் பேர் பணியாற்றுகிறார்கள்? வசதிகள் என்னென்ன கொடுக்கப்படுகிறது ? அவர்களுக்கென விசேஷத் திட்டங்கள் ஏதேனும் உண்டா ?**

சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தில் 650 பேர் பணியாற்றுகின்றனர். இவர்கள் சென்னை தலைமை அலுவலகத்திலும் போக்குவரத்துத் துறையிலும் மாநிலத்திலுள்ள எல்லா சுற்றுலா மாளிகைகளிலும், நெடுஞ்சாலை ஓய்வு விடுதிகளிலும் பணியாற்றுகின்றனர். ஊழியர்களின் நலன்களைப் பேணிக்காக்கவும், அவர்களுடைய குறைகளை அறிந்து உடனடியாக செயல்படவும், 'ஊழியர் நலக்குழு' ஒன்று அமைக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இந்தக் குழுவில் ஊழியர்களின் பிரதிநிதிகளும், அலுவலர்களும் அங்கத்தினர்களாகப் பங்கேற்றுள்ளனர்.

1978-ல்முதன் முறையாக இந்தக் கழகத்தில் 'போனஸ்' வழங்கப்பட்டு அது நீடித்து வருகின்றது. மேலும், ஊழியர்களுக்கு உற்பத்தித் திறனை அடிப்படையாகக்கொண்ட 'ஊக்க போனஸ்' அளிக்கப்படுகிறது.

31-3-1980 முதல் 'எம்பிளாய்ஸ்கிராஜுடி டிரஸ்ட்' உருவாக்கப்பட்டுள்ளது. சுற்றுலா மாளிகைகள் மற்றும் ஓய்வு விடுதிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வீட்டு வசதிசெய்து கொடுக்கத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு பல கட்டங்களாக அது நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

ஊழியர்களுக்கான சம்பள விகிதங்களை மாற்றி அமைக்கவும் மற்றும் பல சலுகைகள் வழங்கவும் நிறுவனத்தின் நிதி நிலையைக்கருத்தில் கொண்டு பரிந்துரை செய்ய தனிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஊழியர்களுக்கு ஊதிய விகிதத்தை மாற்றியமைத்து, மற்றும் பல சலுகைகளையும் அளித்திருக்கிறோம்.

**தனியார் சுற்றுலா—அரசு நடத்தும் சுற்றுலா இவைகளுக்குள்ள வேறுபாடுகள் என்னென்ன? நன்மை தீமை என்னென்ன?**

ஒரு சுற்றுலாவின் சிறப்பு அது தனியார் நடத்துவதா அரசு நடத்துவதா என்பதைப் பொறுத்தது அல்ல. சுற்றுலா நடத்துவதற்கான தகுதியும் மற்ற அடிப்படை வசதிகள் அளிக்கும் திறனையும் பொறுத்தது. அரசு நிறுவனம் நடத்தும் சுற்றுலாவில் தகுந்த பாதுகாப்பு அளிப்பது மட்டுமின்றி சொந்த விடுதிகளில் பயணிகளைத் தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ப சுவையான உணவு வசதியும் அளிக்கிறது. பல வசதிகளுடன் சிக்கனமாகப் பல இடங்களைக் கண்டு களிக்க ஏற்பாடு செய்கிறது.

**சுற்றுலா சம்பந்தப்பட்ட புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா ?**

தற்பொழுதுதமிழ்நாடுசுற்றுலாவளர்ச்சிக் கழகம் பதினைந்து சொகுசுப் பேருந்துகளைப் பயன்படுத்துகின்றது. அவற்றில் ஒன்று குளிர் சாதன வசதியுடன் கூடியது. இன்னும் சில மாதங்களில் இந்த பேருந்துகளின் எண்ணிக்கை பதினேழாக உயரும். இவைகளில் இரண்டு புதிய குளிர்சாதன வசதிகள். கூடிய பேருந்துகளும் மற்றும் சிறிய அளவிலான இரண்டு பேருந்துகளும் இருக்கும். இந்த பேருந்துகளின் மூலம் புதிய சுற்றுலாக்கள் நடத்துவதோடு பேருந்துகளை வாடகைக்கு விடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கழகம் 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதுரையில் மூன்று நட்சத்திர ஓட்டல் ஒன்றினைக்கட்டி நடத்திவருகின்றது. மேலும் ரூபாய் 35 லட்சம் மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் புதிய சுற்றுலா மாளிகை ஒன்று கட்டும் பணியைத் தொடங்கி அது முடியும் தருவாயில் உள்ளது. மாமல்லபுரத்தில் சுமார் 38 லட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகள்கொண்ட முப்பது புதிய குடில்களைக் கட்டும் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. புதுக்கோட்டையிலும், முதுமலையிலும் சுற்றுலா மாளிகை கட்டும் திட்டம் ஒன்றை இந்தக் கழகம் கருத்தில் கொண்டுள்ளது. கிருஷ்ணகிரியில் சுமார் 7.5 லட்சம் ரூபாய் செலவில் 'நெடுஞ்சாலை ஓய்வு விடுதி' ஒன்றினைக் கட்டும் பணியைத்தொடங்கியுள்ளது.

சமீபகாலச் சுற்றுலா முக்கியத்துவம் அடைந்துள்ள பிச்சாவரத்தில் 9.5 லட்சம் ரூபாய் செலவில் ஒரு சுற்றுலா மாளிகை கட்டும் பணியைத் தொடங்கியுள்ளது.

உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு ஒகனேக்கல் ஆகிய இடங்களில் சுற்றுலாபயணிகளுக்குக் குறைந்தவாடகையில் தங்கும் வசதி ஏற்பாடு செய்யும் நோக்குடன் 'பலர் தங்கு அறைகள்' கொண்ட சுற்றுலா விடுதி ஒன்றினை ஒவ்வொரு இடத்திலும் சுமார் மூன்று லட்சம் ரூபாய் செலவில் கட்டும்பணி துவக்கப்பட்டு அது முடியும் தருவாயில் உள்ளது.

பெருகிவரும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைக் கருத்தில் கொண்டு மண்டபத்தில் 'படகுக்குழாம்' ஒன்றும், குறைந்த வாடகையில் பலர் தங்கும் அறைகள் கொண்ட சுற்றுலா விடுதி ஒன்றையும் அமைக்கும் பணி சுமார் மூன்று லட்சம் ரூபாய் செலவில் ஆரம்பித்து அது முடிவடையும் தருவாயில் உள்ளது.

புண்ணியத் தலமான இராமேசுவரத்திற்கு வரும் யாத்திரீகர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் தேவைகளை உணர்ந்து அவர்கள் குளிப்பதற்கு வசதியாக 'குளியல் பகுதி' ஒன்றையும் ஆடை மாற்றும் அறைகள் நிறைந்த பகுதி ஒன்றினையும் சுமார் மூன்று லட்சம் செலவில் கட்டும் பணி துவக்கப்பட்டு அது முடிவடையும் தருவாயில் உள்ளது.

தமிழ்நாட்டிலேயே சிறந்த சுற்றுலா மையமாக விளங்கும் மாமல்லபுரம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சுமார் 9.25 லட்சம் ரூபாய் செலவில் ஒரு 'கூடார அமைப்புப் பகுதியும்' 'கடைகள் பிரிவும்' அமைக்கும் திட்டமும், சுமார் 9.5 லட்சம் ரூபாய் செலவில் ஒரு 'திறந்தவெளி கலைக்கூடம்' அமைக்கும் திட்டமும் உள்ளது. உதகமண்டல மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், சிறுவர்களுக்கான புகைவண்டி வாங்கவும், அதற்கான பாதைகள் அமைக்கவும், குழந்தைகள் பூங்கா அமைக்கவும், மற்றும் உதகை படகுக் குழாம் மேம்பாட்டிற்காகவும் சுமார் 20 லட்சம் ரூபாய் செலவல் ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

புண்ணியத்தலமான திருத்தணியில் சுமார் 7.5 லட்சம் மதிப்பீட்டில் ஒரு 'நெடுஞ்சாலை ஓய்வு விடுதியும்' சுமார் 20 லட்சம் ரூபாய் செலவில் காஞ்சீபுரத்தில் ஒரு ''சுற்றுலா விடுதி'' கட்டும் திட்டமும் உள்ளது. கோடை வாசஸ்தலங்களான உதகை, ஏர்க்காடு ஆகிய இடங்களில் 'டெலஸ்கோப் கூடம்' அமைப்பதற்காக சுமார் ரூ. 1.10 இலட்சம் சராசரி மதிப்பீட்டில் ஒரு திட்டம் உள்ளது.

**சுற்றுலாவுக்கெனத் தனி விமானம் வாங்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? அது பற்றித் தங்கள் கருத்து என்ன?**

சுற்றுலாவுக்கெனத் தனி விமானம் வாங்கும் செயற்குறிப்பு ஏதும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் தற்போது இல்லை. மத்திய அரசு சென்னையிலிருந்து மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் போன்ற பகுதிகளுக்கு விமானங்களை அமைத்து உள்நாட்டுப் பயணிகள் செல்ல ஏற்பாடு செய்திருக்கிறது.

**தாங்கள் அண்மையில் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்துள்ளீர்கள். தங்களின் இந்தப் பயணம் எந்த வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்குப் பயனளிக்கும்?**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சுற்றுலாக்கள் நம்நாட்டில் பல பகுதிகளில் மட்டுமின்றி வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து வரும் பயணிகளை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன. மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் நாங்கள் நடத்தும் சுற்றுலாக்களில் பங்கேற்க அந்த நாடுகளில் வசதி செய்து தரவேண்டிய அவசியத்தை உணர்ந்து அங்கு எங்கள் ஏஜண்டுகளை நியமித்துள்ளோம். எங்களுடன் ஏஜெண்டு ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக நானும், எங்கள் நிர்வாக இயக்குநர் திரு. ஜே. ஆர். இராமநாதன் அவர்களும் கடந்த பிப்ரவரி—மார்ச் திங்களில் மலேசியா, சிங்கப்பூர் நாடுகளுக்குச் சென்று வந்தோம். இந்த ஏஜண்டுகள் நியமனத்தினால், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அளிக்கும் சுற்றுலாக்களிலும், நடத்தி வரும் விடுதிகளிலும் இந்த நாடுகளிலிருந்து வரும் பயணிகள் பெருமளவில் பயன்படுத்துகிறார்கள் என நம்பலாம்.

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் ''சுற்றுலா'' ஓர் சிறந்த தொழிலாகவும், மக்களிடையே ஒருமைப்பாட்டு எண்ணத்தை உருவாக்கும் கருவியாகவும் கருதப்படுகிறது. அரசாங்கத்துடன் மக்களும் சுற்றுலா வளர்ச்சிக்காக அவர்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். அதே முறையில் தமிழகத்திலும் அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகும் என்று நம்பலாம்.



# கன்னியாகுமரி மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்


அ. பன்னா செல்வம்
செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், நாகர்கோவில்


சீரற்ற கால நிலையினால் இம்மாவட்டத்தில் ஏற்பட்ட 1980-81ம் ஆண்டில் தண்ணீர்த் தட்டுப்பாட்டினை நீக்கும் பொருட்டும், தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாமல் பாதுகாக்கும் பொருட்டும் பொதுக் குடிதண்ணீர்க் கிணறுகளை ஆழப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் பேரில் தமிழ்நாடு அரசு உடனடியாக ரூ. 10 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்தது. அந்நிதியிலிருந்து 177 குடிதண்ணீர்க்கிணறுகளை ஆழப்படுத்தவும், 13 மேல் நிலைக் குடிதண்ணீர்த் தொட்டிகளில் பழுதுப்பட்டுள்ள குழாய்களைப் பழுது பார்க்கவும் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர் வழி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தவிரவும் முட்டம், வாணியக்குடி, தளியக்காவிளை, கருங்கல் ஆகிய இடங்களில் லாரிகள் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள குளங்களில் 50 ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டு நிலங்களைக் கொண்ட சிறு பாசனக் குளங்கள், பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள் பாசனக் கால்வாய்கள் ஆகியவற்றல் பழுதேற்பட்டுள்ள குளங்களைப் பழுது பார்க்கவும், அக்குளங்களின் பராமரிப்பிற்காகவும் ரூ 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணி பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடுத்த பருவ மழைக்குள் இப்பணியை முடிக்க பொதுப்பணித்துறை செயற்பொறியாளருக்கு மாவட்ட ஆட்சியரால் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலுள்ளதும் 50 ஏக்கருக்கு குறைந்த ஆயக்கட்டு நிலங்களையுடையதுமான 92 சிறு பாசன குளங்களைப் பழுதுபார்க்கவும், அவைகளைப் பராமரிக்கவும், ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைக்குள் புதிய சாலைகள் அமைக்கவும், சாலைகளை விரிவுபடுத்தவும், திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வேலைகள் வறட்சி நிவாரணப் பணிக்கென திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத்திற்கென நியமிக்கப்பட்டு இருக்கும் நெடுஞ்சாலைக் கோட்டப்பொறியரின் மேற்பார்வையில் நடைபெறும். 21 துளைக்கிணறுகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், மாநில நெடுஞ்சாலைகள் மாவட்டச் சாலைகள், முதலியவற்றினை ரூ. 10 இலட்சம் செலவில் பழுது பார்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அரசு ஆணை கிடைத்தவுடன் இவ்வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

மேற்கொள்ளப்பட்டுள்ள வறட்சி நிவாரணப்பணிகளைப் பார்வையிடவும் பணிகளை விரைவாக முடித்திடும் பொருட்டு தக்க நடவடிக்கைகள் எடுக்கவும், பத்மனாபபுரம் துணை ஆட்சியர், நாகர்கோவில் கோட்டாட்சியர், நாகர்கோவில் மற்றும் பத்மனாபபுரம் கோட்ட வளர்ச்சி அலுவலர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர், மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரணப்பணிகள், செம்மையாகவும் விரைவாகவும் நடைபெறும் பொருட்டு பொதுமக்களின், பிரதிநிதிகளுக்கு தங்களுடைய மேலான பரிந்துரைகளை அரசுக்கு அளித்திட வாய்ப்பினை நல்கும் நோக்குடன், அரசின் ஆணைப்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய மாவட்டக்குழு ஒன்றும், அந்தந்த தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உட்பட பொதுமக்களின் பிரதிநிதிகள் அடங்கிய வட்டக்குழு ஒவ்வொன்றும் தாலுகாவிலும் மாவட்ட ஆட்சியரால் அமைக்கப்பட்டுள்ளன.

## நீர்மேலாண்மைத் திட்டம்

வேளாண்மைத் துறையினரால் செயல்படுத்தப்பட்டுள்ள நீர் மேலாண்மைத் திட்டத்தையும், அதனால் பெறும் நன்மைகளையும் பற்றி அலுவலர்களுடனும், விவசாயிகளுடனும் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கல்லம்பட்டி மற்றும் சிட்டம்பட்டி பகுதிகளில் நடைபெற்று வந்த நீர் மேலாண்மைத் திட்டத்தைப் பார்வையிட்டு மற்ற மாவட்டங்களிலும் இதைப் பயன்படுத்த வேண்டிய சாத்தியக்கூறுகள் பற்றிக் கலந்தாலோசித்தார்.

நீர் மேலாண்மைத் திட்டத்தால் கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தில் சுமார் 1187 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர்.

இம்முறையைக் கையாளுவதால் 17 முதல் 39 விழுக்காடுகள் வரை அதிக மகசூல் கிடைப்பதுடன் நீரின் தேவையும் கணிசமாகக் குறைகிறது.

# அரசு திரைப்படம் - தொலைக்காட்சி

## பயிற்சி நிலையம் -

# நிறுவன நாள் விழா

அரசு திரைப்படம்-தொலைக் காட்சி பயிற்சி நிலையத்தின் சார் பில் 13-5-81 அன்று நடைபெற்ற நிறுவனநாள் விழாவில் மாண்பு மிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர் எம். வீரப்பன் அவர்கள் பங்கேற்றார்.

தொகுப்பு: பி.எல்.ராஜேந்திரன்

திரைப்படத்துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்றவரான திரு. எல். வி. பிரசாத், நடிகை செல்வி ஸ்ரீபிரியா, நடிகர் திரு. சிவகுமார் இயக்குநர் திரு. துரை, காவல் துறைஆணையாளர் திரு. ஸ்ரீபால், அனைத்திந்திய வானொலி நிலை யத்தைச் சேர்ந்த திரு வி. சந்திர மௌலி, தொலைக்காட்சி நிலை யத்தைச் சேர்ந்த திரு. ஆர். மகாதேவன், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. கே. ஏ. சுந்தரம் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு பயிற் சிக் கல்லூரி மாணவ மாணவி களுக்கு வாழ்த்துக்களும், அறி வுரைகளும் வழங்கினார்கள்.

இந்தியாவிலேயே, கடந்த ஆண்டில் தமிழில் சிறந்த மாநில மொழிப் படமாகத் தேர்ந்தெடுக் கப்பட்ட 'நெஞ்சத்தைக் கிள் ளாதே' திரைப்படத்தின் இயக்குநர் திரு. மகேந்திரன், இந்தியாவிலேயே சிறந்த ஒளிப் பதிவாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட திரு அசோக்குமார், ஆகி யோருக்கும் - இந்தியாவிலேயே சிறந்த படங்களில் இரண்டாவ தாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 'ஓப்போள்' என்ற மலையாளப் படத்தை இயக்கிய திரு. கே. எஸ். சேதுமாதவனுக்கும் - பாராட்டு களும் பரிசுகளும் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர் களால் வழங்கப்பட்டன.

திரைப்படக் கல்லூரியின் 'தமிழ்மன்றத்'தால் நடத்தப் பெற்ற-நடிப்புப் போட்டி, கட்டு ரைப் போட்டி, கவிதைப்போட்டி, பேச்சுப் போட்டி போன்றவை களில் வெற்றி பெற்றவர்களுக் குத் திரைப்பட நடிகை செல்வி ஸ்ரீபிரியா அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வர்களுக்குச் செய்தித்துறை இயக்குநர் திரு. கே. ஏ. சுந்தரம் அவர்கள் பரிசுகள் அளித்தார்.

**விழாத் தொடக்கம் :**

தமிழ்த்தாய் வாழ்த்தோடு தொடங்கிய இவ்விழாவில் திரைப் படக் கல்லூரி மாணவர்களின் சார்பில் திரு. ராஜமன்னன் வர வேற்புரையாற்றினார்.



தமிழ்நாடு அரசு திரைப் படம் மற்றும் தொலைக் காட்சி பயிற்சி நிலையத்தின் தலைவர் என்ற முறையில் வர வேற்புரை ஆற்றிய திரு. ப. நீல கண்டன் அவர்கள் தன்னுடைய வரவேற்புரையில் குறிப்பிட்ட தாவது :



இந்தியாவிலேயே முதன் முதல் துவக்கப்பட்ட திரைப்படக் கல் லூரி இதுதான். பிடித்த படத் தைக் கழுவும்' பிராஸசிங் பயிற்சி 'இந்தியாவிலேயே இங்குதான் சொல்லித் தரப்படுகிறது. இங்கே நான்கு மொழிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. வெளி மாநிலத்திலிருந்து ஒரு மாணவ ரும், வெளிநாட்டிலிருந்து ஒரு மாணவரும் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். இக் கல்லூரியில் சிறந்த முறையில் கலர் லேபரட் டரி துவக்கவும், வெளிப்புறப் படப்பிடிப்புகளுக்கான விசேஷ சாதனங்கள் பல வாங்கவும், அரசு உத்தேசித்திருக்கிறது. ஆகவே விரைவில் எங்கள் கல்லூரி யானது லண்டன், பாரீஸ், பிராக் நகரிலுள்ள திரைப்படப் பயிற்சிக் கல்லூரிகளுக்கு இணையாகத் திகழும் என்பது உறுதி!

**ஸ்ரீபால் :**

சென்ன நகர காவலதுறை





ஆணையாளர் திரு. ஸ்ரீபால் அவர்கள் பேசியதாவது :

காவல் துறையானது, சட்டம்-ஒழுங்கை நிலை நிறுத்துவது.



குற்றம் நடக்காமல் பார்த்துக் கொள்ளுவது, நடந்த குற்றங்களைக் கண்டுபிடிப்பது, போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது ஆகிய நான்கு வழிகளில் செயல்பட்டு வருகிறது. உலகின் மிக வலிவான சாதனமான திரைப் படங்களின் மூலம் அவைகளின் முக்கியம் பற்றி மக்களுக்கு உணர்த்தினால் நல்ல பலன் ஏற்படக்கூடும். அந்த வகையில் படம் பிடிக்க எந்த வகையில் உதவவும் எங்கள் காவல்துறை காத்திருக்கிறது.

சிவகுமார் :

நடிகர் சிவகுமார் அவர்கள் பேச்சு விவரம் வருமாறு :

நான் இந்தக் கல்லூரியிலே படித்தவன் இல்லை என்றாலும், இக்கல்லூரி மாணவர்களின் இறுதி ஆண்டுத் தேர்வுக்காக ஒரு படத்தில் நடித்துக் கொடுத்திருக்கிறேன். திரைப்படத்தில் நடிக்க யாராவது வந்தால் திரைப்படக் கல்லூரியில் சேருங்கள்-நாடகத்தில் நடித்துப் பயிற்சி பெறுங்கள் என்றெல்லாம் சொல்லுவது என் வழக்கம். அடிப்படையை இங்கே கற்றுக் கொண்டால் அங்கே சிரமம் இருக்காது. மற்றவர்களிடம் பண்போடும் அடக்கத்தோடும் பழகவும் இங்கேயே நீங்கள் கற்றுக் கொள்ளுவது அவசியம். மற்றவர்களை மதிக்க இப்போதே நீங்கள் கற்றுக் கொண்



டால்தான், எதிர் காலத்தில் மற்றவர்கள் உங்களை மதிக்கிற நிலை ஏற்படும் என்று கூறி உங்களை மனமார வாழ்த்துகிறேன்.

சந்திரமௌலி :

அனைத்திந்திய வானொலி நிலையத் துணை இயக்குநர் திரு. வி. சந்திர மௌலி அவர்கள் பேசியதாவது :

தமிழகத்தில் -கலையும் வாழ்வும் என்றும் இணைந்தே வாழும்



இரட்டைக் குழந்தைகளாக இருந்து வருகின்றன. திரைப் படங்களைச் சமுதாய மாற்றத்திற்கு ஏற்றதாக உருவாக்க நீங்களெல்லாம் இப்போதே பயிற்சி பெற வேண்டும். உங்களைப் போன்ற இளைஞர்களோடு இணைந்து செயல்பட எங்கள் வானொலி நிலையம் காத்திருக்கிறது.

மகாதேவன் :

தொலைக் காட்சி நிலையத்திலிருந்து வருகை தந்திருந்த திரு



ஆர். மகாதேவன் அவர்கள் பேச்சு விவரமாவது :

வாய்ப்புகளைத் தேடிப் பிடிக்கிறவர்கள்தான் வாழ்க்கையில் முன்னேற முடியுமே தவிர, வாய்ப்பு நம்மைத் தேடிவரும் என்று காத்திருக்கக் கூடாது. உங்களில் திறமையாளர்களுக்கெல்லாம் எங்கள் தொலைக் காட்சி நிலையக் கதவுகளானது திறந்தே இருக்கின்றன.

துரை :

திரைப்பட இயக்குநர், திரு. துரை அவர்கள் பேசியதாவது :

இந்தக் கல்லூரியில் பயிற்சி பெறுகிறவர்களுக்கு நல்ல எதிர்



காலம் உண்டு. எதைப் பற்றியும் 'டெக்னிகலா'கப் பயிற்சி பெறுகிற நீங்கள் 'பிராக்டிகலாக'வும் நிறையத் தெரிந்து கொள்ள வேண்டும்.

எல்.வி. பிரசாத் :

திரைப்படத் துறையில் நிறைந்த அனுபவம் பெற்றவரான திரு. எல். வி. பிரசாத்




அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

திரைப் படக் கல்லூரியில் பயிற்சி பெறும் இளைஞர்களிடையே கலந்துரையாடுவதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இன்று இந்த நாட்டின் முதலமைச்சராக இருக்கிற மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களும், செய்தித்துறை அமைச்சராக உள்ள மாண்புமிகு ஆர்.எம். வீ. அவர்களும் திரைப்படத் துறையின் உயிரும் உடலுமாக இருந்தவர்கள்தான். திரைப்படத்துறையானது அரசியலோடு சட்டத்தோடு, சமுதாயத்தோடு, வாழ்வோடு ஒன்றிக் கலந்திருக்கும் ஒன்றாகும். இப்படிப்பட்ட கல்லூரிகளில் திரைப்படத் தொழில் நுணுக்க வல்லுநர்கள் பலர் உருவாக வேண்டும். அது உங்களுக்கு மட்டுமல்ல. இக்கல்லூரிக்கும் பெருமை சேர்ப்பதாக இருக்கும். வயது முதிர்ந்தவன் என்ற முறையில் - இளம் பயிற்சியாளர்களாகிய நீங்களெல்லாம் நல்ல பல திறமைகளைப் பெற்று திரைப்படத் துறையில் தமிழகம் தலை நிமிர்ந்த புகழ் பெறச் செய்யுங்கள் என்று வாழ்த்துகிறேன்.

**செய்தித் துறை இயக்குநர் :**

செய்தித்துறை இயக்குநர் திரு. கே. ஏ. சுந்தரம் அவர்கள்



பேசுகையில் தெரிவித்த கருத்துக்களாவன :

உலகமே ஒரு நாடக மேடை; அதில் நாமெல்லாம் நடிகர்கள் என்றார் ஓர் உலக மகாகவி. அதன்படி நாம் ஒவ்வொருவரும் நடிகர்களே ஆனாலும்— அந்த வகையில் திறமை உடையவர்களை மேலும் சுடர் விட்டுப் பிரகாசிக்கச் செய்வதே திரைப் படக் கல்லூரியின் நோக்கங்களில் ஒன்று. இதன் புகழ் ஓங்கச் செய்ய என்னோடு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

**அமைச்சர் உரை :**

மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர், திரு. ஆர். எம். வீரப்பன் அவர்களின் உரை விவரம் வருமாறு :

இங்கே பயிலுகின்ற மாணவர்கள், இவ்விழாவிலே பரிசு பெற்றவர்களைப் போல வர வேண்டும் என்கிற லட்சிய நோக்கோடு வளர வேண்டும். அவர்களைப் போல வளர வேண்டும் என்று எண்ணலாமே தவிர, நான் அவரைவிட •நன்றாகச் செய்வேன்-அவர் என்ன செய்து விட்டார் என்கிற எண்ணம் வரக் கூடாது.



உங்கள் முன்னே அடக்கமாக அமர்ந்திருக்கிற எல். வி. பிரசாத் அவர்கள், திரைப்படத் துறையின் எல்லா ஆற்றல்களையும் பெற்றவர் ஆவார். அவர்களும் இங்கே பரிசு பெற்ற சேதுமாதவன் அவர்களும் இப்படி எந்தக் கல்லூரியிலும் படித்தவர்களல்ல. அனுபவத்தின் மூலம் தான் இவர்கள் இன்றைய தினம் இவ்வளவு சிறந்து விளங்குகிறார்கள். அவர்கள் அடியொற்றித்தான் இங்கே உங்கள் பயிற்சி அமைந்திருக்கிறது.

பால் இல்லாமல் தயிரோ, மோரோ, வெண்ணெயோ, நெய்யோ இல்லை. அந்த வகையில் அனுபவமே மிகவும் முக்கியமாகும் என்பதை நீங்களெல்லாம் உணர வேண்டும்.

ஒரு திரைப்பட நடிகர் ஒரு நாட்டையே நிர்வகிக்க முடியும் என்கிற உண்மைச் சம்பவம் உலகிலேயே முதன் முதலில் தமிழ் நாட்டிலேதான் நடந்தது. பிறகுதான் அமெரிக்காவில் நடந்திருக்கிறது.

இன்றைய தினம் இந்தத் திரைப்படத்துறையிலே வளர்ந்து வருகிறவர்கள் சில புதிய உத்திகளைக் கையாண்டு பெருமை அடைகிறார்கள். பழைய உத்திகளெல்லாம் பழங்கதையாக, புதிய முறைகளைப் புகுத்துகிறவர்களை நிச்சயம் நாடு பாராட்டும்.

உலகிலேயே வலுவான சாதனம் திரைப் படம்தான் என்று இங்கே கூறப்பட்டது. அப்படிப்பட்ட துறையிலே பயிற்சி பெறுகிறோம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.



புதிய 'தீம்' என்ற பெயரில் சில இழிவான கேவலமான சம்பவங்கள், பார்க்கிறவர்களின் மனத்தைக் கெடுக்கும் காட்சிகள் திரைப்படங்களில் இடம் பெறச் செய்வது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். அப்படியானால் உபதேசம் செய்யச் சொல்கிறீர்களா என்றால், நீங்கள் உபதேசம் பண்ணவும் வேண்டாம், ஊரைக் கெடுக்கவும் வேண்டாம். உங்களில் யாராவது செய்கிற தவறு, திரைப்படத் துறையையே கேவலமாகப் பேசக் கூடிய நிலையை உண்டாக்கி விடும் என்பதை மட்டும் நினைவில் வையுங்கள்.

திரைப்படங்களின் மூலம் நல்ல கருத்துக்களை நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும்.

120 படங்களுக்கு மேல் நடித்த நம்முடைய முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு படத்திலாவது சிகரெட் பிடிப்பது போலவோ, மது அருந்துவது போலவோ நடித்தது இல்லை. அப்படி முடியுமா என்றால் அவரால் முடிந்தது. அதனால்தான் அவரால் புரட்சித் தலைவராக முடிந்தது. இந்த நாட்டின் முதலமைச்சராக முடிந்தது. அது எல்லோராலும் முடியாது. பல பேர் முயன்று தோற்றிருக்கிறார்கள்.

சில திரைப்படங்களில் காவல் துறை மிகவும் கீழ்த்தரமாகச் சித்திரிக்கப்படுகிறது. இந்த நிலை மாற வேண்டும். அப்படிப்பட்ட படங்களை சென்சார் போர்டில் எப்படி அனுமதிக்கிறார்களோ புரியவில்லை. அது போன்ற படங்கள் வருமானால் காவல் துறை அதிகாரிகள் தங்கள் கண்டனத்தை மாநில அரசு மூலம் மத்திய அரசுக்கு-சென்சார் போர்டுக்குத் தெரிவிக்க முன்வர வேண்டும். 1975ல் நாங்கள் தயாரித்த 'இதயக்கனி' படத்தில், காவல்துறையின் வலிமையை எடுத்துக் காட்டினோம். அவ்வாறு காவல்துறைக்கு உரிய மரியாதை திரைப்படங்கள் மூலம் தரப்பட வேண்டும். காவல் துறையின் பணிகள் விளக்கப்பட வேண்டும்.

## அட்டையில்...

தமிழ்நாடு அரசு திரைப்படம் - தொலைக்காட்சி பயிற்சிக் கல்லூரியில்—திரைப்படத் தொழில் நுணுக்கப் பிரிவின் இறுதியாண்டு மாணவியான செல்வி சுகாசினி

## திரைப்பட, தொலைக் காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனம்

1948 ஆம் ஆண்டில் திரைப்படத் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனம் தொடங்கப்பட்டு கணிசமான வளர்ச்சி பெற்று வந்துள்ளது. திரைப்படத் தயாரிப்பு தொலைக்காட்சி சம்பந்தப்பட்ட எல்லாப் பிரிவுகளிலும் பயிற்சி அளித்து தேர்வு நடத்தி, வெற்றி பெற்றோர்க்குச் சான்றிதழ் வழங்குவதுடன், திரைப்படத்திற்குள்ள ஆற்றலை மக்களுக்கு உணர்த்துதல், திரைப்படத் தொழில் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல் ஆகியவை இந்நிறுவனத்தின் குறிக்கோளாகும். அரசு அலுவலர்களையும் திரைப்படத் தொழில் தொடர்புடைய அரசுச் சார்பற்ற தொழில் நுட்ப வல்லுநர்களையும் கொண்ட ஆலோசனைக்குழு ஒன்று, இந்நிறுவனத்தின் மேம்பாட்டுக்கான ஆலோசனைகளை நல்குகிறது. படப்பிடிப்பு, ஒலிப்பதிவு படச்சுருள் கழுவுதல், திரைப்படம் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல், படத்தொகுப்பு, நடிப்பு, தொலைக்காட்சி இயக்குதல் ஆகியவற்றில் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் ரூ. 3 இலட்சத்தில் படச்சுருள் கழுவும் கருவிகள் மற்றும் படப்பிரதிகள் எடுக்கும் கருவிகள் வாங்குவதற்கும், ரூபாய் 3.5 இலட்சத்தில் வெளிப்புறப் படப்பிடிப்புக்குரிய வண்டி வாங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

படப்பிடிப்புத் தளங்களும், திரைப்படத் தொழில்நுட்பக் கல்லூரியிலுள்ள சாதனங்களும், விரும்புகின்ற தனிப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. இதனால் வருமானம் ஓரளவு கிடைப்பதுடன் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள புகழ் பெற்ற தொழில் நுட்பப் பணியாளர்களின் ஆற்றலை நேரில் கண்டு அவர்களோடு பணிபுரிய மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பாகவும் அமைகிறது. படப்பிடிப்புத் தளங்களை தனிப்பட்ட தயாரிப்பாளர்கள் முழுவதும் பயன்படுத்தத் தக்க விதத்தில் படத்தயாரிப்பாளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளைப் பெருக்கிட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமைதியும், அடக்கமும், சிந்தித்து அறியும் ஆற்றலும், பொறுமையும் இப்படிப்பட்ட கல்லூரிகளில் பயிலுகின்ற மாணவர்களுக்கு அவசியம்.

இங்கே கற்றுத்தரப்படுகின்ற பல பிரிவுகளிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். விரைவிலேயே அரசு அதுபற்றி நல்ல முடிவெடுக்கும்.

இந்தியாவிலேயே தலை சிறந்த நிறுவனமாக இதை ஆக்கும் முயற்சியில் நிச்சயம் தமிழக அரசு ஈடுபடும் என்ற உறுதியினைக் கூறி—இங்கே பயிலும் மாணவ மாணவிகளின் எதிர்காலம் எந்தவித பயமும் இல்லாமல் சிறக்க வேண்டும் - அவர்கள் தொண்டு இந்தச் சமுதாயத்திற்குக் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் பேசினார்,



திரைப்படத் தொழில் நுணுக்கப் பிரிவு மாணவியும் நடிகையுமான செல்வி சுகாசினி நன்றி கூறினார்.

இவர் கதாநாயகியாக நடித்த 'நெஞ்சத்தைக்கிள்ளாதே' என்ற திரைப்படம் தேசிய அளவில் இரு பரிசுகளையும், மாநில அளவில் சிறந்த தமிழ்ப் படத்திற்கான பரிசையும் பெற்றது.

விழா முடிந்த பின் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

# பெருகிடும் மீன்வளம் (மதுரை மாவட்டம்)



பாலிதீன் பைகளில் ஆக்ஸிஜன் வாயு நிரப்பப்பட்டு அதில் மீன்குஞ்சுகளை வைத்து அனுப்பப்படுகின்றன.

டி. பீ. எஸ். சுந்தரநாதன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை.

கடலில் மிகுந்து காணும் மீன் வளத்தை உள்நாட்டு நீர்நிலைகளிலும் பெருக்கிடும் முயற்சியினை அரசின் மீன்வளத்துறை ஏற்றுக்கொண்டு, அதன் தொடர்பாக உற்பத்தி பெருகி வருகின்ற பாங்கினை நாம் கண்டு வருகின்றோம். தமிழகத்தில் நீர்வளம் மிக்க மாவட்டமாகத் தஞ்சைக்கு அடுத்தபடியாக மதுரை மாவட்டம் இயங்குதலைக் காண்கிறோம். இம்மாவட்டத்துல் பல ஏரி நீர்த்தேக்கங்கள், சிறு குளங்கள், பெரிய நீர்ப்பாசனக் கண்மாய்கள், வைகை நதி மற்றும் பல சிறு நதிகள், கோவில் குளங்கள் முதலியன மிகுந்துள்ளன. சுமார் 55,000 எக்டேர் நீர் நிலைகளும், 35,000 எக்டேர் நீர் ஓடைகளும் மதுரை மாவட்டத்தில் உள்ளன. இவற்றில் பெரும்பகுதி மீன் வளர்ப்பிற்குப் பயன்படுத்தப்படாமல் உள்ளன. கடல் மீன்களைத் தேவையான அளவு பெற்றிட வாய்ப்பில்லாத இம்மாவட்ட மக்களை உள்நாட்டிலேயே இதுபோன்ற பெருகிக் காணும் நீர்நிலைகளில், மீன் பெருக்கிடும் நோக்கோடு மீன் வளத்துறை ஈடுபட்டுள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள பெரிய நீர்த்தேக்கங்களை மீன்துறையே எடுத்து மீன்வளர்ப்பு செய்து அப்பகுதி மக்களுக்கு மீன் உணவு கிடைக்க வழிசெய்கிறது. அதே போன்று சில அரசுடைமையாக்கப்பட்ட கண்மாய்களிலும் இத்துறையால் நேரடியாக மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது. இரண்டாவதாக, பொது மக்களுக்கு மீன்வளர்ப்பு முறைகளையும் விளக்கும் பொருட்டு மாவட்டத்திலுள்ள சில குளங்களை இத்துறை எடுத்து மீன் வளர்ப்பு செய்து வருகின்றது. மூன்றாவதாக, மீன்வளர்ப்பிற்குத் தேவையான உயர்ரக மீன்குஞ்சுகளைத் தூண்டுதல் முறை மூலம் விஞ்ஞான ரீதியாக அதிக அளவில் உற்பத்தி செய்து மாவட்டத்திலுள்ள, மீன்வளர்ப்புக்கு ஏற்ற நீர்நிலைகளில் இருப்புச்செய்து மீன்வளத்தைப் பெருக்க பாடுபடுகிறது.

மீன்வளர்ப்பில் ஈடுபாடு கொண்ட தனியாருக்கு குறைந்த விலையில் உயர்ரக மீன்குஞ்சுகளை வழங்கி மீன் வளர்ப்பில் பயனை அவர்கள் பெற இத்துறை உதவி செய்கிறது. மாவட்டத்திலுள்ள, மீன் வளர்ப்பில் ஈடுபாடு கொண்ட ஒவ்வொருவருக்கும் உயர்ரக மீன் குஞ்சுகள் கிடைக்கும் வகையில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் மீன்குஞ்சுகளைப் பாதிவிலையில் இத்துறை விநியோகம் செய்கிறது. நான்காவதாக, மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கி, மீன்வளர்ப்பினை மேற்கொண்டு தாமும் பயன் பெற பல திட்டங்கள் மூலம் மக்களுக்கு உதவி செய்கிறது.

மதுரை மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களை மீன்துறை ஒன்றன்பின் ஒன்றாக மீன்வளர்ப்பிற்கு எடுத்து வருகின்றது. வைகை அணை, மஞ்சளார் அணை, சாத்தியார்அணை, மருதாநதிஅணை, பாலாறு-பொருந்தலாறு அணை ஆகிய ஐந்து நீர்த்தேக்கங்களில் இத்துறை மீன்வளர்ப்பு செய்து வருகின்றது. இவ்வாண்டு பரப்பலார் மற்றும் வரதமாநதி நீர்த்தேக்கங்களை மீன்வளர்ப்பிற்கு எடுக்க இத்துறை திட்டமிட்டுள்ளது.

இதோடு மட்டுமன்றி நவீன, வழிமுறைகளைக் கையாண்டு மீன் உற்பத்தியைப் பெருக்கிட வைகைஅணை மற்றும் மஞ்சளார் அணைப் பகுதிகளில் இரண்டு நவீன மீன் பண்ணைகள் இம்மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. இதில் மஞ்சளார் அணை மீன்பண்ணை தற்போது ரூ.8 இலட்சம் செலவில் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகின்றது. இத்திட்டப்பணி முடிந்ததும் தமிழகத்திலேயே மஞ்சளார் அணை மீன்பண்ணை பெரியதாக அமையும். விஞ்ஞான ரீதியில், தூண்டுதல் முறையில் பெருமளவு உயர்ரக மீன்குஞ்சுகள் இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணைகளில் தற்போது 1,25,40,000 குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 2 கோடி மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது

இவ்வாறுஉற்பத்தி செய்யப்படும் உயர்ந்தரக மீன்குஞ்சுக தனியார்களுக்கு குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. ஆண்டு தோறும் மாவட்டத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும், அரசு மாண்யம் பெற்று, பாதிவிலையில் மீன்குஞ்சுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் ஒவ்வொரு மூலைக்கும் மீன்குஞ்சுகள் விநியோகம் சீராக நடைபெறுகிறது.

இவ்வாண்டு மாவட்டத்திலுள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களில் தீவிர மீன்வளர்ப்புத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் மீன்வளர்ப்பிற்கு ஏற்ற குளங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, குளத்தின் நீர்ப்பரப்பிற்கு ஏற்றபடி மீன்குஞ்சுகள் கணக்கிடப்பட்டு இருப்பு செய்யப்படுகின்றன. இக்குளங்கள் மீன்பாசி குத்தகைக்காகப் பொதுமக்களிடையே ஏலம் விடப்படுகின்றன. ஊராட்சி ஒன்றிய கால்நடை விரிவாக்க அலுவலர்களுக்கு மீன் வளர்ப்பு முறைகளை விளக்க வைகை அணை மீன்பண்ணையில் இரண்டு நாட்கள் செயல்முறை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அவர்கள் மூலம் பொது மக்களுக்கு மீன் வளர்ப்பு முறைகளை அறிந்து கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு இவ்வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. நாளடைவில் இத் திட்டத்தினை மதுரை மாவட்டத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

**மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை :**

மதுரை மாவட்டத்தில் மீன் வளர்ப்போர் முகமைத் திட்டம் ஆரம்பிக்கும் முன்பாக, மீன் துறையினரால் மீன் வளர்ப்பு செய்யப்பட்ட குளங்களைத் தவிர, இதரக் குளங்களில் மீன் வளர்ப்போர் செய்யவில்லை என்றுதான் கூறவேண்டும். குளங்களிலும் சராசரி மீன் உற்பத்தி ஒரு எக்டருக்கு 200 கிலோவிற்கும் குறைவாகவே இருந்தது. இதனால் பெற்ற வருமானம் எக்டருக்கு ரூ. 400 அளவிலேயே இருந்தது. உள்நாட்டு நீர்நிலைகளில் நவீன மீன்வளர்ப்பு முறைகளைப் புகுத்தி, அதன்மூலம் படிப்படியாக உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்து, மக்களுக்குத் தேவையான மீன்களை வழங்கச்செய்யும் பணிகளில் இந்த முகமை ஈடுபட்டுள்ளது. ஒரு எக்டர் நீர்ப்பரப்பிலிருந்து 1,500 கிலோ உற்பத்தி செய்வது அதிலிருந்து ரூ. 5000 முதல் 10,000 வரை வருமானம் அடையச் செய்வது இதன் நோக்கமாகும்.

இம்முகமையின் திட்டங்களின் வாயிலாக மதுரை மாவட்டத்தில் 16 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குளங்களின் 210 எக்டர் பரப்பளவில் 230 குளங்களில் இதுவரை 241 மீன்வளர்ப்போர் சீரமைக்கவும், மீன்வளர்ப்பின் உள்ளீட்டுக் கடனாகவும், ரூ. 4,14,158 கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதில் முகமை வழங்கிய மானியத்தொகை ரூ 92,267 ஆகும். குளங்களில் வளர்ப்பதற்கான மேம்பாட்டு முகமை வழங்கிய மீன்குஞ்சுகளின் எண்ணிக்கை 9,59,588. எக்டருக்குச் சராசரி மீன் உற்பத்தி 887 கிலோவாகவும், சராசரி வருமானம் ரூ.3875 ஆகவும் உள்ளது. இதன் காரணமாக மீன் வளர்ப்போரிடையேயும் ஆர்வமும் ஊக்கமும் மலர்ந்திடக் காண்கிறோம். 1974-75 ஆம் ஆண்டில் தனியார்களுக்கு விற்கப்பட்ட மீன்குஞ்சுகளின் எண்ணிக்கை 5,000 மாக இருந்தது. 1980-81-ஆம் ஆண்டில் 2,05,600 ஆக பெருகியுள்ளதைக் காணும்போது மக்களின் ஈடுபாடு வளர்ந்து வருவதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

இம்மாவட்ட மக்களிடையே மீன்வளர்ப்பில் புதிய எழுச்சியைக் காணுகிறோம். இந்த மறுமலர்ச்சி இவர்களிடம் வேரூன்றி நிற்பதாலேயே மதுரை மாவட்டம் உள்நாட்டு மீன்வளர்ப்பில் முதலிடம் பெற்று விளங்குகின்றது. ஆர்வத்தோடு வருபவர்களுக்கு ஆவன செய்யும் பாங்கோடு மீன்துறையினரும், மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையினரும் பணியாற்றி வருகின்றனர்.

பாலிதீன் பைகளில் மீன்குஞ்சுகளை அடைத்து ஆக்ஸிஜன் வாயு நிரப்பப்படுகிறது.



# சட்டமன்றத்திலே...

தொகுப்பு: ஆ. மருது



தோப்பையாற்றின் குறுக்கே நெடுஞ் சாலைத்துறையின் மூலம் பாலம் கட்டும் பணி வேலை நடைபெற்று வருகிறது. மொத்த மதிப்பீடு ரூ. 7,72,700. 1981ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

கிருஷ்ணகிரிக்கு அருகில் போகனப்பள்ளி கிராமத்திற்கருகில் ஒரு சாலை ஓர தங்கும் விடுதியை (Motel) அமைக்கும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தி னால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

* * *

திருப்பத்தூர் மாவட்ட கல்வி அலுவ லகத்திற்கான கட்டிடம் கட்டுவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

* * *

500 ஏக்கருக்கும் அதிகமாக உள்ள ஆயக் கட்டுகளுக்குப் பாசன வசதி தரும் குளங்களை உலக வங்கியின் உதவி கொண்டு நவீனப்படுத் தும் திட்டம் அரசின் கருத்தில் உள்ளது.

* * *

செங்குன்றத்திற்கு அருகாமையில் உள்ள புழல் கிராமத்தில் சிறைத் துறைக்குச்சொந்த மான 139.50 ஏக்கர் நிலத்தில் புதிய மத்தியச் சிறையை நவீன முறையில் கட்டும் பணி, அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

* * *

1980-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், தஞ்சை மாவட்டம் நெ. 116, குலமாணிக் கம் கிராம மக்கள் மூலமாகவும், சர்வோதய தலைவர் மூலமாகவும், நேரிலும் தபால் மூல மும் மனுக்கள் (பினாமி நிலங்கள் பற்றி) அரசின் கவனத்திற்கு வந்தன.

இதுபற்றி அரசு பரிசீலித்து, தகுந்த நட வடிக்கை எடுத்து சவளக்காரன் கிராமத்தில் பினாமியென்று கருதப்பட்ட நிலங்களை நில மற்ற ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்து அவர்கள் சாகுபடி செய்து வருகிறார்கள். குலமாணிக்கம் கிராமத்தில் உள்ளஎல்லா நிலங் களையும் தமிழ்நாடு சர்வோதய விவசாயத் தொழிலாளர் சங்கத்திற்கும், வேறு தனிப் பட்ட நபருக்கும் தமிழ்நாடு வக்ப் வாரியத் தின் அனுமதி பெற்று விற்பதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

மத்திய அரசு, தமிழகத்திற்கு 1980-81 ஆம் ஆண்டின் திட்டத்திற்கு ரூ. 142. 11 கோடி நிதி உதவி அளிக்க திட்ட கமிஷன் உறுதி அளித்துள்ளது.

இந்த நிதிஉதவி மத்திய அரசால் காட் கில் விதிமுறை அடிப்படையிலும், நமது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகைக்கு ஏற்ப சரிக்கட்டிய வருவாயுடன் இணைந்த விதிமுறை (Income Adjusted to Total Population) அடிப்படையிலும் நிர்ண யிக்கப்பட்டு அளிக்கப்படுகிறது.

கலப்பு மணம் புரிந்தவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளை தந்தையின் சாதி மதக் கோட் பாடு அல்லது தாயின் சாதிமதக் கோட்பாடு ஆகியவற்றில் எதனைப் பின்பற்றி அக் குழந்தை வளர்க்கப்படுவதாக பெற்றோரால் உறுதி மொழி தரப்படுகிறதோ அதன் அடிப்படையில் குழந்தையின் சாதி நிர்ணயம் செய்யப்படும் என்றும் மேலும் ஒரு குழந்தைக்கு அளிக்கப் படும் உறுதி மொழி மற்ற எல்லா குழந்தை களுக்கும் பொருந்தும் என்றும் ஆணை உள்ளது. எனவே, கலப்பு மணம் புரிந்தவர்களுக்குப் பிறகும் குழந்தைகள் எந்த சாதி என உறுதி அளிக்கப்பட்டதோ (பிற்பட்ட வகுப்பு) தாழ்த்தப்பட்ட வகுப்பு முற்பட்ட வகுப்பு) அதன் அடிப்படையில் கலப்புத் திருமணத் தம்பதிகளில் தாழ்த்தப் பட்ட அல்லது பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த வருக்கும் மற்றும் அவர்களின் குழந்தைகள் தாழ்த்தப்பட்ட(பிற்பட்ட இனத்தைச் சேர்ந் தவர்கள் என்று அளிக்கப்பட்டால் வேலை வாய்ப்பளிப்பதில் பிற்பட்ட)தாழ்த்தப்பட்ட வர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள விழுக்காட் டில் வேலைவாய்ப்பில் கருதப்படும்.

* * *

திருச்சி மாவட்டம் மணப்பாறையில் மாவட்ட முன்சிப் நீதிமன்றம் அமைப்பது பற்றி முடிவான அறிக்கை உயர்நீதிமன்றத்தி லிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

வருவாய்த் துறையில் நடைமுறையில் இருக்கும் 'ஜமாபந்தி' முறையை ரத்து செய்ய நடவடிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

யானைக்கால் நோய் முழுமையாக இல்லாத மாவட்டம் நீலகிரி

சங்கு குளி தொழிலாளி சங்கு எடுக்கும்போது இறந்து விட்டால் அவரது குடும்பத்திற்கு ரூ. 5,000 உதவித்தொகை அளிப்பது போல முத்துக்குளி தொழிலாளி முத்துக் குளிக்கும்போது இறந்துவிட்டால் அவருடைய குடும்பத்திற்கும் 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நலம் மற்றும் துயர் துடைப்பு நிதி விதிகளின்படி ரூ. 5,000 உதவித்தொகை அளிக்க வேண்டும் என்று சமீபத்தில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



• • •

திண்டுக்கல்லில் மாவட்ட நீதிமன்றத்தின் பிரிவு ஒன்றை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது.

• • •

சாத்தனூர் அணை வடபுறக் கால்வாய் திட்டத்தினை தலைமைப் பொறியாளரால் ஆய்வு செய்து முடிக்கப்பட்டு, ரூ. 470 இலட்சத்திற்கு மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

• • •

பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு ''ஃபால் பேக் வேஜஸ்'' ( Fall Back Wages ) குறைந்த பட்ச ஊதியத்தில் 50 சதவிகிதம் என நிர்ணயம் செய்து அரசு 6-10-80ம் நாளிட்ட ஆணை எண். 2337-ல் முன்னறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன்மீது பொது மக்களிடமிருந்து வந்துள்ள ஆலோசனைகளையும் எதிர்க்கருத்துக்களையும் அரசு ஆய்ந்து ஊதிய முன் அறிக்கையை உறுதி செய்வது பற்றி விரைவில் ஆணை பிறப்பிக்கும். அதன்பின் மேற்கூறிய ''ஃபால் பேக் வேஜஸ்'' ( Fall Back Wages ) முறை பற்றிய முடிவு அமுலுக்கு வரும்.




• • •

மொத்தம் 627.50 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் தனியார்களுக்கு ஏலக்காய் பயிரிடுவதற்காகக் குத்தகைக்கு விடப்பட்டது. அதன் மூலம் கிடைத்த மொத்த வருமானம் ரூபாய் 6,15,647.66 ஆகும்.

• • •

இராமநாதபுரம் மாவட்டம். காரைக்குடி அருள்மிகு கொப்புடைய நாயகியம்மன் ஆலயத்தின் சார்பில் ரூ. 1,50,000 மதிப்பீட்டு செலவில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் பரிசிலனையில் உள்ளது.

• • •

நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதி கூக்கல் துறையில் அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடமும் மற்றும் இம்மருத்துவமனையில் பணி புரியும் பணியாளர்களுக்காக குடியிருப்பும் கட்டுவதற்காக ரூ. 7,30,000(ரூபாய் ஏழு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) அங்கீகரித்து 10-3-81 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

• • •

சத்திய மங்கலம் வட்டம் கூம்புப்பள்ளம் அணைத்திட்டம் அரசினால் ஆய்வு செய்யப்பட்டு, விவர மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசிலனையில் உள்ளது.

• • •

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் உள்ளடங்கியது. பரம்பிக்குளம் ஆழியாறு

திட்டத்தின் கீழ் மேலும் பாசன வசதியைப் பெருக்கப் போதுமான பாசனவளம் (Irrigation Potential) இல்லை. ஆகவே மற்றொரு அணை கட்டுவது சாத்தியமில்லை. ஆனால், பரம்பிக்குளம், ஆழியாறு திட்டம் திறமையாக செயல்படுவதற்கும் அதிக மின் விசை உற்பத்தி செய்வதற்கும் மேலும் ஒரு அணை கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

• • •

கட்டுப்படுத்தப்பட்ட நீர்ப் பாசனத் திட்டம் உபவாய்க்கால் ஏரிகளின் மதகுகள் வழியாக ஒருமுன்னோடித் திட்டம் நடத்திப் பார்க்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

500 ஏக்கரும் அதற்கு மேலும் ஆயக்கட்டு உள்ள ஏரிகளை நவீனப்படுத்துவதற்கான ரூ. 120 கோடி மதிப்பீடு கொண்ட திட்டம் தலைமைப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் ஏற்படும் பயனைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கு முன்னோடி திட்டமாக, செங்கற்பட்டு, மாவட்டத்தில் பிள்ளைப்பாக்கம் ஏரியையும், அதன் வாய்க்கால்களையும் நவீனப்படுத்தும் வேலையை, அரசு அனுமதித்து மேற்படி வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இம்முன்னோடித் திட்டத்திற்கு ரூ. 10.85 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

• • •

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தவும் அவர்களுக்கு ஏனைய பல சலுகைகளை அளிக்கவும் இந்த அரசு ஒரு சட்ட முன் வடிவினை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்த இருக்கிறது. இச்சட்ட முன் வடிவில் நெசவாளர்களின் சுகாதாரத்தைப் பேணுவதற்கான வழிமுறைகளான சுற்றுப்புறத் தூய்மை, காற்றோட்ட வசதி, போதிய வெளிச்சம், இடவசதி, குடிநீர், கைகழுவுவதற்கான வசதிகள், குழந்தைகள் காப்பகம் போன்றவற்றிற்கான விதிமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளன.



• • •

உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள உடற்பயிற்சி ஆசிரியர் அல்லது உடற்பயிற்சி இயக்குநர்கள் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு, உடற்கல்வி கற்பிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேல்நிலை வகுப்புகளுக்கென உடற்பயிற்சி இயக்குநர்களை நியமிக்க வேண்டி 400 உயர்நிலைப் பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர் உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. 1980-81ல், 200 மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

## 1980-81-ஆம் ஆண்டில் விற்பனை வரி மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம்

1980-81-ஆம் ஆண்டில் விற்பனை வரி மூலம் அரசுக்கு எதிர்பார்த்த வருவாய் கிடைத்துள்ளது.

1979-80-ஆம் ஆண்டில் விற்பனை வரி மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய்: ரூ. 387 கோடி.

1980-81–ஆம் ஆண்டில் விற்பனை வரி மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய்: ரூ. 474 கோடி.

சென்ற ஆண்டு விற்பனை வரி மூலம், அரசுக்குக் கிடைத்த வருவாயை விட இந்த ஆண்டு ரூ. 87 கோடி அதிகமாக் கிடைத்துள்ளது.

இது 21.5 சதவிகித வருவாய் உயர்வைக் காட்டுகிறது. வணிகவரித் துறையின் வரலாற்றில், இது மிகப் பெரிய சாதனை.

பல பொருட்களுக்கு வரி விலக்கு அளித்தும், பல பொருட்களுக்கு வரி குறைப்புச் செய்தும், இந்த ஆண்டு ரூ. 87 கோடி அதிகமாக அரசுக்கு வருவாய் வந்துள்ளது.




இப்பகுதிக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். அரசியல் கட்சிகள் தொடர்புள்ள நூல்கள் இப்பகுதியில் மதிப்புரை செய்யப்பட மாட்டா.

—ஆசிரியர்.

## சேயூர் முருகன் உலா

ஆசிரியர் : சேறைக் கவிராச பிள்ளை

பதிப்பாசிரியர் : மு. அருணாசலம்

வெளியீடு : தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம், ஸ்பர்டாங் சாலை, சென்னை-30.

விலை: ரூ. 14 பக்கங்கள் 162·

**த**மிழில் வழங்கப்பெறும் 96 வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று உலா. கி. பி. 700ல் தோன்றிய ஆதிஉலாதான் இவ்வகையில் முதலாவது என்று சொல்லப் படுகிறது. அதன்பின்னர் பற்பல உலாக்கள் தோன்றித் தமிழ் இலக்கிய விதியை அணி செய்து வருகின்றன. 'சேயூர் முருகன் உலா' கி. பி. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. வழக்கம் போல், இந்நூல் ஆசிரியரின் இயற்பெயரும் தெரியவில்லை. ஊர்ப் பெயர், சிறப்புப் பெயர் கொண்டே இவர் அழைக்கப் படுகிறார் எனத் தெரிகிறது.

சுவடுகள் தேயத்தேய அலைந்து சுவடிகளைத் தேடிப் பிடித்த உ. வே. சா. அவர்களால் முன்னர் பதிப்பிக்கப் பெற்ற இந்நூல், தற்போது மு. அருணாசலம் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ளது. பதிப்பாசிரியரின் நீண்ட முன்னுரை (73 பக்கங்கள்) நூலுக்குத் தனிச்சிறப்பை அளிக்கிறது. அதிலுள்ள ஆய்வுக் கருத்துக்கள் அறிஞர்களால் போற்றப்படுவன. உலா நூல் தோன்றிய விதம், சங்க இலக்கியத்தில் உலா பயின்ற வகை, ஆகிய செய்திகளை மிக விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். அவர் தம் நடை படிப்போரைக் கவர்கிறது.

முருகப் பெருமானின் பெருமையைக் கூறும் இந்நூலில் தமிழ் மணம் கமழ்கிறது; தமிழராகப் பிறந்தவர் அனைவரும் இதனைப் படித்து இதன் பா நலத்தில் தோய்வது நலம் பயக்க வல்லது. தூய வெள்ளைத் தாளில் தெளிவான முறையில் அச்சிடப்பட்டு, காலிகோ பைண்டுடன் அழகிய முறையில் வெளியிடப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

## கூவ நூல்

பதிப்பாசிரியர்:

டாக்டர் ச.வே. சுப்பிரமணியன்

வெளியீடு:

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அடையாறு, சென்னை–20.

விலை: ரூ. 7/- பக்கம்: 157

**த**மிழர்கள் இலக்கிய நெறிகளில் மட்டுமின்றி, பல்வேறு நுணுக்கங்களிலும் சிறந்துவிளங்கியுள்ளனர். இசைநூல்—காப்பிய நூல் ஆகியவற்றைத் திறம்பட உருவாக்கிய தமிழர்கள், மண்ணில் எங்கே தோண்டினால் இனிய நீர் கிடைக்கும் என்னும் நுணுக்கத்தையும் தெரிந்து வைத்திருந்தார்கள். இந்தச் செய்தியை இந்நூல் எடுத்துக் கூறுகிறது.

ஏட்டுச் சுவடிகளில் தஞ்சம் புகுந்து கொண்டு, வெளியுலகில் பவனி வர முடியாது சிறை வைக்கப் பெற்றிருக்கும் நூல்களைப் பலரும் அறிய உலா வரச் செய்யும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் இந்நூலைச் சிறப்புற வெளியிட்டுள்ளது. கிடைத்துள்ள 9 சுவடிகளில், 5 சுவடிகளைத் தேர்ந்தெடுத்துப் பதிப்பித்துள்ளது.

மரபு குறித்த தமிழர்களின் நம்பிக்கைகள், அறிவியல் கண்ணோட்டம், சோதிட ஆற்றல் ஆகியவை இந்நூலால் விளக்கமுறுகின்றன. கூவம் என்பது, நிலத்தில் உள்ள ஊற்று நீர் எனப் பொருள்படும் என்பதும் அச்சொல் கம்பரால் பயன் படுத்தப்பட்ட இலக்கியச் சொல் என்பதும் தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது.

நில அமைப்புக்கேற்ப நீர் கிடைக்கும் நிலை, அந்நீரின் தன்மை, செடிகளைக் கொண்டு நீர் உள்ள இடத்தை ஆயும் ஆற்றல், புற்றுகளின் இயல்பு கொண்டு நீரூற்றுக் குறித்துத் தெளிவுறுத்தல்-நீருக்கும் கோளுக்கும் உள்ள தொடர்பு ஆகியவற்றை இந்நூல் விரிவாக எடுத்துரைப்பதுடன் எந்த நாட்களில் கிணறு தோண்ட வேண்டும்—எப்போது தோண்டக்கூடாது, என்னும் விவரத்தையும் கூறுகிறது.

தமிழர் தம் மருத்துவ அறிவைத் தெளிவுறுத்தும் சித்த மருத்துவ நூல்களைப் போல, இந்நூலும், தமிழர் தம் 'நீரூற்று அறிவை' எடுத்துரைப்பதில் தலைசிறந்து விளங்குகிறது. இது போன்ற அரிய நூல்களை அறிமுகம் செய்துவரும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பாராட்டுக்குரியது. தெளிவான முறையில் அச்சிட்டு வெளியிட்டதற்காக மற்றுமொரு பாராட்டு.

—புலவர் தமிழ்ப்பித்தன்.

## தமிழ்முடி கீர்த்தனைகள்

ஆசிரியர் : கவிஞர் தமிழ் முடி

வெளியீடு : தமிழ்முடி நிலையம், ஏ.பி. 1332, 7வது செக்டர் 33வது தெரு, கே. கே. நகர், சென்னை-78.

விலை ரூ. 4/- பக்கங்கள் 96

**தெ**ய்வம், தமிழ், தேசம் என்னும் மூன்று பிரிவுகளில் மொத்தம் 60 கீர்த்தனைகள் கொண்டது இந்நூல். ஒவ்வொரு பாடலிலும் அதற்குரிய இராகத்தை நூலாசிரியர் குறிப்பிட்டிருப்பது பாராட்டுக்குரியது.

'ஐயா பாடகமணியே—
முதலில்உம
அன்னை மொழியில் பாடுதல்
பணியே'

என்று கூறியிருக்கும் வரிகளில் நூலாசிரியரது தமிழ் மொழிப் பற்று தெற்றென விளங்குகிறது.

'ஒற்றுமையே தாரகம்—
உயிர் எமக்குப் பாரதம்'

என்னும் அடாணா ராகப் பாடல் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் உன்னத ஓவியமாகத் திகழ்கிறது.

இசை நயமும் இலக்கியச் செறிவும் இந்நூல் முழுதும் மிளிர்கிறது.

—எஸ். எஸ். சுந்தரம்

## ஆட்சி மொழிக் காவலர்

கீ. இராமலிங்கனார் வாழ்க்கை வரலாறு

ஆசிரியர்: வீ. சந்திரன் பி.ஏ., பி.எல்.

வெளியீடு: சொர்ணகுரு பதிப்பகம்
42, ஆர்க்காட்டுச் சாலை, சென்னை-24.

விலை: ரூ. 10 பக்கங்கள்: 132.

'ஆட்சிமொழிக் காவலர்' என்று புகழப்படுபவர் திரு கீ. இராமலிங்கனார் அவர்கள். அவர், தமிழகத்திற்கு நன்கு அறிமுகமான தமிழறிஞர். அவரது சிறப்பியல்புகளைக் கோடிட்டுக் காட்டுகிறார் நூலாசிரியர்.

தமிழுக்கு அவர் ஆற்றியுள்ள அருந் தொண்டுகளை -குறிப்பாக ஆட்சிமொழிக்கு அவர் படைத்துள்ள நன் முத்துக்களையெல்லாம் கோத்து, தமிழன்னைக்கு ஓர் முத்து மாலையாகவே சூட்டியிருக்கிறார் இந்நூலாசிரியர்.

''தமிழ்ச் சொல்லாக்கத்தில் முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் இருந்து பல பேரறிஞர்களுடைய பாராட்டைப் பெற்றவர்கள்'' என்று டாக்டர் நீதிபதி எஸ்.மகராஜன் அவர்கள் இவரை பற்றித் தம் அணிந்துரையில் குறிப்பிடுகிறார்.

இனிய, எளிய நடையில், படித்து இன்புறத்தக்க வகையிலே எழுதியிருக்கிறார் ஆசிரியர் சந்திரன். ஆட்சிமொழி ஆர்வலர்களுக்கு இந்த வாழ்க்கை வரலாற்று நூல், ஒரு வரப்பிரசாதமாகும்.

## கிராமங்களை நோக்கி....

ஆசிரியர்: பேராசிரியர் இல. செ. கந்தசாமி.

வெளியீடு: கலைச்செல்வம் பதிப்பகம்
10-140, லால்பகதூர் சாஸ்திரி தெரு, பாப்ப நாயக்கன்புதூர், கோயம்புத்தூர்-641 041

பக்கங்கள்: 139 விலை ரூ. 6-

நம் நாட்டின் உயிர்நாடியே கிராமங்களில்தான் உள்ளது. ஆனால், அந்தக் கிராமங்களின் நிலைமை என்ன? இந்தக் கேள்விக்கு விடையாக எழுந்ததுதான் இந்த நூல் எனலாம்.

தன்னையே அழித்துக்கொண்டு வெளிச்சம் கொடுக்கும் மெழுகு வர்த்தியைப்போல், இன்று கிராமங்கள் நகரை வளர்க்கின்றன என்ற கருத்தை உள்ளடக்கிய உணர்வுகளின் தொகுப்பே இந் நூல்.

இன்றைய சமுதாய வளர்ச்சிக்கும் வளத்துக்கும், ஆசிரியர் கூறும் வலிமையான கருத்துக்கள் வரவேற்கத் தக்கவை.

நகர வாழ்க்கையை விட்டு நகர மறுக்கும் இன்றைய இளைஞர்களுக்கு, இந்நூல் வழிகாட்டியாக அமையும் என்று நம்பலாம்.

## முத்தும் முல்லையும்

ஆசிரியர்: எஸ். குலசேகரன்,

வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம்,
நார்த்தாம்பூண்டி,
திருவண்ணாமலை வட்டம், வ.ஆ.மா.

விலை: ரூ. 4 பக்கங்கள்: 80

நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தைகள் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் விளங்கிட வேண்டும். அதற்குப் பெற்றோர்கள் மட்டுமல்ல, மற்றவர்களும் முன்மாதிரியாகத் திகழ்ந்திட வேண்டும். இதனை விளக்கிடும் வண்ணம் பலதுறை அறிஞர்களின் சுவையான வாழ்க்கை நிகழ்ச்சிகள், அமுத மொழிகள், கருத்துரைகள் முதலானவற்றைச் சிறுவர்கள் மனத்தில் பதியும் வண்ணம் கூறுகிறது இந்நூல்.

## ஆறில் ஒரு பங்கு

ஆசிரியர்: மகாகவி சுப்பிரமணிய பாரதி

வெளியீடு: ஞானபாரதி,
18, பெரியண்ண வீதி,
ஈரோடு-638001

### தமிழகத்தில் பள்ளிக்கட்டடங்கள்

தமிழகத்தில் மொத்தம் 28 ஆயிரம் பள்ளிக்கட்டடங்கள் தேவை அவற்றில் 22 ஆயிரம் பள்ளிக்கட்டடங்கள் கட்டப்பட்டு விட்டன. இவ்வாண்டு 3,500 பள்ளிக்கட்டடங்கள் கட்டப்படவுள்ளது. அடுத்த ஆண்டு 2,500 பள்ளிக் கட்டடங்களையும் கட்டி முடித்துவிட்டால் தமிழகத்தில் பள்ளிக்கட்டடங்கள் இல்லாத கிராமமே இல்லாத அளவில் தன்னிறைவு பெற்றுவிடும்.

விலை. 1.50 பக்கங்கள்: 563

பாட்டுக்கொரு புலவன் பாரதியின் பாடல்கள் எந்த அளவுக்கு உத்வேகத்தையும் உணர்ச்சியையும் ஊட்டினவோ, அந்த அளவுக்கு அவரது கட்டுரைகள், வசன கவிதைகள் உத்வேகத்தையும், உணர்ச்சியையும் ஊட்டுகின்றன எனலாம்.

இந்நூலில் ஜாதிக் குழப்பம், மூடபக்தி, வாசகஞானம், கொள்கைக்கும் செய்கைக்கும் உள்ள தூரம் ஆகிய கட்டுரைகள் அடங்கியுள்ளன. சிந்தனைக்கு விருந்தூட்டும்மகாகவியின் கட்டுரைகள் மனத்திலே ஆழப் பதிகின்றன. ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய அருமையான தொகுப்பு நூல் இது.

## அரும்பு மலர்கிறது

ஆசிரியர்: கவிஞர் ப. சுப்பிரமணியம்

வெளியீடு: 1,படவட்டமன் கோயில் தெரு, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை-2

விலை. ரூ. 3- பக்கங்கள்: 40

கவிஞர் நெஞ்சில் ஊற்றெடுத்த பல கவிதைகள் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. 'அனுதாபம்' என்ற கவிதையில் 'சொந்த அறிவிருந்தும் சோற்றுக்கு வழிதேடா மந்த மனத்துடனே மருண்டு வாழ்வார்க்கும் அனுதாபம்!' என்று குறிப்பிடுகிறார் கவிஞர்.

குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்குமாகக் கவிதைகள் கலந்து கற்கண்டாய் இனிக்கின்றன.

பி.வி. கிரி

## வாழ வழிகாட்டும் வங்கி:

## ஏழை எளியவர் ஏற்றம் பெற....

## பாங்காகப் பணியாற்றும்

# பரோடா வங்கி

**நிலத்தின் பேரில்..!**

**நகைகளின் பேரில்...**

விலை உயர்ந்த பொருட்களின் பேரில் கடன் தருவது அங்கிங்கெனாதபடி எங்கும் பரவியுள்ள பழக்கமாகும்.

வெறும் நம்பிக்கையின் பேரில், அதுவும், அளிக்கப்படுகின்ற தொகைக்குச் சரியான நிலமோ, நகைகளோ, விலை உயர்ந்த பொருட்களோ இல்லாத பட்சத்தில் பெரும் தொகையைக் கடனாகத் தருவதென்றால் இந்த நாளில் அதைவிட அதிசயம் வேறு ஏதாவது இருக்க முடியுமா?

'கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்பது இராமாயணக் காலம்; 'கடன் கொடுத்தார் நெஞ்சம் கலங்கித் தவிப்பது' இந்தக் காலம். இப்படிப்பட்ட காலத்தில் - கூடை முடைபவர், கொல்லர், செருப்புத் தைப்பவர், தச்சர், மண்பாண்டம் செய்பவர், பொம்மை செய்பவர், பூ செய்கிறவர் போலச் சுயமாகத் தொழில் செய்பவர்களுக்கும்..... பழம் விற்பவர், பூ விற்பவர், காய்கறிகள் விற்பவர், செய்தித்தாள் விற்பவர், வெற்றிலை பீடி கடைக்காரர், டீ கடைக்காரர் போன்ற பலதரப்பட்ட தொழிலாளர்கள் வரை அவர் மீதெல்லாம் அபரிமிதமான பெருநம்பிக்கை வைத்துப் பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை-வெறும் நம்பிக்கையொன்றையே அடித்தளமாகக் கொண்டு யாராவது கடன் தருவார்களா?

**சிறு தொழில் சேவை நிறுவனம்**

நாங்கள் தருகிறோம் என்கிறார்கள் 'பரோடா வங்கி'யினர் (Bank of Baroda).

வைப்புத்தொகையைப் பொறுத்த மட்டில் 1980ல் இந்த வங்கி, நாட்டுடைமையாககப்பட்ட வங்கிகளில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

குடிசைத் தொழில்கள், கைவினைத் தொழில்கள் - இன்னும் சுயமாகத் தொழில் புரியும் மற்றவர்களுக்கும் ஏராளமாகக் கடன் தந்து அவர்களுடைய கடுமையானஉழைப்புக்குக்கைகொடுத்து உதவ பரோடா வங்கியினர் பல தொழில் சேவை நிறுவனம் (Multi Service Agency Cell)

**பி.எல்.ராஜேந்திரன்**

இரண்டினை வடசென்னையில் ஒன்றும், தென் சென்னையில் ஒன்றுமாகத் துவக்கியிருக்கிறார்கள். வங்கியின் ஓர் அங்கமாகவே திகழ்கிறது இது. தமிழ் நாடெங்குமாக இந்த அமைப்பு ஏழு உள்ளது.

இந்த அமைப்பின் மூலம் ஏறத்தாழ 2,500 பேர்களுக்கு- அதாவது சிறுதொழில் புரிவோருக்கு இதுவரை பொருளுதவி வழங்கப்பட்டிருக்கிறது. துவக்கத்திலிருந்து இத்திட்டத்தால் பயன் பெற்றோர் எண்ணிக்கை பத்தாயிரம். இந்த அமைப்பின் தற்போதைய நிலுவைத் தொகை ரூ. 33 இலட்சத்திற்கும் மேலாகும்!

1908ஆம் ஆண்டில் பரோடா மாநிலத்தில், ஒரு மாநில வங்கியாகத் துவக்கப்பட்டதுதான் இந்த வங்கி. 1969ல், பல்வேறு பெரிய வங்கிகளும் நாட்டுடைமையாக்கப்பட்டதை யொட்டி இதுவும் நாட்டுடைமை ஆக்கப்பட்டு இந்தியாவின் பொதுத்துறை வங்கிகளில் ஒன்றாக இயங்கி வருகிறது.

**பரோடா வங்கிக்கு, இப்போது இந்தியாவிலே மட்டும் 1492 கிளைகள் இருக்கின்றன.**

1953ல், வெளிநாடுகளிலும் காலூன்ற ஆரம்பித்தது பரோடா வங்கி. அப்படி அயல்நாடுகளில்



வங்கியின் மண்டல மேலாளர் ஆர். நரசிம்மன், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஊனமுற்றோருக்கான உதவித் தொகை வழங்குதல்.



வங்கியின் தென்மண்டல மேலாளர் சி. பி. இராமமூர்த்தி.

துவக்கப்பட்டிருக்கும் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 58 ஆகும். பஹாமாவிலும், பஹ்ரெனிலும், கடல் நடுவிலேயே இயங்கிடும் கிளைகளும் இந்த வங்கியால் துவக்கப்பட்டுள்ளன!

1977-ல் முதன் முதல் கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் துவக்கப்பட்ட பரோடா வங்கிக்குத் தமிழ்நாட்டிலே மட்டும் 57 கிளைகள் இருக்கின்றன. இப்போது அவற்றில், கிராமப்புறங்களில் 17, சிறுநகரங்களில் 11 என அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் 25 கிளைகள் திறக்க ரிசர்வ் வங்கியிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

''நடைபாதைகளில் பழக்கடை, காய்கறிக்கடை வைத்திருப்பவர்களுக்கு மட்டுமல்லாமல்-தெருத் தெருவாகக் கூடை தூக்கிக் காய்கறி விற்பவருக்கும், தோளில் சிறுபெட்டியோடு அலைந்து திரியும் செருப்புத் தைக்கும் தொழிலாளிக்கும்கூட கடன் வழங்குகிறீர்களே அதெப்படி திரும்ப வசூலாகிறது?'' என்று இவ்வங்கியின் தென் மண்டல மேலாளரான திரு சி. வி. இராமமூர்த்தி அவர்களிடம் கேட்டோம்.

நம்பினோர் கெடுவதில்லை

''எல்லாம் நம்பிக்கையின் பேரில்தான் தரப்படுகிறது—வசூலிக்கப்படுகிறது!'' என்று சிரித்தவாறே சொன்ன அவர், 'ஆனால் ஒன்று-நல்ல நோக்கத்தோடு நாங்கள் தரும் கடன் தொகையை ஏமாற்ற யாரும் முனைவதில்லை'' என்றும் உறுதியான குரலில் தெரிவித்தார்.

அவரருகே இருந்த-தியாகராய நகர் பரோடா வங்கியின் பல தொழில் சேவை நிறுவனப் பொறுப்பு அலுவலர் திரு. என் சுப்பிரமணியம் அது பற்றிச் சற்றே விளக்கிச் சொன்னார்—''கொடுக்கிற கடனைத் திருப்பி வசூலிக்க என நாங்கள் எட்டுப் பேரை (Cash Collector) நியமித்திருக்கிறோம். கடன் வாங்குகிறவர்களுக்கு ஒரு அடையாள குறிப்பு அட்டை தருகிறோம். இரண்டு நாளைக்கு ஒருமுறை, அல்லது வாராவாரம், அல்லது மாதா மாதம் அவர்கள் தருகிற தொகையை, பணம் வசூலிக்கச் செல்கிறவர் வரவு வைத்துக் கையெழுத்துப் போட்டுக் கொடுப்பார். அந்த அடையாளக் குறிப்பு அட்டையில் இன்னொன்றும் செய்கிறோம். உதாரணமாக, ஒருவர் பத்து ரூபாய் தருகிறார் என்றால், அந்த பத்து ரூபாய் அளவில் எங்கள், வங்கி ஸ்டாம்ப் ஒன்றை அதில் ஒட்டித் தருவோம். இது ஏனென்றால், பெரும்பாலான சிறு வியாபாரிகள் அவ்வளவு தூரம் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருப்பார்களல்லவா? ஸ்டாம்பில் படத்தோடு உள்ள எண்ணை வைத்து ரூபாயை அவர்களும் புரிந்து கொள்வார்கள் என்பதற்காகவே இந்த ஏற்பாடு! அந்தச் சிறு வியாபாரிகள் எவ்வளவு அக்கறையோடு கடன் வாங்குகிறார்களோ, பணத்தைத் திருப்பிச் செலுத்துவதிலும் அவர்கள் அவ்வளவு அக்கறையுடனேயேநடந்து கொள்கிறார்கள். இல்லாவிட்டால் இந்த வகையில் நாங்கள் இதுவரை சுமார் பத்தாயிரம் பேருக்குக் கடன் தந்திருக்க முடியுமா!''

செய்தித்தாள் விற்பனையாளர் ஏ. செயபால் வங்கிக் கடனில் வைத்த கடை.



''இந்த வகையில் கடன்கேட்டு மனுச் செய்வதும், மனுதாரர் தகுதியானவரா என்று தாங்கள் தேர்ந்தெடுப்பதும் எப்படி ?'' என்கிறோம்.

''பணம் வசூலிக்கச் செல்கிறவர் மூலமே புதிதாகக் கடன் கேட்பவர்களும் மனுச் செய்யலாம். மனுதாரர் உள்ள வட்டாரத்தில் அவரைப் பற்றித் தீர விசாரித்து, அவருக்குத் தரலாம் என வசூலிக்கச் செல்பவரே தீர்மானிப்பார்!'' என்று சொல்கிறார் பரோடா வங்கியில் முக்கிய அங்கம் வகிக்கும் திரு. சுரேஷ் குமார். ''பணம் வசூலிக்கச் செல்கிறவர்களுக்காக வங்கி மூலம் மோட்டார் சைக்கிள் வாங்கித் தரப்படுகிறது'' என்றும் அவர் தெரிவித்தார்.

சில புள்ளி விவரங்கள்

இந்த வங்கியின் தமிழ்நாடு அமைப்பின் சேமிப்புத் தொகை கடந்த ஆண்டு முடிவிலிருந்த ரூ. 70.37 கோடியிலிருந்து ரூ. 96.99 கோடியாக அதாவது 37.8 சதவிகிதம் உயர்ந்துள்ளது. இது, இந்த வங்கியினுடைய தேசிய சராசரி உயர்வைவிட அதிகமாகும்!

...மொத்தக் கடன் உதவித் தொகை ரூ. 48.66 கோடியிலிருந்து ரூ. 56.23 கோடியாக 15.5 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது.

இதிலும், தமிழ்நாட்டில் கடன் உதவி விகிதம் அனைத்திந்திய சராசரியைவிட அதிகப்படியாகும்.

தமிழ்நாட்டில் 1980ஆம் ஆண்டு டிசம்பர் முடிவில், முன்னுரிமைத் துறையின் கீழ் உள்ள கடன் கணக்குகள் 43,598 ஆகும். மொத்த கடனில் வேளாண்மைத் துறையினருக்கு மட்டும் 21.70 சதவிகிதம் அளிக்கப்பட்டிருக்கிறது. கடனுதவி பெற்ற மொத்த விவசாயிகளில் 44.3 சதவிகிதத்தினர் சிறு விவசாயிகள் ஆவர்.

சிறு தொழில் புரிவோருக்கு மட்டும் ஏறத்தாழ மூன்று கோடி ரூபாய் இவ்வங்கி மூலம் அளிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச வட்டிக்குத் (Differential rate of interest) தமிழ்நாட்டில் மட்டும் ரூ. 28,22,000 கடனாகக் கொடுக்கப்பட்டிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ரிசர்வ் வங்கி மூலம் அமைக்கப்பட்ட 'தாக்கர் குழு' அளித்த பரிந்துரைகளில் மிகவும் முக்கியமானது-கடன் உதவி அளிப்பது மட்டுமல்ல; எதற்காகக் கடனளிக்கிறோமோ அதுபற்றிய ஆலோசனைகளையும் கடன் வாங்கியவர்களுக்கு வங்கிகளே அளிக்க முன் வரவேண்டும் என்பதாகும். பலதொழில் சேவை நிறுவனம் துவக்குவது பற்றியும் அக்குழு வலியுறுத்தியது. திரு. வி. டி. தாக்கர் இவ்வங்கியினுடைய முன்னாள் தலைவரும் ஆவார்.

''தாக்கர் குழுவின் அந்தப் பரிந்துரைகளை 1972-ல், முதன் முதல் அமல்படுத்திய பெருமை எங்கள் பரோடா வங்கியையே சேரும். கடன் கொடுப்பதோடு சிறுதொழில் புரிவோருக்குத் தேவையான கச்சாப் பொருள் கிடைக்குமிடம், தயாரிக்கும் பொருட்களை விற்கத் தகுந்த இடம், தொழிலைச் சிறப்பாக நிர்வகிப்பது எப்படி என்பது போன்ற பல ஆலோசனைகளும் எங்கள் வங்கி மூலமே அளிக்கிறோம். இப்படிச் செயல்படும் எங்கள் பலதொழில் சேவை நிறுவனம். ரூ. 66.34 இலட்சத்தைக் கடன் நிலுவையாகவும் 7940 கடன் கணக்குகளையும் கொண்டிருக்கிறது'' என்று பெருமிதத்தோடு தெரிவித்தார் பரோடா வங்கியின் தமிழ்நாடு மண்டல மேலாளர் இருவரில் ஒருவரான திரு. ஆர். நரசிம்மன் அவர்கள்.

## கிராம வளர்ச்சி நிறுவனம்

1977-ல் இந்த வங்கி மூலம், 'கிராம வளர்ச்சி நிறுவனம்' (Gramean Vikas Kendra) என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம், கிணறு வெட்டவும், விவசாய இயந்திரங்கள் வாங்கவும். குடிசைத் தொழில் செய்திடவும், மாடு, ஆடு, கோழி, வாத்து, பன்றி ஆகியவை வளர்ப்பதற்கும் பெருமளவில் கடன் தரப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள கிராம வளர்ச்சி நிறுவனங்கள் ஐந்தும் 1980ஆம் ஆண்டின் இறுதியில் 11,207 கடன் கணக்குகளையும் ரூ. 1.97 கோடி கடன் நிலுவையும் கொண்டிருந்தது என்றால், இந்த அமைப்பின் செயல்திறன் நன்கு விளங்கும்.

'விவசாய நாள் விழா', 'உழவர் வார விழா' போன்ற பல்வேறு ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளும் இந்த வங்கி மூலம் அவ்வப்போது நடத்தப்படுகின்றன.

பிரபல வழக்கறிஞர்கள், பெயர் பெற்ற மருத்துவர்கள், பெரிய பெரிய பொறியியல் மேதைகள் - தொழிலதிபர்கள் பெரும்பாலோர் பரோடா வங்கியில் கடன் பெற்றிருக்கிறார்கள் என்றாலும், சிறுதொழில் சேவை நிறுவனம் மூலம் 4 சதவிகித வட்டியில் கடன் பெற்று மேல் நிலைக்கு வந்த ஏழை எளியோர் சிலரை நேரில் காணும் நம் விருப்பத்தைப் பூர்த்தி செய்தனர் வங்கியினர்.

வட சென்னையில், எர்ரபாலு செட்டித் தெருவிலுள்ள பரோடா வங்கியின் சிறுதொழில் சேவை நிறுவனத்திற்குச் செல்கிறோம் முதலில். அதன் அலுவலகப் பொறுப்பாளரான டி.கே. தவே, 1973ல் துவக்கப்பட்ட அந் நிறுவனம் மூலம் இதுவரை 1500 பேருக்கு மேல் கடன் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்.

''வசூல் சரியாக இருக்கிறதா?' என்கிறோம்.

''மிகச் சரியாக இருக்கிறது. சில பேர், நாங்கள் போய் வசூலிக்கிறவரை பொறுக்க முடியாமல் தலைமை வங்கியிலேயே கொண்டுபோய் பணத்தைக் கட்டிவிடுகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!'' என்றார்.



டி. கே. மணி



கோவிந்தம்மாள்



வி. இ. ஜெயராமன்

கே. ஏ. மதியழகன்





வி. செயராமன்



பி. மணி



கண்ணம்மாள்



மாங்காடு பால் வழங்கும் சங்கம்



சாமுவேல்

ராஜம்மாள்
பார்வதி நாராயணன்



## மறக்க முடியாத வங்கி

இப்படிப்பட்ட அமைப்பு மூலம் கடன் பெற்றவர்களில் சிலரைச் சந்திக்க எண்ணித் தியாகராயர்நகர் செல்கிறோம்.

தியாகராயர் சாலை, 7ஆம் எண்ணில்-மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் போன்ற வாகனங்கள் பழுது பார்க்கும் கடை (City Motor Cycle Works) வைத்திருக்கும் திரு. பி. மணியைப் பார்த்துப் பேசுகிறோம்.

''சின்ன வயசுலேயே அப்பாவை இழந்துட்ட நான் ஒரு ஒர்க்ஷாப்புல இந்த வேலை கத்துகிட்டேங்க. அப்புறம், பரோடா பேங்க் கடன் தரப்போயிதான்—இப்பிடி தனியாவே ரெண்டு பசங்களை வெச்சி ஒர்க்ஷாப் ஆரம்பிக்க முடிஞ்சிது. உள்ளபடியே அந்த பேங்க் உதவியை என்னாலே மறக்கவே முடியாதுங்க. ஏன்னா என்னைக் கைதூக்கி விட்டதாச்சுங்களே!'' என்று நன்றிப் பெருக்கோடு கூறினார் அவர்.

பின்னர், பாண்டி பஜாரில் பழக்கடை வைத்திருக்கும்திருமதி கண்ணம்மாளைப் பார்க்கிறோம். ''நான் இந்த பேங்குல ஏற்கெனவே ரெண்டு தரம் கடன் வாங்கீட்டு, இப்ப மூணாந்தரமா வாங்கிருக்கேங்க. ரொம்ப ஏழை பாளைங்களான எங்களை நம்பி கடன் குடுக்கிற அவங்களை நாங்க தெய்வமா மதிக்கிறம்க!'' என்றார் அவர்.

தியாகராயர் நகரில்-குடிசைத் தொழிலில் ஊக்கம் காட்டிவரும் விதவையான ராஜம்மாள், திருமதி பார்வதி நாராயணன் ஆகியோர் பரோடா வங்கியில் கடன் பெற்றுச்செய்துவரும் அலங்காரப் பொருட்களுக்குச் சென்னை—பெங்களூர் போன்ற பெருநகரங்களில் ஏகப்பட்ட கிராக்கி!

மகாலிங்கபுரத்தில் செருப்புக் கடை வைத்துள்ள திரு. சாமுவேல் இவ்வங்கி மூலம் பணம் பெற்றுச் செய்துவரும் காலணிகள் கவர்ச்சிகரமாக மட்டுமல்ல, கவர்ச்சிகரமான விற்பனையுடையவைகளாகவும் விளங்குகின்றன!

இந்த உடல் ஊனமுற்றோர் ஆண்டில், 37 ஊனமுற்றோருக்குப் பெட்டிக்கடை வைக்கவும் இவ்வங்கி கடனளித்திருக்கிறது.

## மாங்காடு கிளை

பரோடா வங்கியின் கிராமப்புறக் கிளைகளில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சிறப்போடு செயல்பட்டு வருகிறது செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மாங்காடு கிளை!

''இங்குள்ள 'மாங்காடு—பால் உற்பத்தியாளர் சங்கத்தில், 1977ல் துவக்கப்பட்ட புதிதில் 40 மாடுகளே கறவைக்கு வந்தன. இப்போது அந்த எண்ணிக்கை 340 ஆகியிருக்கிறதென்றால் எங்கள் வங்கி மூலம் ஆந்திராவுக்குப் போய் வாங்கி வந்து கிராம வாசிகளுக்குத் தரப்பட்ட 'முர்ரா' இன எருமைகளே காரணம். நாங்கள் தருவதற்கு முன்னால், இந்த வட்டாரத்தில் உயர் இன மாடுகள் ஒன்றுகூட இல்லை. ஒரு வேளைக்கு 13.05 லிட்டர் பால் கறக்கக்கூடிய மாடே இங்கு இருக்கிறது. கடந்த ஐந்தாண்டுகளில் 1,100 எருமைகள் வாங்க நாங்கள் இருபத்திரண்டு லட்ச ரூபாய் கடன் வழங்கியிருக்கிறோம்!'' என்று பெருமிதத்தோடு நமக்குத் தெரிவித்தார் பரோடா வங்கி மாங்காடு கிளையின் மேலாளரான திரு சி. வி. சாஸ்திரி.

1971-ல் திறக்கப்பட்ட இந்த வங்கி மாங்காடு கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள பட்டு, நுகலிவாக்கம், தண்டலம், தண்டலம்



வட சென்னையிலுள்ள சிறுதொழில் சேவை நிறுவனப் பணியாளர்கள்.

காலனி, மேல்மாநகர், ரங்கநாத புரம், ஐயப்பன் தாங்கல், கிராமங்களிலும் உள்ள சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் நிலமற்ற விவசாயக் கூலிகள் ஆகியோரின் பொருளாதார நிலையை உயர்த்துவதில் முக்கியப் பங்கு வகித்து வருகிறது.

வாத்துகள், கோழிகள், வண்டி மாடுகள், சாண எரிவாயு அடுப்புகள், கறவை மாடுகள், முடியலங்கார நிலையக்கருவிகள் போன்றவற்றை வாங்க பரோடா வங்கி மூலமாகக் கடன் பெற்றவர்கள் என்ற வகையில்-திருமதி கே. பஞ்சம்மாள், திரு. வி.ஜெயராமன், திரு. தாண்டவன் திரு. கட்சிலிங்கம் திரு. என். பரமசிவம், அமீருல் அப்துல் கரீம், ஆள்வார் திருநகரி வி.இ. ஜெயராமன் ஆகியோரைப் பேட்டி கண்டபோது வங்கியின் சேவையினை எல்லோரும் வாய் விட்டுப் புகழ்ந்தார்கள்.

மாங்காடு கடைவீதியில் உள்ள 'மாங்காட்டம்மன் சாஃப்டி ஐஸ் சென்டர்' வைத்துள்ள திரு. கே. ஏ. மதியழகன் என்கிற பி.எஸ்சி,. பட்டதாரி ஒருவரை நமக்கு அறிமுகம் செய்தார்கள்.

''வேறு வேலை கிடைக்காத நிலையில், பரோடா வங்கியில் பன்னிரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கித்தான் இந்தக் கடையை வைத்தேன். வியாபாரம் நல்ல படி நடப்பதால் இப்போதுதான் வாழ்க்கையிலேயே எனக்குப் பிடிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று பெருமகிழ்ச்சியோடு சொன்னார் அந்த இளைஞர்.

அம்மன் கோயிலடியில் கடை வைத்திருக்கும் திரு. எம். பி. கிருஷ்ணன் சாண எரிவாயு அடுப்பு அமைக்கத் தனக்குக் கடன் தந்து உதவிய வங்கியின் சேவையைப் பாராட்டினார்.

சைவ உணவு விடுதி வைத்து நடத்தும் திரு. டி. கே. மணி என்பவர் வங்கியின் சேவை பற்றிச் சொல்லும்போது கண் கலங்கினார் — ''வெடியங்காடு கிராமத்திலேருந்து வெறும் மேல் துண்டோட இந்த ஊருக்கு வந்து சேர்ந்த நான், இன்னைக்கு இப்பிடி ஓட்டல் வெச்சி நடத்துற அளவுக்கு வளர்ந்திருக்கேன்னா... பரோடா வங்கி மூலம் கெடச்ச பணம்தாங்க காரணம். அவங்க




மாண்புமிகு செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள், தியாகராய நகர் கிளை வங்கியின் வெள்ளி விழாவில் பங்கேற்றுப் ''பலதொழில் சேவை நிறுவனத்'' தைத் துவக்கிவைத்தார்.

மட்டும் தாராள மனசோட கடன் தந்திருக்கலேன்னா நான் எப்பிடியோ கெட்டழிஞ்சிருப்பேங்க!''

திரு. சி. பி. சாஸ்திரி வங்கியின் சேவை பற்றி மூச்சு விடாமல் சொல்லிக் கொண்டேயிருந்தார். ''நாங்கள் கடன் தரவும், அதை வசூலிக்கவும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு பாடுபட்டு வருகிறார் எங்கள் வங்கி வேளாண்மை அலுவலரான விஜயன்'' என்றும் அவர் தன் அலுவலகப் பணியாளர் ஒருவரைப் பற்றி நன்றியோடு குறிப்பிட்டார்.

'பரோடா வங்கி' ஆற்றி வரும் பலதரப்பட்ட சேவைகளை நாம் அறியவும்-நேரில் காணவும் உதவிய திரு. சுரேஷ் குமாருக்கு நன்றி தெரிவித்துவிட்டு விடைபெறுகிறோம் நாம்.

மாங்காடு வங்கியின் கிளை அலுவலர்கள்.



**மாணவர் பக்கம்**

# உயர்ந்த மனம்

பி.வி.கிரி

**பொ**ருட்காட்சி அன்றைக்குத் தான் ஆரம்பம். கூட்டத்துக்குக் கேட்கவா வேண்டும்? எள்போட்டால் எண்ணெய் ஆகும் அளவுக்குப் பெருங்கூட்டம்!

எங்கு பார்த்தாலும் வண்ண விளக்குகள், பல விதமான பொருள்கள் விற்கும் ஏராளமான கடைகள், மிகப் பெரிய ராட்டினம், அழகிய பூங்காக்கள், நாடக, திரைப்படக் காட்சிகள் இப்படிப் பல பொழுதுபோக்கு அம்சங்கள் மனத்துக்குத் தெம்பூட்டும் வகையில் அமைந்திருந்தன.

பெற்றோர்கள், தம் பிள்ளைகளுடன் பொருட்காட்சியைக் கண்டு ரசித்துக் கொண்டே வந்தார்கள். பாலுவும் தன் பெற்றோருடன் ஒவ்வொரு கடையாகப் பார்த்துக் கொண்டே வந்தான். அவனுக்கு நெடு நாட்களாக ஒரு ஆசை. புதிய அழகிய தோல் செருப்பு ஒன்று வாங்க வேண்டும் என்ற ஆசைதான் அது! பக்கத்து வீட்டு ராஜாவைப் போல தோல் செருப்புப் போட்டுக் கொண்டு 'ஜம்'மென்று நடக்க வேண்டும் என்று அவன் கனவு கண்டுகொண்டிருந்தான். அந்தக் கனவு நனவாகும் நேரம் நெருங்கிவிட்டது. ஆம். அதோ! ஒரு செருப்புக் கடை. வித விதமான சிறிய பெரிய காலணிகள் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

கடையைப் பார்த்துவிட்ட பாலு, ''அப்பா! அப்பா! செருப்பு வாங்கித் தாங்கப்பா! எத்தனை நாளா கேட்டுக்கிட்டிருக்கேன்?'' என்று தன் தந்தையின் கையைப் பிடித்து இழுத்தான்.

அவன் தந்தையும் அவனுடைய நெடுநாளைய ஆசையைப் பூர்த்தி செய்யும் வகையில், அவனை அந்தக் கடைக்குள் அழைத்துச் சென்றார்.

பாலுவின் கண்கள் கடைக்குள்ளிருந்த எல்லாச் செருப்புகளையும் ஒரு முறை வட்டமிட்டன.

கடைக்காரர், பாலுவின் காலுக்கு ஏற்ற ஒரு அழகிய செருப்பைக் கொண்டு வந்து அவன் காலில் மாட்டினார். அது அவனுக்கு ரொம்பவும் பிடித்துவிட்டது. பச்சையும், மஞ்சளும் கலந்த நிறத்தில் அந்தச்செருப்பு பார்க்க அழகாக இருந்தது. அதைக் காலில் அணிந்துகொண்டு கடைக்குள்ளேயே இப்படியும் அப்படியும் சிறிது நேரம் நடந்தான், அவனுக்குப் பரம திருப்தி.

''நாளைக்கு ராஜாவுக்கு முன்னாலே இதைப் போட்டுக்கிட்டு போகப் போறேன். எப்பப் பார்த்தாலும் 'புதுசு புதுசு'ன்னு தம் பட்டம் அடித்துக் கொள்ளும் ராஜாவின் கொட்டத்தை அடக்கப்போறேன்'' என்று அப்போதே எண்ணிக் கொண்டான் பாலு.

பாலுவின் தந்தை அந்தச் செருப்புக்கான பணத்தைக் கொடுத்துவிட்டு, அட்டைப் பெட்டியோடு கொடுத்த அதை பாலுவிடம் கொடுத்தார்.

பாலு மிகுந்த மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொண்டு, அடிக்கடி அதைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்!

**ம**றுநாள் காலை.

இத்தனை நாள். பாலுவின் கால்களைப் பற்றிக் கொண்டிருந்த அந்தப் பழைய தேய்ந்து போன ரப்பர் செருப்புக்கு அன்று விடுதலை கிடைத்தது! புதிய தோல் செருப்புகள் அவன் கால்களை அணி செய்தன. அதைப் போட்டுக் கொண்டு அன்றைய தினம் அவன் பள்ளிக்குப் போனான்.

பாலு எட்டாவது வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். 'நல்ல மாணவன்' என்று எல்லாராலும் பாராட்டப் பெறுபவன். ஊர்ச் சண்டைக்குப் போகமாட்டான். அதனால் அவன் பெற்றோர்களும் எந்தத் தொந்தரவும் இல்லாமல் நிம்மதியாய் இருந்தார்கள்.

பாலு அவர்களுக்கு ஒரே பிள்ளையாதலால், அவன் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தான். அவன் எதைக் கேட்டாலும் தட்டாமல் அவன் பெற்றோர்கள் வாங்கித் தந்தார்கள்.

பக்கத்து வீட்டு ராஜா, பாலு



வின் பள்ளியில்தான் படித்துக் கொண்டிருந்தான். படிப்பிலே அவ்வளவு 'சுறுசுறுப்பு' என்று சொல்ல முடியாது.

ஒவ்வொரு நாளும் 'இந்தச் சட்டை புதுசு, இந்தப் பேனா புதுசு, இந்தச் செருப்பு புதுசு, என்று பெருமையடித்துக்கொள்வான். அதோடு 'இவன் அப்படி. அவன் அப்படி' என்றெல்லாம் புறம்பேசித் திரிவான். இப்படி அவன் புறம் பேசும் பட்டியலில் பாலுவும் இருந்தான்.

பாலுவின் புதுச் செருப்பைக் கண்ட அவனுடைய நண்பர்கள் 'மிக நன்றாக இருக்கிறதே!'' என்று சொன்னார்கள். ஆனால், ராஜாவோ ''பூ, இது ஒரு செருப்பா? இதேபோல் நான் மனசு வைச்சா, நாளைக்கே வாங்குவேன் தெரியுமா?'' என்றான் வீராப்புடன்.

ஒருநாள் பலத்த மழை!

பள்ளிக்கு எப்படிப் போவது என்றே தெரியவில்லை. புதுச் செருப்பைப் போட்டுக் கொண்டு 'மழை நிற்குமா' என்று வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் பாலு.

'தோல் செருப்பைப் போட்டுக் கொண்டு மழையில் போனால், நனைந்து, பிறகு அறுந்து விடுமே!' என்று அதைக் கழற்றிப் பத்திரமாக அட்டைப் பெட்டிக்குள் வைத்துவிட்டு, வெளியே தூக்கி எறியாமல், பத்திரமாக வைத்திருந்த பழைய தேய்ந்துபோன ரப்பர் செருப்பை எடுத்துக் காலில் மாட்டிக் கொண்டான்!

லேசாக மழைத் தூரல் இருந்தது. விறுவிறுவென பள்ளிக்கு நடந்தான் பாலு.

அதிக விலையுள்ள, புதிய தோல் செருப்பை மழையில் போட்டுக் கொண்டு போக அவனுக்கு மனம் வரவில்லை. அதனால் ஒவ்வொருநாளும் மழை இருக்கிற வரை அவன் அதைப் போடவே இல்லை. பழைய ரப்பர் செருப்புடனேயேதான் அவன் பள்ளிக்குப் போனான்.

சாதாரணமாகப் பள்ளிக்குப் போகும் போதெல்லாம், அந்தப் புதிய தோல் செருப்பை நன்றாகத் துடைத்து விட்டுத்தான் போட்டுக் கொள்வான். சுருங்கச் சொன்னால், எந்தப் பொருளையுமே அவன் ஒழுங்காகவும், சுத்தமாகவும் வைத்திருந்தான்.

ஒரு சமயம், பாலு தன் உறவினர் ஒருவரின் பிறந்தநாள் விழாவுக்குப் பெற்றோர்களுடன் சென்றிருந்தான். பிறந்த நாள் விழா கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது.

பாலு வெள்ளைப் பாண்ட்டும், வெள்ளைச் சட்டையும் அணிந்து சொண்டு 'ஜம்' மென்று வந்திருந்தான்.

விழா முடிந்து எல்லாரும் திரும்பிக் கொண்டிருந்தனர். கலகலப்பாகப் பேசிக் கொண்டே வந்த பாலு, செருப்பை விட்ட இடத்துக்கு வந்தான். தன் தந்தையின் செருப்புகள் இருந்தன. ஆனால்.. ஆனால்... பாலுவின் அந்தச் செருப்பகள் எங்கே?

அவனும் அவன் தந்தையும் எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தார்கள். அந்தச் செருப்பு காணவே இல்லை. ஆக, அது திருடு போய்விட்டது!

ஒருநாள் மார்க்கெட்டுக்குப் போய் காய்கறிகள் வாங்கிக் கொண்டு அந்தப் பெரிய தெரு ஒன்றின் வழியாக வந்துகொண்டிருந்தான் பாலு.

அப்போது நடுத் தெருவில் ஸ்கூட்டர் மோதி ஒரு சிறுவன் கீழே விழுந்து கிடந்தான். அவன் வலது காலிலிருந்து ரத்தம் வந்து கொண்டிருந்தது. கைகளிலும் லேசான காயங்கள். நல்ல காலம் சரியான சமயத்தில் 'பிரேக்' போட்டு நிறுத்தியதால் அவன் பிழைத்தான்.

அடிபட்ட அந்தச் சிறுவன் 'ஐயோ! அம்மா!' என்று அழுது கொண்டிருந்தான். இதைப் பார்த்த பாலுவுக்குப் பரிதாபமாக இருந்தது. காய்கறிப் பையை நடைபாதையில் வைத்துவிட்டு அந்தச் சிறுவனைப் போய்ப் பார்த்தான். அந்தச் சிறுவன் வேறு யாருமல்ல. ராஜாதான்!

பாலு தாமதிக்கவில்லை. தன் பாக்கெட்டிலிருந்த கைக்குட்டையை எடுத்துக் கிழித்து, வழிந்து கொண்டிருந்த ரத்தத்தைத் துடைத்தான்.

அதிர்ச்சியில் மயங்கி இருந்த ராஜாவின் முகத்தில் தண்ணீரைத் தெளித்தார். ஸ்கூட்டர்காரர். லேசாகக் கண் திறந்து பார்த்தான் ராஜா. அவன் வலது காலைத் தன் மடியில் தூக்கி வைத்துக் கொண்டு கட்டு கட்டிக் கொண்டிருந்தான் பாலு.

அருகே, ராஜா போட்டிருந்த செருப்புகள் இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கிடந்தன! அதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த பாலு திடுக்கிட்டான். ஆம். அந்தச் செருப்பு பாலுவினுடையதுதான்!

ராஜா மெல்ல எழுந்தான். பாலுவைப் பார்க்கவே அவனுக்கு வெட்கமாக இருந்தது.

''பாலு! என்னை மன்னிச்சுடு! நான்தான் உன் செருப்புகளைத் திருடினேன். பிறந்தநாள் விழாவுக்கு வந்திருந்தேன் இல்லையா? அப்பத்தான் இப்படிச் செய்துட்டேன். செருப்பு திருடின காலுக்குக் கட்டுப் போட்டியே உன் உயர்ந்த மனசைப் புரிஞ்சிக்கிட்டேன் பாலு. வந்து... இதை வேறெ யாருகிட்டேயும் சொல்லாதேடா!...'' என்று கெஞ்சினான் ராஜா.

''டேய், ராஜா! எப்ப என் செருப்புமேலே ஆசை வைச்சு எடுத்துக்கிட்டியோ, அதை மறுபடியும் நான் வாங்கிக்கிறது நல்லதில்லே. வந்து... அதை நீயே வைச்சிக்கோடா, நீயே வைச்சிக்கோ...'' என்று பாலு சொன்னதும் ராஜா ஆனந்தக் கண்ணீர் விட்டு அழுதான்.




ஜப்பானை சேர்ந்த டோஷிபா கார்ப்பரேஷன் உள்ளங்கை அளவில் லிக்விட் கிரிஸ்டல் சாதா தொலைக்காட்சியைத் தயாரித்துள்ளனர்,

''எனக்கு டெலிபோன் செய், நேராக அலுவலகத்திற்கு வா, வீட்டிற்குப் போ'' என்பன போன்ற தகவல்களைத் தெரிவிக்கும், பையில் வைத்துக் கொள்ளும் தொலைபேசி எச்சரிக்கை செய்யும் கருவி ஒன்றை ஜப்பானின் நிப்பன் டெலிகிராப் டெலிபோன் பப்ளிக் கார்ப்பரேஷன் தயாரித்துள்ளது.

இந்தியாவிலேயே முதன் முறையாக செயற்கை டீசலை மத்திய எரிபொருள் ஆராய்ச்சிக் கழகம் தயாரித்திருக்கிறது.

மண்ணெண்ணெய் விளக்கிற்குப் பதிலாக உபயோகிக்கக் கூடிய கொட்டைகளை அளிக்கும் ''விசைமரம்'' ஒன்று பிலிப்பைன்ஸ் காடுகளில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

**விக்கல் எதனால் ஏற்படுகிறது? தண்ணீர் குடித்தாலும் விக்கல் ஏன் ஏற்படுகிறது.?**

மூச்சு விடும்போது குரல் நாண்கள் விலகி இருக்கும். அப்படி இருந்தால் தான் மூச்சுக் காற்று தடையின்றிப் போய் வர முடியும். மூச்சுவிட்டுக் கொண்டிருக்கும்போது, குரல் நாண்கள் நெருங்கி, அதே சமயத்தில் இடைப்படாம் ( Diaphragam ) திடீரெனச் சுருங்குவதால் விக்கல் உண்டாகிறது.

காரமான பொருளைத் தின்றால் அது, மேல் உணவுப்பாதை சீதச்சவ்வை உறுத்தி விக்கலைத் தூண்டும். இவ்வாறு உண்டாகும் விக்கல்தான், நீர் அருந்துவதால் தணியும். சிலபோது, இடைப்படாத்து நரம்பின் நுண்ணுணர்வு அதிகரிப்பதால் விக்கல் உண்டாகலாம். இது அவ்வப்போது நேரும் தசைத்துடிப்புக்குத் தப்பானது. மேல் சிரணப்பாதையின் சீதச்சவ்வில் எதிர் உறுத்தல் செய்து இவ் விக்கலை அடக்க முடியும். சுக்கும் வெல்லமும் சேர்த்து இடித்துத் தின்பது இவ்வாறு பயன் விளைவிக்கிறது.

மூச்சு மையத்தின் தொழில் தற்காலிகமாகச் சீர் கெடுவதாலும் விக்கல் நேரிடலாம். கார்பன் டை ஆக்சைடு சுவாசித்தல், குளோர்பரமாசின் கொடுத்தல் ஆகியவை இவ்வகை விக்கலை அடக்கும். உதர உறைப்பை அழற்சி இடைப் படலத்தைஉறுத்துவதாலும், கழுத்தில் வழிநீர்க் கோளப்பருமன் இடைப்படாத்து நரம்பை உறுத்துவதாலும் தொடர்ந்த விக்கல் உண்டாகும். இதற்கு அடிப்படை நோய் தீர்ப்பதே சிகிச்சை.

நீரகம் கெட்டு இரத்தத்தில் நச்சு சுமர்வதால் முகுள மையங்கள் பாதிக்கப்பட்டு விக்கல் எதற்கும் கட்டுப்படாமல் நீடிக்கக் கூடும். இது அந்நோயின் இறுதி அறிகுறியாக அமையும். பின்னே கூறிய மூன்று நோய்க் காரணங்களில், விக்கலைக் காட்டிலும் நோயின் துன்பங்களே முன்னிற்கும். நல்லுடலில் காணும் விக்கலினால் ஆபத்தில்லை.

**செவியில் சீழ்வடியக் காரணம் என்ன? இதனை எப்படிப் போக்கலாம்.?**

மேல்மூச்சுப் பாதையில் நேர்ந்த நுண்ணுயிர் ஆக்கிரமிப்பு இடைச் செவிக்குப் பரவி அங்குச் சீழ்பிடித்து, செவிப்பறையைப் பொத்துக்கொண்டு வெளியேறுவதால், செவிப்பறை ஓட்டையாகும். சாதாரணமாக, சீழ் வடிந்தபின் இப் பொத்தல் மூடிவிடும். ஆனால் ஆக்கிரமிப்பு நீங்காமல், நாசித் தொண்டையிலோ, நாசிப் பக்கப் புரைகளிலோ, அன்றி இடைச் செவியுடன் தொடர்பு கொண்டுள்ள மரத் தாங்கும் புரைகளிலோ நீடித்து நிலைப்பதால், ஓட்டை மூடாமல், அடிக்கடிக்கோ, தொடர்ச்சியாகவோ காதினின்று சீழ் ஒழுக ஏதுவாகிறது.

## அழகிய கையெழுத்து அமைய...



அழகிய கையெழுத்து அமைய வேண்டுமா? அப்படியானால் சித்திரம் வரைய கற்றுக் கொள்ளுங்கள். இப்படிச் சொன்னவர் யார் தெரியுமா? அண்ணல் காந்தியடிகள்தான்!

புகைப்படம் உதவி:
'பார்ங்க் ஆப் இந்தியா'

ஆக்கிரமிப்புத் தங்கியுள்ள இடங்களைத் தேடிக் கண்டுபிடித்து, அறுவையாலும், உயிர்ப்பகை மருந்துகளாலும் ஆக்கிரமிப்பை ஒழித்து, சீழ் ஒழுக்கு நிரந்தரமாக நின்றபின், காது ஓட்டையை வடிவமைப்பு அறுவையால் ( Plastic Surgery ) செப்பம் செய்யலாம். இது நீடித்து நிதானமாகச் செய்யப்பட வேண்டிய சிகிச்சை. கைதேர்ந்த, காது, நாசி தொண்டை மருத்துவ வல்லுநரால்தான் இது இயலும்.



# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR

# குடிப்பழக்கம் —நாட்டுப்புற மக்களின் நற்கருத்துக்கள்

—டாக்டர் ஆறு. இராமநாதன்

குடிப்பழக்கம் சமுதாயத்தைப் பீடித்துள்ள பெருநோய்களுள் ஒன்று. இந்நோயினால் நடுத்தர அடித்தள மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

நமது நாட்டின் பெரும்பாலான மக்கள் கிராமப்புறங்களிலேயே வாழ்கின்றனர். குடிப்பழக்கத்தால் ஏற்படும் தீமைகளை அவர்கள் தங்களின் அன்றாட வாழ்க்கையில் கண்கூடாகக் காண்கின்றனர். அப்பழக்கத்தால் பாதிக்கப்பட்டோரும் அப்பழக்கத்தின் தீமையை உணர்ந்தோரும் அதன் தீய விளைவுகள் குறித்த தங்களின் உள்ளத்து உணர்வுகளைப் பாடல்களாக வெளிப்படுத்துகின்றனர்.

எனது டாக்டர் பட்ட ஆய்விற்காகத் தென்னார்க்காடு மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரித்தபோது குடிப்பழக்கத்தின் தீமைகள் குறித்த ஏராளமான பாடல்கள் கிடைத்தன.

ஆண்களிடையே மிகுதியாகக் காணப்படும் இப்பழக்கத்தால் பெண்களே மிகுதியான பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். எனவே, அவர்களின் பாடல்களில் இப்பழக்கத்தின் தீமைகளைச் சுட்டும் கருத்துக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

**தெருக்கூத்துப் பாடல்கள்**

கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் தெருக்கூத்துக் கலைக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. தெருக்கூத்து மேடைகள் மக்களுக்கு வெறும் பொழுது போக்குக் களங்களாக மட்டுமே செயற்படுவதில்லை. வாழ்க்கைக்குத் தேவையான நீதிகளை எடுத்துரைப்பதில் அவை பெரும் பங்காற்றுகின்றன. குடியின் தீமை பற்றி எடுத்துக் கூறி எச்சரிக்கை விடுக்கும் பாடல்கள் தெருக்கூத்து மேடைகளில் மிகுதியாகப் பாடப்படுகின்றன.

திருவள்ளுவர் முதற்கொண்டு பல்வேறு தமிழ்ச் சான்றோர்கள் குடிப்பழக்கத்தின் தீமையைச் சுட்டிக் காட்டி அதனைத் தவிர்க்குமாறு அறிவுரை கூறி வந்துள்ளனர். அவர்களின் கருத்துக்கள் எழுத்தறிவற்ற - அறியாமைமிக்க—ஏழை எளிய மக்களைச் சென்றடைந்திருக்குமா என்பது ஐயத்திற்குரியதே. ஆனால் நாட்டுப்புறப் பாடல்களோ எழுத்தறிவில்லாத மக்களிடையே செல்வாக்குடன் திகழ்வதால் அவர்களுக்கு நீதிபுகட்டும் செயற்பாட்டினைச் செய்வதில் பெரும்பங்காற்றுகின்றன. சான்றாகச் சில பாடல்களைக் காணலாம்.

**காதலியை மறந்த காதலன்**

குடிப்பழக்கம் சொந்த உறவுகளையே மறக்கச் செய்யும் ஆற்றல் மிக்கது. குடிபோதையில் காதலியையே மறந்தவனைப் பற்றிப் பின்வரும் பாடல் தொடர்கள் சுட்டுவதைக் காணலாம்.

பனமரத்தில பாளகட்டி அந்த
பாதாள லோகத்தில் கள்ளெறக்கி
கள்ளுக் குடிக்க போனெடத்த அவன்
என்ன மறந்தான் பாருங்கடி(1)

காதலியின் கூற்றாக அமைந்த பாடல் இது.

**மனைவியை அடிக்கும் கணவன்**

மரத்திலிருந்து கள் இறக்கப்படும்போது ஏராளமான பூச்சிகள் கள்ளில் விழுந்துவிடுவதுண்டு. கள் குடிப்பவன் அதனை ஒரு சிறிதும் பொருட்படுத்துவதில்லை. ஆனால் வீட்டிலோ மனைவி சமைத்த உணவில் தவறுதலாகக் கல் கிடந்து விட்டால் அதனை அவனால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. அவளை அடித்துத் துன்புறுத்த அவன் தயங்குவதில்லை. இதனை ஒரு பாடல் அழகாகச் சுட்டிக் காட்டுகின்றது. அத்துடன் கள் குடிக்கக் கூடாது என்பதையும் கள் குடித்தால் பித்தம்தலைக்கேறும் என்பதையும் மனைவியை அடிப்பது அவள் வயிற்றில் வளரும் குழந்தைக்குக் கேடு என்பதையும் அப்பாடல் தெளிவுபடுத்துகின்றது. பாடல் வருமாறு :

கள்ளுலே பூச்சி கெடந்தா
கலக்கி மலக்கி குடிக்கிறாண்டி
சோத்திலே கல்கடந்தா
சொந்த பொண்டாட்டியஅடிக்கிறாண்டி
கள்ளெல்லாம் குடிக்காதடா
கருபுத்தி காரபாவி
கள்ளெல்லாம் குடிக்காதடா

நித்தம் கள்ள குடிக்காதடா
பித்தம் போயி சிரசிலேறும்
பெண்டாட்டிய அடிக்காதடா
புள்ளைக்கொரு மாத்தம்வரும்(2)

**அமைதியிழந்த குடும்பம்**

குடிகாரக் கணவனிடம் 'குடிக்காதே' என்று பலமுறை புத்தி கூறுகின்றாள் மனைவி. அப்படியும் அவன் குடிப்பதை நிறுத்தவில்லை. அவள் மனம் வெறுத்து 'நீயும் ஒரு ஆம்பளையா' என்று கூறிக் கண்டிக்கிறாள். அவன் தன் தவற்றை உணரவில்லை. மாறாகத் தன் செயல் சரியானதே என்று நியாயப்படுத்துகின்றான். தன்னைக் கண்டித்தவளுக்கு வசைச் சொற்களால் அர்ச்சனை நடத்துகின்றான். அவள் சினத்தின் எல்லைக்குச் சென்று சீறுகிறாள். இப்படி ஒரு குடும்பக் காட்சியைப் பின்வரும் பாடலில் காணலாம்.

எத்தனையோ புத்திகள்
எடுத்துரைத்தேன் சாராயத்த
நித்தம்போய் குடிக்கிறிய
நீயும்ஒரு ஆம்பளையா
ஒன்னோடு நான் பேசி நீ
ஒதுங்கிப் போடா சீசீ

கஷ்டப்பட்டு சம்பாரித்தேன்
காலுரூவா நான்குடித்தன்
நஷ்டம் உனக்கு வந்ததென்ன
நாசக்கார............
ஒன்னோட நான் பேசி நீ
நம்பலாமா போசீ

கஞ்சிக்கு உப்பு இல்ல
கால்தம்படி கையில் இல்ல
மஞ்சகுளித்த பையா
நாசக்கார......
ஒனக்கொரு பெண்டாட்டி—ஒன்
ஒழுங்குக்கொரு*பாட்டி(3)
*(வைப்பாட்டி)

குடும்பத் தலைவனிடம் உள்ள குடிப் பழக்கத்தால் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஒரு குடும்பம் எவ்வாறு அமைதியிழந்து அல்லற்படுகிறது என்பதற்கு இப்பாடல் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

**போக்கிரி வேலை**

'சாராயத்தைக் குடித்து சந்தில் மயங்கி விழ வேண்டாம்' என்று அறிவுரை கூறும் பாடலொன்று சாராயம் காய்ச்சும் முறையையும் வருணிப்பதைக் காணலாம்.

போகாதேடா தம்பி போகாதேடா
போக்கிரி வேலைக்குப் போகாதேடா
வேலம்பட்டைய வெட்டாதேடா தம்பி
வெல்லத்திலே போட்டு ஊற
வைக்காதேடா
பானமேலப்பான அடுக்காதடா தம்பி
பாட்லுபாட்லா சாராயம் எறக்காதேடா
சாராயத்தக் குடிக்காதேடா தம்பி
சந்திலேயும் வீழாதடா

இப்பாடல் சாராயம் காய்ச்சிக் குடிப்பதைப் 'போக்கிரி வேலை' என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

**குடிக்காதே**

கள்ளச் சாராயம் காய்ச்சும் சமூக விரோதிகள் மக்கள் நலன் குறித்துக் கவலைப் படுவதில்லை. அதிக போதை வேண்டும் என்பதற்காக எதை எதையோ சேர்க்கிறார் கள். இவ்வாறு காய்ச்சப்படும் சாராயத்தைக் குடிப்பதால் குடிப்பவனின் உடல் நலம் கெடுகிறது. பொருளை இழப்பதால் பசியிலும் பட்டினியிலும் வாட நேரிடுகிறது. தன்நிலை இழப்பதால் கொலை செய்யவும் தயங்குவதில்லை. இதைப் பற்றியெல்லாம் விரிவாக எடுத்துக்கூறி சாராயம் குடிக்கக் கூடாது என்று போதிக்கின்றன இரு பாடல்கள். அவை வருமாறு :

ஓ சாராயக் குடியினாலே
ஏராளமானகொலைகள்
தாராளமாய் விழுகின்றன !
பாழும் சாராயக் குடியாலே
பட்டினியதிகம் புவிமேலே
இந்தப் பரிதாப நிலையதை
அறிந்த நம் காந்தியும்
பரிகெழுந்துமே மொழிந்தார்

* * *

அரசாங்க உத்திரவை மீறி
அனுதினம் குடிப்பதாகக் கேளீர்
உங்கள் ஈரலை அரித்து அந்த
வீரமுள்ள நமச்சாரம்
வீரமும் அழிந்து மடிவீர்

* * *

பட்டைச் சாராயம் குடியாதே மனிதா நீ
பட்டைச் சாராயம் குடியாதே

பட்டைச் சாராயத்தாலே
கெட்டார் சிலது மக்கள்
விட்டு விடடா அதை
வீணாக சாகாதே (பட்டைச்)

பட்டைச் சாராயத்தாலே
கெட்டிடும் குடற்பையது
கொஞ்சங் கொஞ்சமாகக் குடல்
வெந்து நீ சாக வேண்டாம் (பட்டைச்)

**முடிவுரை :**

குடிப்பழக்கத்தால் குடிப்பவனின் உடல் நலம் கெடுகிறது, குடும்பம் அமைதியிழக்கிறது, மனநலம் கெடுகிறது—அதனால் கொலை போன்ற சமூகக் குற்றங்கள் மலிகின்றன. எனவே குடிப்பழக்கத்தை மேற்கொள்ளக்கூடாது. காட்டப்பட்ட சான்றுகள் அனைத்தும் இந்நான்கு கருத்துக்களையே தெளிவுபடுத்துகின்றன. இக்கருத்துக்கள் குடிப்பழக்கத்தால் பெரிதும் பாதிக்கப்படும் பெண்களிடமிருந்தும் அப்பழக்கத்தின் தீமைகளை உணர்ந்து அதனை மக்களுக்குப் போதிக்க நினைக்கும் நல்லோரிடமிருந்தும் வெளிப்பட்டவை. அனைவரின் சிந்தனைக்கும் உரியவை.

**பாடல் வழங்கியோர்**

1. சந்திரா,
   ஒலக்கூர், திண்டிவனம் வட்டம்.
2. வேலம்மாள்,
   சோனங்குப்பம், கடலூர் வட்டம்.
3. வெங்கடேசன்,
   செங்குறிச்சி, உளுந்தூர்ப்பேட்டை வட்டம்.
4. வீரன்,
   வடமலையனூர், திருக்கோவிலூர் வட்டம்.
5. கோவிந்தசாமி,
   கிள்ளை, சிதம்பரம் வட்டம்,
6. வேலாயுதக் கவுண்டர்,
   பேரங்கியூர், உளுந்தூர்ப் பேடடை வட்டம்.

# உலகச் சூழல் நலவியல் நாள் ஜூன் 5

சு. பா. தாகூர்
தலைமைப் பொறியாளர் மற்றும்
தனி அலுவலர், சூழல் நலவியல்
துறை, தமிழ்நாடு அரசு.

நமது ஸ்தூல மற்றும் உயிரக சுற்றுப்புறச் சூழல், விஞ்ஞானத்தின் நடைமுறைக்கும், பாதுகாப்பிற்கும் உட்பட்டு இயங்கி வருகிறது. உற்பத்தித் திறனைப் பெருக்க உதவும் விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கு மனிதனின் பகுத்தறிவும், ஆர்வமும், அனுபவமும் ஆதாரமாக அமைந்துள்ளன. தொழில் துறையிலும், விவசாயத்திலும், உற்பத்தித் திறன் அதிகரித்தது. இப்பொருட்களைச் செவ்வனே பகிர்ந்தளிக்க போக்குவரத்திலும், வர்த்தகத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டது. இதனால் மனித வாழ்க்கைத் தரத்தில் மாற்றம் ஏற்பட்டு, நகர்ப்புறப் பெருக்கத்திற்கு ஏதுவாயிற்று.

உலகில் உள்ள பல பகுதிகளில் நகர, கிராமப் பொருளாதார வளர்ச்சி, சுற்றுப்புறத்திற்குச் சம்பந்தமில்லாமல் போயிற்று. தனிப்பட்டவர்களின் பொருளாதாரப் பேராசையினாலும், அரசாங்கங்களின் குறுகிய காலப்பலனைக்கருத்தில்கொண்டு போடப்பட்ட பல திட்டங்களினாலும் சுற்றுப்புறத்தின் தன்மை கெடவும், மாசு படவும் ஏதுவாயிற்று. உலகில் எந்தப் பகுதியிலும் உள்ள சுற்றுப்புறம் அல்லது சுற்றுப்புறத் தன்மை பற்றி முழுமையாக அறிய வேண்டுமானால் உயிரினங்களின் ஆதாரங்களைப் பாதிக்கும் மனித நடவடிக்கைகளையும், அதை மாசுபடுத்தும் அல்லது பாதிக்கும் பிரச்சினைகளைத் தொடர்ச்சியாகக் கண்காணித்தும், ஆவன செய்ய வேண்டும். அடிப்படை உயிரியல் மற்றும் பௌதீக விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல துறைகளையும் உள்ளடக்கியதாக, சுற்றுப்புற விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் உள்ளன.

வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் சுற்றுப்புறச் சூழலை அடிப்படையாகக்கொண்டிருக்க வேண்டும். வனப் பாதுகாப்பு, மண் வளப் பாதுகாப்பு, நீர்ப் பாதுகாப்பு முதலியன சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில் முக்கிய அம்சங்களாகும்; மனிதன் வாழும் இடத்தின் முழுமையான சூழலைப் பாதுகாப்பதற்கும். விவசாய, மீன் வளர்ச்சிக்கும் இவற்றிற்கு உறுதுணையாகும் தொழிற்கூடங்களையும், நிலம், நீர் பயன்படுத்தும் திட்டங்களையும், உள்நாட்டு நீர் நிலைகளையும் முகத்துவாரப் பகுதிகளையும், சரிவரத் திட்டமிடுவதும் அவசியமாகும். சுருங்கக் கூறின், உலகில் எந்தப் பகுதியிலும் உள்ள உயிரினங்களின் சமநிலை, சுற்றுப்புறத்தைச் சரிவரத் திட்டமிடுவதைப் பொறுத்தே உள்ளது.

சுற்றுப்புறத்திற்குத் தொழிற்புரட்சியால் ஏற்பட்ட பாதிப்பு சமாளிக்க முடியர்ததெனப் படிப்படியாக உணரப்பட்டது. தொழிற்சாலைகளுக்குத் தேவையானமூலப் பொருட்களுக்காக இயற்கையின் வளங்களை அதிக அளவில் சுரண்டப்படுவதற்கும், பொருளாதாரப் பேராசை மூல காரணமாயிற்று. குடியமைப்பிற்காகவும், பயிரிடவும், எரிபொருட்களுக்காகவும், விறகிற்காகவும் காடுகள் அழிக்கப்பட்டன. நீர்ப்பிடிப்புப் பகுதியில் போதுமான மண் வளப் பாதுகாப்பின்மையால், மண்ணினைப் பாதுகாக்கும் தாவரங்கள் அழிவதற்கும், நீர் நிலைகள் தூரடையவும் ஏதுவாயிற்று.

நமது இயற்கை வளங்களை அளவிற்கு மீறி பயன்படுத்துவதால் சுற்றுப்புறச் சூழலின் தன்மை கெடுவதுடன், தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் திட, திரவ வாயு கழிவுகளால் நீர், நிலம், காற்று மாசுபடுவதுடன் சுற்றுப்புறச் சூழலின் சுகாதாரக் கேடுகளுக்கும் ஏதுவாகிறது. கிராமங்களின் மக்கட் பெருக்கமும் வறுமையும் வேலைவாய்ப்பின்மையும், கிராமப்புற மக்கள் தொழிற் பெருக்கமுள்ள நகரங்களுக்கும் பிற நகர்ப்புறங்களுக்கும் வருவதை ஓர் தொடர் நிகழ்ச்சியாக்கின. திட்டமிடப்படாத, கட்டுப்படுத்த முடியாத நகர மக்கட் தொகைப் பெருக்கமும், குடியிருப்பு வசதியின்மையும், துப்புரவு மற்றும் பிற வசதிகளற்ற வாழ்க்கைக்கு அடிகோலுகின்றன. மேலும் சுத்திகரிக்கப்படாத நகர, கழிவு நீர் மற்ற பிற கழிவுகள் நகரின் சூழல் மாசுபடுவதற்கும், நிலம், நீர் மாசுபடுவதற்கும் காரணமாக அமைகின்றன.

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க, சூழல் நலவியல் சட்டங்களால் ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகளைக் கட்டுப்படுத்துவதும், புதுத் தொழிற்சாலைகளுக்குத் தகுந்த முறையில் அனுமதி வழங்குவதும், சுற்றுப்புறச் சூழலைக் கருத்தில் கொண்டு திட்டப் பணிகளுக்கு



அனுமதி வழங்குவதும் இன்றியமையாதவையாகும். பொதுமக்களின் வசதியினை வலியுறுத்தும் வகையில் கிராம மற்றும் நகர வளர்ச்சிக்குத் திட்டமிடுவதும் நாட்டின் இயற்கை. வளங்களை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தும் பொருளாதாரக் குற்றவாளிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளும் இன்றைய குழந்தைகளின் நாளைய சுத்தமான சுகாதாரச் சூழலுக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

ஜனநாயக அமைப்பில் சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகளைத் தீர்க்கும் பல்வேறு முறைகளில் சூழல் நலக் கல்வி மிக முக்கியப் பங்கினை ஏற்கிறது. எல்லா நிலைகளிலும் சூழல் நலக் கல்வியின் முக்கியத்துவம் உணரப்படாவிட்டால் கடுமையான சட்டங்களோ, ஆட்சி முறைகளோ பயனற்றவையாகின்றன. இதை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பது கீழே விளக்கப்பட்டுள்ளது.



**பாடத்திட்டத்தின் மூலம் சூழல் நலக் கல்வி**

மனித நடவடிக்கைகளால், சுற்றுப்புறச் சூழலில் ஏற்படும் விளைவுகளைப் பற்றி கற்றறிய ஆரம்பப்பள்ளி முதல் பல்கலைக்கழக நிலைவரை, கல்விக்கூடங்கள் வாய்ப்பினை அளிக்க வேண்டும். மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பு பற்றித் தேவையான கருத்தினை வழங்க வேண்டும். சூழல் விஞ்ஞானம் பற்றிய அறிவும், சுற்றுப்புறச் சூழலின் பிரச்சினைகள், அப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் ஆகியவை பற்றி இளம்பிராயத்தில் கற்க வாய்ப்பளிக்க வேண்டும். இதனால் சுற்றுப்புறச் சூழல் பற்றிய உணர்வும் சுற்றுப்புறச் சூழலின் தன்மையைப் பாதுகாப்பதில் தகுந்த பங்கேற்கவும், வழி வகை செய்யப்படுகிறது. இந்நிலை அடைவதற்காகச் சுற்றுப்புறச் சூழல் விஞ்ஞானம் பற்றி உயர்நிலைப் பள்ளிக் குழந்தைகளுக்கான பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். இப்பாடத்தில் சுற்றுப்புறச் சூழலின் தன்மை பற்றிய கருத்து, சுற்றுப்புறச் சூழலுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள தொடர்பின் பல்வேறு நிலைகள் எவ்வாறு மனித நடவடிக்கைகள் சூழலின் தன்மையை மாற்றுகின்றன என்பன பற்றி இடம் பெறச் செய்யலாம். மேலும், சூழல் நலக் கல்வி, கலைக் கல்லூரி மற்றும் தொழில் நுட்பக் கல்லூரிகளின் பாடத் திட்டங்களிலும் இடம் பெறச் செய்ய வேண்டும்.

கல்வி நிலைக்கேற்றவாறு பாடத் திட்டத்தினைப் படிப்படியாக அதிகரிக்கலாம். தூய்மைக் கேடு, அளவு முறையின்றிக் காடுகளை அழித்தல், திட்டமில்லா நகர்ப்புற அமைப்ப, சுரங்கங்களும் அவற்றின் விளைவுகளும் ஆகிய சுற்றுப்புறச் சூழலின் நலக் குறைவுகளையும், சுற்றுப்புறச் சூழலின் தன்மையினை மேம்படுத்தும் முறைகளைப் பற்றிய கல்வி முறைகள் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

வகுப்பறையில் கற்றுத் தரப்படும் பாடம் தவிர, வெளிப்புறப் பயணக் கல்விக்கும், வகை செய்ய வேண்டும். தகுந்த போதனை வசதிகளுடன் இச்செலவு மேற்கொள்ளப்பட்டால், பல்வேறு உயிரின வாழ்க்கைச் சூழல் தொகுதிகள் பற்றியும், அவற்றில் வாழும் உயிரினங்கள் பற்றியும், தன்னுடைய உணவு, எரி பொருள், மூலப் பொருட்களின் தேவையை நிறைவேற்ற மனிதனின் நடவடிக்கைகள், உலகின் பல்வேறு பாகங்களில் சுற்றுப்புறச் சூழல் கேடுற ஏதுவான காரணங்கள் பற்றிய முதனிலை விவரங்கள் பெற முடியும்.

**சுற்றுப்புறச் சூழலும் தகவல் தொடர்பு சாதனங்களும்**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பின் முக்கியத்தைப் பரப்புவதில் தகவல் தொடர்பு சாதனம் முக்கியப் பங்கேற்கிறகு. இது சுற்றுப்புறச் சூழல் பிரச்சினை பற்றிய விழிப்புணர்ச்சியை, முக்கியமாக முதியோர்களிடையே ஏற்படுத்துகிறது. நாளேடுகள், பிற வெளியீடுகள், புத்தக வெளியீட்டு அச்சுத் துறை, வானொலி தொலைக் காட்சி ஆகியவை சில





தகவல் தொடர்ப சாதனங்களாகும். சமுதாயத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் செல்ல வாய்ப்பிருப்பதால், அச்சுத் துறையும், குறிப்பாக நாளேடுகள், பிற வெளியீடுகள், வானொலி முதலியன சூழல் நலப் பாதுகாப்பின் அவசியத்தை ஐயந்திரிபுற உணர்த்த முடியும். சுற்றுப்புறச் சூழலின் பிரச்சினைகளுக்கான காரணங்கள் பற்றியும் சுற்றுப்புறச் சூழலின் நலனைப் பாதுகாப்பதன் அவசியத்தைப் பற்றியும் குறிப்பிட்ட காலவரை முறைகளில் அச்சிட்டு வெளியிடவும், ஒலி பரப்பவும் செய்ய வேண்டும். தொலைக் காட்சி, திரைப் படங்கள் ஆகியவற்றை சுற்றுப்புறச் சூழல் கல்விக்காகப் பயன்படுத்தலாம். நச்சு, காடுகள் அழிதல், வன விலங்குகளும் தாவரங்களும் குறைந்து போவது ஆகிய சுற்றுப்புறச் சூழல் கேடுகளையும் இவற்றைத் தவிர்ப்பதற்கான முறைகள் பற்றியும், திரைப்படங்கள் தயாரிக்கலாம்.

**நேரிடைக் கல்வி-பொதுக் கூட்டங்கள் வெளியீடுகள் :**

பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் தவிர, தொழிலாளர்களும், தங்களுடைய தொழிலில் ஆபத்துக்கள் பற்றியும் அவற்றைத் தடுக்கும் முறைகள் பற்றியும் அறியும்படி செய்ய வேண்டும் முக்கியமாக சிமெண்ட், இரும்பு, இரசாயனம், சுரங்கங்கள், அனல் மின் நிலையங்கள் போன்ற தொழிற்சாலைகளின் தொழிலாளர்களும் அத்தொழிற்சாலைகளின் அருகாமையில் வாழும் மக்களும் உணரும்படிச் செய்ய வேண்டும். தொழிற் சங்கங்கள், தொழிலாளர்களுக்குத்தகுந்த முறையில் பயிற்றுவிக்க வேண்டும்.

தொழிற் சாலையினின்றும் வெளிவரும் கழிவுப் பொருட்களைத் திட, திரவ, வாயு தகுந்த முறையில் வரைமுறைகளுக்குட்பட்டு, நிலத்திலோ, நீரிலோ அல்லது கடலிலோ வெளியேற்றும் வகையில் சுத்திகரிக்கும் பொறுப்பினைத் தொழிலதிபர்கள் உணரும்படிச் செய்ய வேண்டியுள்ளது. தகுந்த சுத்திகரிப்பு முறைகளைத் தயாரித்தளிக்கவும், தொழிற் கூடங்களில் நச்சுப் பொருட்களின் அளவினைக் குறைக்கவும் ஆராய்ச்சி சாலைகளும், ஆலோசகர்களும் உள்ளனர்.

உள்ளாட்சிகளின் பொறுப்பும் தொழிற்சாலைகளின் பொறுப்பிற்குச் சற்றும் குறைந்ததல்ல. வீட்டு மற்றும் நகரக் கழிவு நீர் தகுந்த முறையில் சுத்துகரிக்கப்பட்டு வெளியேற்றப்படுவது, உள்ளாட்சியின் முக்கியப் பொறுப்பாகும். பல நகரங்களிலும் கழிவு நீர் சரிவரச் சுத்திகரிக்கப் பட்டு வெளியேற்றப்படுவதில்லை.

தீவிரப் பிரச்சாரம் மூலம் வசதிகளைப் பெருக்கியும், மக்கட் தொகையைக் கட்டுப்படுத்துவதும், நெருக்கத்தைக் குறைப்பதும் அரசின் கடமையாகும். கிராமப் பொருளாதாரம், முழு வேலைவாய்ப்பினை கிராமங்களிலேயே நல்கும்படி சீர்திருத்தினால் தேவையற்ற நகர் மையங்களையும், நெருக்கத்தையும் தவிர்க்கலாம். கிராமங்களில் கல்வி வசதியும், வேலைவாய்ப்பும் செய்து தரப்படல் வேண்டும்.

சமுதாய நலனுக்கும், மேம்பாட்டிற்கும், சுற்றுப்புறத் தூய்மையும், அதனைப் பேணும் உணர்வும் அடிப்படைத் தேவைகளாகும். ஆனால் நகரிலுள்ள பல குடிசைப் பகுதிகள் சுற்றுப்புறத் தூய்மை பற்றிப் போதிய கவனம் செலுத்துவதில்லை. அகில உலக இளைஞர் சங்கம் போன்ற சமூக நலஇயக்கங்கள், குடிசைப் பகுதிகளை ஏற்று நல வாழ்வினைப் போதிக்கலாம். குடிசைப் பகுதிகளே இல்லாமலிருக்கச் செய்வது என்ற குறிக்கோள் நிறைவேறும் வரை தமிழ்

## குடும்ப நல நீதித் திட்டம்

தமிழகம் முழுவதுமுள்ள பல வகை கூட்டுறவுச் சங்கங்களிலும் பணிபுரியும் சுமார் 51,000 பணியாளர்களின் நலன் கருதி ''குடும்ப நலத் திட்டம்'' ஒன்று ஒவ்வொரு மர்வட்டத்திலும் அந்தந்த மாவட்டத்தில் மைய வங்கியின் பொறுப்பில் துவக்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர் யாரேனும் பணிக்காலத்தில் இறந்து விட்டால், அவருடைய குடும்பத்திற்கு கணிசமான ஒரு தொகை குடும்ப நல நிதியாக வழங்கப்படும். இந்தத் தொகை ரூ. 5,000க்கும் குறையாமல் ரூ. 10,000க்கு மேற்படாமல் இருக்கும்; சரியான தொகை எவ்வளவு என்பது பின்னர் அறிவிக்கப்படும்.

நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மிகச் சிறந்த குடியிருப்பிற்கு (தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அல்லது தனியார் பராமரிப்புக் குடிசைப் பகுதி) பரிசினை வழங்கி ஊக்குவிக்க வேண்டும். இது சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்கும் உணர்வினை மக்களிடையே தூண்டிவிடும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, தொழிற்சாலை மற்றும் உள்ளாட்சிகளின் கழிவுகளைத்தகுந்த முறையில் அகற்ற வேண்டிய தொழிலதிபர்கள், உள்ளாட்சித் துறைகள் ஆகியோரின் பொறுப்புக்கள், இப்பொறுப்பினை மீறுபவர்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை மக்களுக்கு அறிந்துரைக்க வேண்டும். மக்களாட்சி முறையில், நன்குணர்ந்த மக்களே தவறும்தொழிற்சாலைக்கோ அல்லது உள்ளாட்சிக்கோ ஓர் தடுப்பாகச் செயல்படலாம். சமூக நல இயக்கங்களும், அரசியல் கட்சிகளும் மேடைப் பேச்சு, விவாதம் அல்லது வெளியீடுகள் மூலமாக, மக்களுக்கு இக் கல்வியினைப் போதிக்லாம்.

**சட்டம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் :**

சட்டங்கள் தவறுபவர்களைத் தண்டித்து, அதன் மூலம் கற்பிக்கும் ஓர் அமைப்பாகக் கொள்ளலாம். அநேக நாடுகளில் மாசு தடுப்புக் குறித்து சட்டம் இயற்றப்பட்டுள்ளது. நமது நாட்டில் நீர் மாசுப் பிரச்சினைக் குறித்து, மத்திய அரசு 1974-இல் நீர் மாசு தடுப்புச் சட்டம் இயற்றியுள்ளது. அநேக மாநிலங்கள் இச்சட்டத்திற்கு ஒப்புதலளித்துள்ளன. நமது மாநிலத்தில் 1939ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம் மூலமும்1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மூலமும் மாசு கட்டுப்படுத்தபபடடு வருகிறது. காற்று மாசினைக் கட்டுப்படுத்த, மத்திய அரசினால் இயற்றப்பட்ட சட்டம் 29-3-81 முதல் அமலுக்கு வந்துள்ளது. அளவிற்கதிகமான வேட்டையாடுதலைத் தடுக்க, மத்திய அரசு 1972-ம் ஆண்டு வன விலங்குப் பாதுகாப்புச் சட்டத்தை இயக்கியுள்ளது.

தற்போது சுற்றுப் புறச் சூழல் பற்றிய உணர்வு மாற்றமடைந்து வருகிறது. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புப் பற்றிய செயல்களை ஒருங்கிணைத்துச் செயல்பட மத்திய அமைப்புக்கள் தோன்றியதன் மூலம் சுற்றுப் புறச் சூழல் ஒரு முழு அமைப்பாகக் கருதப்படுகிறது. ஐ. நா. வின் சூழல் பாதுகாப்புத்துறை அனைத்துலக மாநாடுகள் ஒப்பந்தங்கள் மூலம் ஓர் திட்டம் வகுக்க முயற்சித்து வருகிறது. நமது நாட்டில் தேசிய அளவில் சுற்றுப்புறச் சூழல் மற்றும் ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தற்போது சுற்றுப் புறச் சூழல் துறை மத்திய அரசில் செயல்பட்டு வருகிறது. நமது மாநிலத்தில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பிற்கு ஆலோசனை வழங்க 1976ஆம் ஆண்டில் உயர்மட்ட அளவிலான தமிழ்நாடு சுற்றுப்புறச் சூழல் வாரியம் நிறுவப்பட்டுள்ளது. மேதகு ஆளுநரைத் தலைவராகவும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைத் துணைத் தலைவராகவும் கொண்டு இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது. சூழல் நலவியல் துறை இவ்வாரியத்தின் செயல் துறையாகும். தனிஅதிகாரி (சூழல் நலவியல் துறை) இதன் உறுப்பினர்-செயலாளர் ஆவார். மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளினால் சுற்றுப் புறச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் மாற்றங்களைத் தவிர்ப்பது குறித்தும், வளர்ச்சிப் பணிகளைத் திட்ட காலத்திலேயே, தமிழ்நாடு சூழல் நல வாரியம் ஆராய்கிறது. வாரியத்திற்கு உதவியாக ஐந்து குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. சூழல் நலவியல் துறை, வாரியத்தின் செயல் துறையாக இருப்பதாடு, பொது மக்களிடமிருந்தும், பிற துறைகளிலிருந்தும் வரும் மாசு பற்றிய குறையீடுகளை ஆராய்கிறது. மேலும் மாசு ஏற்பட ஏதுவான தொழிற்சாலைகளைப் பார்வையிடுகிறது. இத்துறை வானொலியிலும், தொலைக் காட்சியிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் சுற்றுப்புறச் சூழல் கல்விக்கு வகை செய்கிறது.

உலகின் பல்வேறு பகுதிகளில் கடுமையான மாசுப் பிரச்சினையாலும், இயற்கை வளங்களின் குறைவினாலும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மிக முக்கியத்துவத்தை அடைந்து வருகிறது. இனியும் சுற்றுப்புறச் சூழலை அலட்சியப்படுத்த முடியாது என்ற நிலையை நாம் அடைந்து விட்டோம். ''அழிவின்றி வளர்ச்சி'' என்பதே நம் குறிக்கோளாக இருக்க வேண்டும். இன்றைய குழந்தைகள் தகுந்த சுற்றுப்புறச் சூழலில் நாளை வாழ்வதற்கு ஏதுவாக, சுற்றுப் புறச் சூழல் கல்வி முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.



## கிராம அங்காடி அலுவலர்கள் சம்பள உயர்வு

கிராம அங்காடித் திட்டத்தின் கீழுள்ள கூட்டுறவு நுகர் பொருள் விற்பனைக் கடைகளிலும் மற்ற கூட்டுறவு நுகர் பொருள் விற்பனைச் சங்கங்களிலும் மற்ற ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களிலும் பணிபுரியும் விற்பனையாளர்களுக்குப் பொதுவாக தற்போது மாத ஊதியமாக ரூ. 100 வழங்கப்படுகிறது. இது தொழிலாளர் தினமான நடப்பாண்டு மே 1 முதல் குறைந்த பட்சம் ரூ. 150 ஆகவும், மற்ற பணியாளர்களுக்கு 2-10-80-ல் அந்தந்தப் பிரிவினர்க்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் குறைந்த பட்ச ஊதியமாகவும் உயர்த்தி வழங்கப் படுகிறது. இதனால் சுமார் 15,000 அலுவலர்கள் பயனடைவார்கள்.

திருச்சி மாவட்டத்தில்

# வறட்சி நிவாரணப் பணிகள்

ப. சாமிநாதன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திருச்சிராப்பள்ளி

பருவ மழை பொய்த்ததன் காரணமாக, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் பல பகுதிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வறட்சியைப் போக்கிட போர்க்கால நடவடிக்கையாகப் பல்வேறு நிவாரணப் பணிகள் இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வறட்சி நிவாரணப் பணிகளுக்கென திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்குத்தமிழகஅரசு இதுவரை ரூபாய் 2.23 கோடி ஒதுக்கியுள்ளது. இதில் ரூபாய் 1.19 கோடி குழாய்க கிணறுகள் அமைக்கவும், ரூபாய் 11.25 இலட்சம் கிணறுகளை ஆழப்படுத்தவும், ரூபாய் 8 இலட்சம் பெரிய பாசனக் கிணறுகள் அருகே கிணறுகள் தோண்டவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**குடிநீர் வசதி பணிகள் :**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பல்வேறு வறட்சிப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அங்கீகரிக்கப்பட்ட 365 புதியதாகத் தோண்டப்பட வேண்டிய துளைக் கிணறுகளில் 225 துளைக் கிணறுகள் போடப்பட்டுள்ளன. மீதமுள்ள 140 துளைக் கிணறுகள் போடும் பணி விரைவாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆழப்படுத்தப்பட வேண்டிய 723 கிணறுகளில் 451 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 272 பணிகள் செயலில் உள்ளன.

நிலநீர்க்கோட்டப் பொறியாளரால் 45 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. மேலும் 23கிணறுகள் விரைவில் தோண்டப்படவுள்ளன.

புதிதாக குடிநீர் விநியோகத்திற்காக 10 நீர்த் தொட்டிகள் (டாங்கர்கள்) ஊராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் கொடுக்கப்பட்டு குழாய்கள் அமைக்க முடியாத இடங்களுக்குத் தண்ணீர் லாரியின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

**கிராமப்புற வேலை வாய்ப்புப் பணிகள் :**

புதிதாகப் போடப்பட வேண்டிய 74 சாலைகளில்15 சாலைகள் போடும் பணி பூர்த்தி செய்யப்பட்டு, மீதமுள்ள 59 பணிகள் விரைவாகச் செயலாக்கப்பட்டு வருகின்றன. முடிக்கப்பட வேண்டிய 11 சாலை வளர்ச்சிப் பணிகளில் 8 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ளவை செயலில் உள்ளன. 50 ஏக்கருக்குக் குறைவாக மற்றும் 50 ஏக்கருக்கு அதிகமாக ஆக்கப்பட்டுள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்களை ஆழப்படுத்துதல், தூர் வாருதல் போன்ற பணிகள் விரைவாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன இவைகளில் பாதிக்கு மேல் பணிகள் முடிவடைந்துள்ளன. நெடுஞ்சாலைத் துறையினரால் 128 சாலைகள் செப்பனிடப்படும் பணியும், நீர் நிலை ஓரங்களில் 20 குடிநீர்க் கிணறுகள் தோண்டும் பணியும், குட்டைகள் மற்றும் புதிய ஏரிகள் அமைக்கும் 22 பணிகளும் செயலில் உள்ளன.

வறட்சியால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளான புள்ளம்பாடி, ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு இம் மாவட்டத்திலுள்ள செய்தியாளர்கள் 29-4-81 அன்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

புள்ளம்பாடி, ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியங்களில் வறட்சி நிவாரணப் பணிகள் விரைவாகவும், முறையாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ரூபாய் 1.05 இலட்சம் செலவில் சுமார் 140 வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் குடிநீருக்காகக் கிணறுகள் ஆழப்படுத்துதல் குட்டைகள் மற்றும் புதிய ஏரிகள் அமைத்தல் ஆகியன அடங்கும்.

புள்ளம்பாடி அருகே உள்ள வந்தலை கூடலூர் கிராமத்தில் கால் நடைகளுக்குத் தண்ணீர் கிடைக்காமல் இருந்த பெருங் குறையை நீக்க புள்ளம்பாடி வாய்க்காலில் இருந்து ரூபாய் 3,000 செலவில் பம்பு செட் மூலம் தண்ணீர் கிடைக்கஏற்பாடு





செய்யப்பட்டுள்ளது. வாய்க்காலில் இருந்து வரும் தண்ணீரைக் குட்டையில் தேக்கி வைத்து கால் நடைகளுக்குப் பயன்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதே கிராமத்தில் சிமெண்ட் குழாய்கள் மூலம் ஏரியில் தண்ணீரை நிரப்பும் வேலை தீவிரப்படுத்தப்பட்டு விரைவில் முடியும் தருவாயில் உள்ளது.

மக்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தோடல்லாமல் கிராம மக்களின் பொருளாதாரத்திற்கு உறுதுணையாக உள்ள 'கால் நடைச் செல்வங்களுக்கும்' குடி நீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதை கிராம மக்கள் பெரிதும் பாராட்டினர்.

இக்கிராமத்தில் உள்ள ஐந்து கிணறுகளிலும் தண்ணீர் வற்றி விட்ட நிலையில் புள்ளம்பாடி வாய்க்காலில் இருந்து ரூபாய் 9,500 செலவில் சுமார் 140 மீட்டர் தொலைவில் குழாய்கள் போடப்பட்டு குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்படுவதைப் பொது மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர். கானக்கிளியநல்லூர் கிராமத்தில் ரூபாய் 30,000 செலவில் ஆறு கிணறுகள் ஆழப்படுத்தப்படும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறுவயலூர், கானக்கிளியநல்லூர் போன்ற இடங்களில் டிராக்டர் மூலமும் மாட்டு வண்டிகள் மூலமும் குடிநீர் விநியோகமும் செய்யப்பட்டு வருகிறது. செட்டிகுளம், டி. களத்தூர், பாடாலூர் மற்றும் 32 கிராமங்களில் ரூபாய் 34,000 செலவில் 87 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு வருகின்றன.

புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்கென தற்பொழுது ஒரு இலட்சத்து ஐயாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் வறட்சி நிவாரணப் பணிகள் மிகவும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆலத்தூர் கேட் அருகே உள்ள இரூர் பகுதிகளில் தர்மகுளம் வெட்டும் பணி நடைபெற்று வருவதோடு, தண்ணீர் வரும் போது தேக்கி வைத்து நிரந்தர உபயோகத்திற்கென வேறொரு குளமும் வெட்டப்பட்டு வருகின்றன. குடிநீர் வசதிக்கென கைப்பம்புகளும் போடப்பட்டுள்ளன.

ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கிணறுகளை ஆழப்படுத்த தற்போது 50,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 35,000 மதிப்புள்ள வேலைகள் நடைபெற்றுள்ளன.

கிணறுகளை ஆழப்படுத்த மொத்த ஒதுக்கீட்டுத் தொகை 1 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாயும் ஏரிகளை பராமரிக்கும் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

வறட்சிப் பகுதிகளில் மக்களுக்கும், கால்நடைகளுக்கும் குடிநீர் வழங்குவதும், வேலை வாய்ப்பு அளிப்பதும் நிவாரணப் பணிகளில் முக்கிய அம்சமாக அமைந்துள்ளது. நிவாரணப் பகுதி மக்களை நேரடியாக ஈடுபடுத்தி அவர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுத்து வருமானத்திற்கு வகை செய்வதுடன் அந்தக் கிராமங்களின் முன்னேற்றத்திற்கும் உதவும் நோக்கத்துடன் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் வறட்சி நிவாரணப் பணிகளை முறைப்படுத்தியிருக்கிறார்.

இவ்விதம் பல்வேறு நிவாரணப் பணிகள் வறட்சிப் பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் செயல்படுத்தப்படுவது மக்களுக்கு நம்பிக்கை தருவதாக அமைந்துள்ளது.

## உடல் ஊனமுற்றோர் நலன்



உடல் ஊனமுற்றோர்களுக்கு உதவ தற்பொழுது தமிழகத்தில் ஒரே ஒரு கூட்டுறவுச் சங்கம்தான் இருககிறது. உடல் ஊனமுற்றோர் உலக ஆண்டான இவ்வாண்டில், உடல் ஊனமுற்றோருக்கும் அவர்தம் வாழ்வில் வருமானம் ஈட்ட உதவுகிற வகையில் உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக் கூட்டுறவுச் சங்கங்கள் வேலூர், திருநெல்வேலி, கடலூர், தஞ்சை, திருச்சி ஆகிய 5 இடங்களில் துவக்கப்படும்.

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் ரூபாய் 80 இலட்சம் மொத்தச் செலவில் புதிய பேருந்துப் பணிமனைகள் கட்டப்படும்.

- இவ்வாண்டு காரைக்குடியிலும், புதுக்கோட்டையிலும் தற்போதுள்ள பணிமனைகள் ரூபாய் 5 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்படும்.

- குமிழி, போடிநாயக்கனூரில் தற்போதுள்ள பணிமனைகள் சீரிய பராமரிப்புக்காக அதிக வசதிகளுடன் ரூபாய் 3 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

- பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தைப் பிரிப்பதனால் ஏற்படும் புதிய போக்குவரத்துக் கழகத்தின் தேவைகளைப் நிறைவு செய்வதற்காக மாதம் ஒன்றுக்கு 12 பேருந்து கூண்டு கட்டும் பெரிய கூடம் ஒன்று மானாமதுரையில் 10 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 20 இலட்சம் செலவில் நிறுவுதல் வேலை ஆரம்பிக்கப்படும்.

- மாதம் ஒன்றுக்கு நான்கு பேருந்து கண்டு கட்டும் சிறிய கூடங்கள் திண்டுக்கல்லிலும், திருச்சிராப்பள்ளியிலும் நிறுவப்படும்.

- கடலோரப் பகுதிகளில் ஓடுவதற்கேற்ப துருப்பிடிக்காதவாறு முழுவதும் அலுமினியத்தால் ஆன பேருந்துக் கூண்டு கண்டும் கூடம் ரூ.2-இலட்சம் செலவில் இராமநாதபுரத்தில் அமைக்கப்படும்.

- புதிதாக ஏற்படுத்த இருக்கும் போக்குவரத்துக் கழகம் பயன் அடையும் வகையில் தேவகோட்டையில் ரூபாய் 27 இலட்சம் செலவில் ஒரு புதிய டயர் புதுப்பிக்கும் கூடம் ஒன்றும், இயந்திரங்களை மறு சீரமைப்புச் செய்யும் மத்திய தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்படும்.

- திருமங்கலத்தில் மாதம் ஒன்றுக்கு 200 டன் உபயோகப்படுத்தப்பட்ட கழிவு இயந்திர எண்ணெயை சுத்திகரிப்புதற்காக ரூபாய் 6 இலட்சத்தில் ஒரு சுத்திகரிப்பு கூடம் ஆரம்பிக்கப்படும்.

- மதுரையில் பேருந்துகள் பத்திரமாகவும், திறமையாகவும், சிக்கனமாகவும் இயங்கவும் அதன் நடமாட்டத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் ரூபாய் 10 இலட்சம் செலவில் ஒரு கம்பியில்லாத் தந்தி அமைப்பு நிறுவக் கருதியுள்ளது.

- மதுரை நகரில் சினிமா செல்பவர்களும், இரயில் பயணிகளும் பயன்பெறும் வகையில், இரவு நேரப் பேருந்துகள் இயக்கப்படும்.

**சேரன் போக்குவரத்துக் கழகம்**

- இவ்வாண்டில் பவானி, காங்கேயம், பெருந்துறை, கவுந்தப்பாடி, தாளவாடி, சென்னிமலை மற்றும் நம்பியூர் ஆகிய இடங்களில் புதிய பேருந்து பணிமனைகள் ரூ. 35 இலட்சம் செலவில் கட்ட ஆரம்பிக்கப்படும்.

- ஊட்டியிலும், திருப்பூரிலும் கூடுதலான பேருந்துப் பணிமனைகள் பட்டுவதற்கு ரூ. 15- இலட்சம் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




- தாராபுரத்தில் ஒரு புதிய பேருந்து கூண்டு கட்டும் தொழிற்சாலை ரூ. 5- இலட்சத்தில் ஏற்படுத்தப்படும். இவ்வாண்டு பேருந்துக் கூண்டு முழுவதும் அலுமினியத்தால் கட்டப்படும் வேலையும் எடுத்துக்கொள்ளப்படும்.

- பவானியில் ஒரு டயர் புதுப்பிக்கும் தொழிற்கூடம் ரூபாய் 1 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

- ஈரோட்டில் புதிதாகத் துவக்கப்படும் போக்குவரத்துக் கழகத்தின் நலன் கருதி ஒரு மத்திய தொழிற்கூடம் ரூபாய் 25 இலட்சம் செலவில் கட்டப்படும்.

- சுற்றுலா மேம்பாட்டைக் கருதி, கொடநாடு நோக்கு ,திருமூர்த்தி அணை ஆகிய சுற்றுலா இடங்களுக்கு எல்லா வசதிகளையும் ஏற்படுத்த ரூபாய் 6 இலட்சம் செலவிடக் கருதப்பட்டது.

- சேரன் போக்குவரத்துக் கழகம் ஒரு மின்வேகக் கட்டுப்பாட்டுக் கருவியை அதனுடைய சொந்த வடிவமைப்பில் அமைத்துள்ளது. சிறந்த சோதனைகளுக்குப் பிறகு, பேருந்துகளில் பொருத்துவதற்கு உற்பத்தியைச் சீராகப் பெருக்குவதில் ஈடுபடும்.

- மத்திய அரசு, சேரன் போக்குவரத்துக் கழகத்தை, அந்தமான் போக்குவரத்து முறையை மேம்படுத்தும் பொருட்டு ஆலோசகர்களையும், அந்தமான் போக்குவரத்தின் பேருந்துக் கூண்டு செய்தல், அந்தமானில் பேருந்து நிலையங்கள் அமைத்தல், மேலும் அப்போக்குவரத்திலுள்ள அலுவலர்களுக்குப் பயிற்சிப் போதனை அளித்தல் ஆகியவைகளுக்காகத் தேர்ந்தெடுத்துள்ளது.

- இவ்வாண்டில் 100 நிழற்குடைகளும், 100 சாலைக் குறியீட்டுப் பலகைகளும் ரூ. 4.2 இலட்சம் செலவில் நிறுவப்படும்.




பொள்ளாச்சியில் ரூ. 2 -இலட்சம் செலவில் பேருந்துகளுக்கு சிறு இரும்பு உதிரி உறுப்புகள் செய்யும் தொழிற்கூடம் நிறுவப்படும்.

**சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம்**

- இரண்டு ஏக்கர் பரப்பளவில் மன்னார்குடியில் ரூபாய் 6 இலட்சம் செலவில் ஒரு புதிய பணி மனை கட்டப்படும்.
- இரண்டு ஏக்கர் பரப்பளவில் ஜெயங்கொண் டானில் மற்றோரு பணிமனை ரூபாய் 3 இலட்சம் செலவில் அமைத்தல் வேலை ஆரம் பிக்கப்படும்.
- இரண்டு ஏக்கர் நிலத்தில் துறையூரில் ஒரு புதிய பேருந்து பணிமனை ரூபாய் 5 இலட்சம் செலவில் கட்டப்படும்.
- கரூரில் ரூபாய் 8 இலட்சம் செலவில் மாதம் ஒன்றுக்கு 7 பேருந்துகளுக்குக் கூண்டு கட்டு வதற்காக ஒரு பேருந்து கூண்டு கட்டும் பகுதி ஆரம்பிக்கப்படும். கட்டடம் கட்டும் வேலை தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**அண்ணா போக்குவரத்துக் கழகம்**

- மேட்டூர், இராசிபுரம், இடப்பாடி, சங்கரி, திருச்செங்கோடு ஆகிய இடங்களில் மொத் தம் ரூபாய் 38 இலட்சம் செலவில் புதிய பேருந்து பணிமனைகள் கட்டப்படும்.
- நாமக்கல்லில் ரூபாய் 9 இலட்சம் செலவில் ஒரு பேருந்துக் கூண்டு கட்டும் பகுதி அமைத் தல் துவக்கப்படும்.
- சேலத்திலும், ஒசூர் தொழிற்பேட்டையிலும் தொழிலாளர் நலன் கருதி இரவிலும் பேருந்து கள் இயக்கப்படும்.

**கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்**

- வள்ளியூரில் ரூபாய் 2 இலட்சம் செலவிலும், கன்னியாகுமரியில் ரூ. 6 இலட்சம் செலவி லும், புதிய பேருந்துப் பணிமனைகள் ஆரம் பிக்கப்படும்.
- மாதம் ஒன்றுக்கு 6 பேருந்துகளுக்குக் கூண்டு கட்டுவதற்கு கூண்டு கட்டும் பகுதி ஒன்று திருநெல்வேலியில் நிறுவ ஏற்பாடுகள் செய் யப்படும்.
- ொழிலாளர் நலன் கருதி திருநெல்வேலியில் ரூப ய் $2\frac{1}{2}$ இலட்சம் செலவில் ஒரு புதிய சிற் றுண்டி விடுதிக்காக கட்டடம் கட்ட ஆரம்பிக் கப்படும்.

**தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்**

- வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத் தூரிலும், கள்ளக்குறிச்சி, சிதம்பரம், பண்ணு ருட்டி ஆகிய இடங்களில் புதிய பேருந்துப் பணிமனைகள் மொத்தம் ரூ. 20 இலட்சம் செலவில் கட்டப்படும்.
- விழுப்புரத்தில் மத்திய தொழிற்கூடம் ஒன்று ரூபாய் 15 இலட்சம் செலவில் துவக்க இருக் கிறது.
பண்ணுருட்டியில் (பருந்து கூண்டு கட்டும் பகுதியொன்று, ரூபாய் 6 இலட்சம் செலவில் கட்டப்படும்.

**திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்**

- தூத்துக்குடி, கம்பம், திருநெல்வேலி, ஈரோடு ஆகிய இடங்களில் ரூபாய் 36 இலட்சம் செல



வில் புதிய பேருந்துப் பணிமனைகள் கட்டப்படும்.

- தொழிலாளர் நலன் கருதி, சென்னையில் சிற்றுண்டி விடுதிக்காகப் பல மாடிக் கட்டடம் ஒன்று ரூபாய் 5 இலட்சம் செலவில் கட்டத் துவங்கப்படும்.

- இவ்வாண்டு பிற மாநிலங்களுக்குச் செல்லும் புதிய வழித் தடங்களில் கீழ்க்கண்ட இடங்களுக்குப் பேருந்துகள் விடப்படும்:—

அ) தூத்துக்குடியிலிருந்து திருவனந்தபுரத்திற்கு
ஆ) நாகப்பட்டினத்திலிருந்து ,,
இ) சேலத்திலிருந்து ,,
ஈ) பாண்டிச்சேரியிலிருந்து ,,
உ) கோயம்புத்தூரிலிருந்து ,,

- கீழ்க்கண்ட பிற மாநிலங்களுக்குச் செல்லும் வழித் தடங்களில் கூடுதல் பேருந்துகள் விடப்படும்:—

அ) சென்னையிலிருந்து பெங்களூருக்கு
ஆ) மதுரையிலிருந்து பெங்களூருக்கு
இ) சென்னையிலிருந்து திருவனந்தபுரத்திற்கு

- கோவை, சேலம், மதுரை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ரூபாய் 10 இலட்சம் செலவில் சிற்றுண்டிச்சாலைகள் அமைத்தல் துவக்கப்படும்.

தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம்

- சென்னையில் தொழிற்கூடம், பணிமனை, அலுவலகம் ஆகியவை அடங்கிய ஒரு சொந்தக் கட்டடம் ரூபாய் 6 இலட்சம் செலவில் கட்டப்படும்.

பொது, தொழிலாளர் நலன், சமூக நலம் பல்வகை !—

- இவ்வாண்டு உடல் ஊனமுற்றோரின் ஆண்டாகையால், எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் பணியாற்றும் உடல் ஊனமுற்றோர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவைகள் 50 சதவிகித மானியத்திலும், மீதமுள்ள 50 சதவிகிதம் சுலபத்தவணைகளில்திருப்பிச் செலுத்தும் கடனாகவும் இருக்கும்.

- பல்லவன் போக்குவரத்துக் கழகப் பெருநகர்ப் பிரிவில் தற்சமயம் உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு வழங்கப்படுவது போன்ற சலுகையினை, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நீங்கலாக ஏனைய போக்குவரத்துக் கழகங்களுக்கும் விரிவுபடுத்துதல்.

போக்குவரத்துக் கழகப் பணிமனைகளில், தற்சமயம் வானொலிப்பெட்டி இல்லாத இடங்களில், உடனடியாக வானொலிப் பெட்டிகள் வாங்கிப் பொருத்தப்படும்.

- போக்குவரத்துக் கழகங்களிலும், பொறியியற் கழகங்களிலும், பங்கு மூலதனத்திற்காகப் பணியாளர்களிடம் இருந்து வசூலித்த தொகைகளை அவர்கள் விருப்பத்திற்கிணங்க அவர்களுக்குத் திருப்பியளிக்கப்படும். இதற்காக எல்லாக் கழகங்களுக்கும் ரூ. 1 கோடியே 46 இலட்சம் பணம் தேவைப்படும்.

- பணியாளர்கள் சேவைக் காலத்தில் கண் பார்வை மங்குதல், உடற் கோளாறு ஆகியவைகளால் அந்த வேலைக்குத்தகுதியற்றவர்என்று மருத்துவர்கள் அறிக்கை இருந்தால், அப்பணியாளருக்கு, அவருடைய தகுதி மற்றும் படிப்புக்கேற்ற வேறு ஒரு உதவியாளர் (ஹெல்பர்) போன்ற வேலையில் அவருடைய பணிக்காலக் கணக்கை முடித்துவிட்டுப் புதிதாக நியமிக்கப்படுவது (Fresh Appcintment) பற்றி அரசாணை பிறப்பிக்கப்படும்.

- நீண்டகாலத் தொடர் ஊதிய திட்டத்தின்படி, முதலில் 6 ஆண்டுகளுக்குப் பிறகு ஊதிய உயர்வுக்காக ஒரு பரிசீலனையும், அடுத்த 8 ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது பரிசீலனை மட்டுமே நடைமுறையில் இருக்கிறது. அதாவது, 14 ஆண்டுகளுக்குப் பிறகு ஊதிய முறையில் மாற்றமில்லை. பணியாளர்கள் கேட்டுக்கொண்டதின் பேரில், மூன்றாவது பரிசீலனை ஒன்று, இரண்டாவது பரிசீலனைக்கு 10 ஆண்டுகளுக்குப் பிறகு, எடுத்துக் கொள்ளலாம் என்றும், ''ஊதியப்படி முறை''

அதற்கேற்ப மாற்றியமைக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

- 25 பேருந்துகளுக்குக் குறையாமல் ஒரு கிளை பணிமனையில் இருந்தால், அங்கெல்லாம் ஒரு கேன்டீன் (Canteen) அமைக்கப்படும்.

- ஒவ்வொரு கழகத்திலும், கூட்டுறவு அங்காடிகள் அமைத்து, பணியாளர்களுக்கு அத்தியாவசியமான பண்டங்கள் நியாயமான விலையில் கிடைக்க வழி வகுக்கப்படும்.

- தற்சமயம் தொழிலாளர்களின் சீருடை தைப்பதற்காக வழங்கப்படும் தையற்கூலி ரூ. 27-லிருந்து, ரூபாய் 30-ஆக உயர்த்தப்படுகிறது.

- தற்பொழுது மத்திய அரசினரால் அமைக்கப்பட்ட பயிற்சியாளர்கள் சட்டப்படி (Apprentice Act) பட்டப்படிப்பு பெற்ற பொறியாளர்களுக்கு ரூ. 250-ம், டிப்ளமோ படித்தவர்களுக்கு ரூ. 180-ம், தொழிற் பயிற்சி நிலையங்களில் (ஐ.டி.ஐ) படித்துவெளி




வந்தவர்களுக்கு முதல் ஆண்டுக்கு ரூ. 140-ம், இரண்டாம் ஆண்டுக்கு ரூ. 150-ம் மாதம் ஒன்றுக்கு உதவித்தொகையாக அளிக்கப்பட்டு வருகிறது. இதில் சரி பாதிச் செலவு மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இனி சேர்க்கப்படும் பயிற்சியாளர்களுக்கு, முறையே ரூ. 500, 225, ரூ. 175, ரூ. 185 ஆக அளிக்க முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. தொழிற் பயிற்சிக் கூடங்களில் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்று வெளி வந்தவர்களுக்கு ரூ. 185-உதவித் தொகை வழங்கப்படும். கூடுதலாக கொடுத்த உதவித் தொகையை அந்தந்தக் கழகங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும். அது போல், இனி வரும் பட்டம் பெற்று வந்த எழுத்தர்களுக்கு (Clerical Apprentice) ரூ. 200-ம், பட்டப் படிப்பில்லாத எழுத்தர்களுக்கு ரூ. 175-ம் உதவித் தொகை அளிக்கப்படும்.

தொழிலாளர்கள் திருமணக் கடன் பெறும் பொருட்டு 6 மாத காலத்திற்கு முன்னதாகவே

மாதத்திற்கு முன் விண்ணப்பித்தால் போதுமென மாற்றப்பட்டுள்ளது.

- தற்பொழுது, பாண்டியன் சாலைப்போக்குவரத்துக் கழகத்தில், 1,045 பேருந்துகளும், பசரன் போக்குவரத்துக் கழகத்தில் 963 பேருந்துகளும், சோழன் சாலைப்போக்குவரத்துக் கழகத்தில் 727 பேருந்துகளும், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் 678 பேருந்துகளும் இருக்கின்றன. திரு. சி. ஆர். பட்டாபிராமன் குழு அறிக்கையின்படி ஒரு போக்குவரத்துக் கழகத்தில் அதிகப் பட்சமாக 600 பேருந்துகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்ற பரிந்துரையை அரசு ஏற்று, மேற்கூறிய நான்கு கழகங்களையும் மாவட்ட வாரியாகப் பிரித்துவிடுவது என்று அரசு முடிவெடுத்துள்ளது. பல்லவன் போக்குவரத்துக் கழகப் புறநகர்ப்பிரிவிலும், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலும், உள்ள வழித் தடங்களை முறையாகப் பிரித்து ஒதுக்கிய பிறகு, புறநகர்ப்பிரிவு ஒரு தனிப் போக்குவரத்துக் கழகமாக இயங்க வாய்ப்பிருக்கிறது. இதனால், தற்போதுள்ள 8 பயணிகள் போக்குவரத்துக் கழகங்கள் 13 ஆக மாறும். தமிழ்நாட்டில் உள்ள 16 மாவட்டங்களில், தருமபுரி, நீலகிரி, புதுக்கோட்டை, செங்கை தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும், மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகம் என்ற அடிப்படையில் செயல்பட இருக்கிறது.

- எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் பணியாளர்களுக்கு, 'வீடு உனக்கே சொந்தம்' என்ற அடிப்படையில், வீடுகள் கட்டுவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக முயற்சிகள் எடுக்கப்படும். இவ்வாண்டில் ஒவ்வொரு கழகத்திலும் குறைந்தபட்சமாக 100 வீடுகளாவது கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த வேலையை ஒருங்கிணைக்க எல்லாப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் பொதுவாக ஒரு தனி அதிகாரி நியமிக்கப்படுவர்.

# முன்னேற்றப் பாதையிலே...

திருமதி ஸ்டெல்லா சௌந்தரராஜ்

இயக்குநர், முறைசாரா மற்றும்
வயது வந்தோர் கல்வி இயக்ககம்

**1976-ஆம்** ஆண்டு மார்ச் மாதம் முறைசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. இது முன்னால் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் அரசிற்கு அளித்த அறிக்கையின் விளைவாகும்.

நடைமுறையிலிருந்து 15-45 பிரிவினர்களுக்கான உழவர் செயல்முறைத் திட்டமும், 15-25 வயது பிரிவினர்களுக்கான முறைசாராக் கல்வித் திட்டமும் இவ்வியக்ககத்தின் கீழ் வந்து நன் முறையில் செயல்படத் தொடங்கின.

பின்பு, நம் மாநிலத்திலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் முறைசாராக் கல்வி மையங்களை அமைக்கும் புதிய முயற்சியில் இவ்வியக்ககம் ஈடுபட்டது. இம்மையங்கள் 6-14 வயதுப் பிரிவினர்களில் பெற்றோரின் பொருளாதார நிலை, சமூகச் சூழ்நிலை காரணமாக முறையான கல்வி ஒழுங்காகக் கிடைக்கப் பெறாமல், பள்ளியை இடையே விட்டவருக்கும், பள்ளியை எட்டிப் கூடப்பார்க்காமல் இருந்தோருக்குமாக அமைக்கப்பட்டது.

1978 அக்டோபர் மாதம் வயது வந்தோர் கல்வியைப் பரப்ப வேண்டுமென்ற எழுச்சி நம் நாடு முழுவதும் உருவானது. இவ்வியக்ககமும் முழு மூச்சுடன் இப்பணியில் இறங்கியது. முன்னைய இரு திட்டங்களாகிய உழவர் செயல்முறைத் திட்டத்தையும், முறைசாராக் கல்வித் திட்டத்தையும் ஒன்றாக இணைத்து கிராமியச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டமாக குமரி, சென்னை, நீலகிரி, பெரியார் இந்நான்கு மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய 12 மாவட்டங்களில் அமல்படுத்திற்று.

1979-80-ல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கிராமங்களின் வளர்ச்சிக்காக 'தன்னிறைவுத் திட்டம்' என்ற பெயரில் புதிய திட்டமொன்றை உருவாக்கினார். இதன் நோக்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம மக்களின் அடிப்படை வசதிகளைப் பெருக்கி அவர்களுக்கு நல் வாழ்வு கொடுக்க வேண்டுமென்பதேயாகும். தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் எல்லாப் பகுதிகளிலும் வயது வந்தோர் கல்வித் திட்டமும் செயல்பட வேண்டும். இரண்டும் ஒன்றோடொன்று இணைந்து இயங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இப்பகுதிகளில் வயது வந்தோர் கல்வி மையங்களைத் திறக்க இவ்வியக்ககம் அரசை அணுகியது.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறுவோர் கிராமப்புறங்களிலுள்ள குறைந்த வருமானமுள்ளவர்கள். பெரும்பாலும் வறுமைக் கோட்டின் கீழேயுள்ளவர்கள். வறுமையும், முன்னேற முடியாத தடைகளும் மக்களிடையே மூட நம்பிக்கையை வளர்ப்பதோடு தாழ்வு



## நூறு ஆண்டுகளில் ஒரு நல்ல பாதை

பெரியார் மாவட்டத்தில் அம்மாப்பேட்டை-பவானி ரோடிலிருந்து பிரிந்து சீலம்பட்டிவரை செல்ல, இதுவரை மேட்டூர் வாய்க்கால் கரை ஓரமாக நடந்து செல்ல சுமார் 3 அடி அகலமுள்ள கரடு முரடான நடைபாதை மட்டும் இருந்தது. அங்குள்ள மக்கள் ஒரு சாலையினை அமைத்துக் கொடுக்கக் கோரியதின் பேரில், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் மேற்படி சாலையை ரூ. 20,000/– மதிப்பீட்டில் சுமார் 25 அடி அகலத்தில் 2 கிலோ மீட்டர் நீளத்திலும் மண்பாதை அமைக்கப்பட்டுள்ளது. 60 நபர்கள் சுமார் 100 நாட்களுக்கு வேலை வாய்ப்புப் பெற்றதோடு, கடந்த 100 ஆண்டுகளாக எந்தவிதமான போக்கு வரத்து வசதியும் இல்லாது இருந்த சீலம்பட்டிக்கு ஒரு சாலை அமைக்கப்பட்டுள்ளது!

மனப்பான்மையையும், மற்றோரைச் சார்ந்திருக்க வேண்டுமென்ற எண்ணத்தையும் வளர்க்கிறது. இதனால் வறுமை இன்னும் அதிகமாகிறது. எனவே, இந்நிலையை மாற்றியாக வேண்டும்.

வயது வந்தோர் கல்வித் திட்டங்கள் வெறும் எண்ணறிவும் எழுத்தறிவும் மட்டும் கொடுப்பதல்ல. அவற்றின் அகன்ற நோக்கங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வயது வந்தோர் தங்கள் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும், தொழில் திறனை வளர்க்க வேண்டும் என்ற நோக்கங்களுடன் வயது வந்தோர் கல்வி மையங்கள் மாநில அரசுத் திட்டத்தின் கீழும், கிராமிய செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின் கீழும் திறக்கப்பட்டன. ஜூன் 1980-ல் இவ்விரு திட்டங்களும் முதல் சுற்றை முடித்து இரண்டாவது சுற்றை ஆரம்பித்தது.

முதல் சுற்றில் இரு திட்டங்களிலும் சேர்ந்து பயனடைந்தோர் எண்ணிக்கை கீழே தரப்படுகிறது:

| திட்டத்தின் பெயர் | நிதி உதவி செய்பவர் | ஆரம்பம் | முடிவு | சேர்ந்தோர் எண்ணிக்கை ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| கிராமிய செயல்முறை எழுத்தறிவுத்திட்டம் | நடுவண் அரசு | ஜூலை '79 | ஏப்ரல் '80 | 94995 | 27239 | 122234 |
| மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம் | மாநில அரசு | ஜனவரி பிப்ரவரி '80 | அக்டோபர் நவம்பர் '80 | 103622 | 104302 | 207924 |

மொத்த சேர்க்கையில் தாழ்த்தப்பட்டோர் மலைவாழ் சாதியினர் தொகை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:

| திட்டத்தின் பெயர் | தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் சாதி தொகையும் சதவீதமும். | மற்றவர் |
|---|---|---|
| கிராமிய செயல்முறை எழுத்தறிவுத் திட்டம் | 40495 (33.13 ·/.) | 81739 (66.87·/.) |
| மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம் | 78373 (37.69·/.) | 129551 (62.20·/.) |

இரண்டாவது சுற்றின் சேர்க்கை விவரம் கீழ் வருமாறு:

| திட்டத்தின் பெயர் | நிதியுதவி செய்பவர் | சுற்று ஆரம்பித்த நாள் | சுற்று முடிவுறும் நாள் | சேர்க்கை ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. கிராமிய செயல்முறை | நடுவண் அரசு | நவம்பர் 1980 | ஆகஸ்டு 1981 | 56453 | 54312 | 110765 |
| 2. மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம் | மாநில அரசு | மார்ச் 1981 | டிசம்பர் 1981 | முழுவிவரம் இன்னும் கிடைக்கப் பெறவில்லை. (உத்தேசம் 183000) | | |

இவ்வியக்ககம் எழுத்தறிவின்மையை அகற்றும் பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டதோடு 1978-ல் இருந்து இதுவரை 4 இலட்சத்திற்கு மேல் எழுத்தறிவற்றோரைப் பயனடையச் செய்திருக்கிறது.

இத்திட்டத்தின் அடிப்படைத் தத்துவம் இதில் எல்லோரையும் குறிப்பாக, கல்வி கற்ற இளைஞர்களை ஈடுபடச் செய்து செயல்முறை மூலம் வயது வந்தோர் கல்வியை அளிக்க வேண்டுமென்பதே. எனவே, 1980-ல் எழுத்தறிவின்மையை அகற்ற மேலும் இரு புதிய முன்னோடித் திட்டங்களை அமல் நடத்தியது.

உயர்நிலை, மேல் நிலைப்பள்ளிகளிலுள்ள பெற்றோர்-ஆசிரியர் கழகங்கள் வயது வந்தோர் கல்வி மையங்களை நிறுவின. இது இந்நாட்டு இளைஞர்களுக்கு இத் தேசியப் பணியில் பொறுப்பேற்று நடத்தும் அரிய வாய்ப்பைக் கொடுத்தது.

நகர் வாழ் மக்களுக்காக நடத்தப்படும் 150 தொழில் கல்வி மையங்கள் கைத்தொழிலோடு எழுத்தறிவையும் புகட்ட வழி வகுக்கிறது. இது 5 மாதக் கால அளவைக் கொண்டது.

தற்போது நம் மாநிலத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் நான்கு வீதம் 6-14

# ஒரு குழந்தைக்கு ஒரு மரம்

# தமிழ்நாட்டில்

# புதிய திட்டம்



கிராமப்பகுதிகளில் "ஒரு குழந்தைக்கு ஒரு மரம்" என்ற விகிதத்தில் பதினான்கு வயதிற்குட்பட்ட சிறுவர் சிறுமியர்கள் மரம் வளர்க்க ஊக்குவிக்கும் ஒரு திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து இந்தியத் தலைமை அமைச்சர் முதலமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார். இதற்கிணங்க, இத்திட்டத்தை ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் மூலம் நிறைவேற்ற மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பயிலும் சிறுவர் சிறுமியர் பழமரவகைகளை நடுவதோடு அவைகளை பேணிகாக்கும் பொறுப்பும் அந்தச் சிறுவர் சிறுமிகளிடம் விடப்படும். மரத்தைப் பராமரிக்கும் சிறுவன்/சிறுமியின் பெயர் அந்த மரத்தில் ஓர் அறிவிப்புப் பலகையில் எழுதப்படும். நாற்றுகளையும், மரக்கன்றுகளையும் பள்ளிகளுக்கு இலவசமாக வழங்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களைச் சாரும். எனினும் வனத்துறையிலிருந்து வாங்கப்படும் இந்த நாற்றுகள், மரக்கன்றுகளுக்கு தக்கவிலையை ஊராட்சி ஒன்றியங்கள் தமது நிதியிலிருந்து வழங்கும்.

இத்திட்டத்தின் முதற்கட்ட நிறைவேற்றத்திற்காக, ஊராட்சி ஒன்றியப்பள்ளிக் குழந்தைகளுக்கென பத்து லட்சம் நாற்றுகள் மற்றும் மரக்கன்றுகள் வாங்குவதற்காக ஊராட்சி ஒன்றியங்களின் நிதியிலிருந்து ரூ. 1.5 இலட்சம் செலவு செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

வயதுப் பிரிவினர்களுக்கு நான்கு முறை சாராக் கல்வி மையங்கள் நடைபெற்று வருகின்றன. இது முறையான ஆரம்பக் கல்வியைப் பெருக்கித் துணை புரிவதோடு பள்ளியை இடையில் விட்டு வந்தவர்களுக்குக் கல்வி பயில வாய்ப்பளிக்கிறது. இத்திட்டம் முறையான கல்வித் திட்டத்திற்கு இணையாகச் செயல்படுவதோடு எல்லாருக்கும் பயன்பெறும் வகையிலும் சூழ்நிலைக்கேற்ப மாற்றிக் கொள்ள வசதியான வகையிலும் அமைகிறது.

இத்திட்டத்திற்கு நாடு முழுவதிலும் நல்ல வரவேற்பு இருப்பதுடன் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் இன்னும் அதிக மையங்கள் திறக்க வேண்டுமென்ற வேண்டுகோளும் இருக்கின்றன.

இதோடு, சிவகாசி நகரில் 30 முறைசாராக கல்வி மையங்கள் தீப்பெட்டி மற்றும் வெடிமருந்துத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் சிறுவர்களுக்காக இயங்கும் ஒரு முன்னோடித் திட்டமொன்றை நடத்த அனுமதி பெற்றிருக்கிறது. இம்மையங்கள் 3 ஆண்டுகள் நடைபெறும். இத்திட்டம் ஜூன் 1981-ல் ஆரம்பமாகும்.

வயது வந்தோர் கல்வி ஒரு தேசியப்பணி. இதற்கு ஒவ்வொரு தனி மனிதனும், நிறுவனமும் துணை புரிவது அவசியம். அநேகத் தொண்டு நிறுவனங்கள் எழுத்தறிவின்மையை அகற்றப் பாடுபட்டு வருகின்றன. பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் இத்திட்டத்தைத் தங்கள் சமூக சேவை மன்றங்கள் மூலமாகவோ, மாணவர் தேசியப்படை மூலமாகவோ நடத்தி வருகின்றன.

பொருளாதார, சமூக நோக்கங்களுக்கும் கல்விக்கும் நேரிடையான தொடர்பு இருப்பதால் கல்வியை வளர்ச்சித் திட்டங்களுடன் இணைந்த ஒன்றாகக் கருத வேண்டும். வயது வந்தோர் கல்வி எதிர்கால சமூக, பொருளாதாரத் திட்டங்களுக்கு அடித்தளமாக அமைய வேண்டும்.

நம் மாநிலத்திலிருந்து எழுத்தறிவின்மை அகற்றப்படும் வரை தன்னிறைவுத் திட்டமும் வயது வந்தோர் கல்வித் திட்டமும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படவேண்டுமென்பது இவ்வியக்ககத்தின் நோக்கம். இவ்வெண்ணத்தோடுதான் தன்னிறைவுத் திட்டத்தின் இரண்டாவது சுற்றின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் 150 ஒன்றியங்களிலும் வயது வந்தோர் கல்வி மையங்களை அமல் நடத்தும் திட்டமொன்றை அரசிற்கு வழங்கியிருக்கிறது.

# அறுகம்புல்



புல்லும் மரமும் ஓரறி உயிர் என்று தொல்காப்பியர் கூறியிருக்கிறார், ஓரறி உயிரான அறுகம்புல் ஆறறிவு உயிரான மனித இனத்துக்கு மிகவும் பயன் படும் மருந்தாகத் திகழ்வதை இக் கட்டுரை தெரிவிக்கிறது.



**ஏ. ஆர். என். துரைராஜ், ஆர். ஐ. எம். பி.**

**போ**துவாகவே அறுகம்புல் வயல் குளம், நீர்த்தேக்கம் ஆகிய பல இடங்களில் தானாகவே, முளைத்திருப்பதை நாம் பார்க்கலாம். அறுகம்புல் அறியாத தமிழ் மக்கள் இருக்க முடியாது. பெரும்பாலும் சித்த வைத்தியப் பெரியோர்கள் இதனை வெகுவாக மருத்துவத் துறையிலும், செய்முறையிலும் உபயோகித்து வந்திருக்கிறார்கள்.

அறுகம்புல்லிலே பிணிதீர்க்கும் சிறப்பம்சங்களே ஏராளமாக உள்ளன. இயற்கை நமக்கு அளித்த இந்த அறுகம்புல், பிணியிலிருந்து நம்மை விடுவிக்கும் சஞ்சீவி.

**தீரும் வியாதிகள் :-**

பித்த சம்பந்தமான உஷ்ண வியாதிகள், இதய நோய், ரத்தக் கொதிப்பு, பலஹீனம், ஊட்டச் சத்துக்குறைவு உள்ளவர்கள், மூலநோய், வெட்டை, ஆஸ்துமா, தலை பாரம், வயிற்றுநோய், உதிரப்பெருக்கு, மார்புவலி, மூளைபாதிப்பு, தாது விருத்தி, ஞாபகச் சக்தி, கைகால் வலி, குடைச்சல், வாய்வு, ரண காயங்கள் முதலியன நீங்கும் மற்றும், கண் குளிர, சூடு, சொறி, சிரங்கு மாறும்.

**உபயோகமும் செய்முறையும் :-**

அறுகம்புல்லை எடுத்து வந்து, சுத்தம் பார்த்து அதை அம்மியில் அரைத்தோ, இடித்தோ பிறகு வடிகட்டி அதனுடைய ரசத்தை எடுத்துத் தினமும் பல் துலக்குகிற பிறகு அதி காலையில் வெறும் வயிற்றில் ஒரு மண்டலம் (48 நாள்) அருந்தி வந்தால் உஷ்ணம், பித்த சம்பந்தமான வியாதிகள் அறவே நீங்கி விடும்.

அறுகம்புல்லை எடுத்து வந்து, சுத்தம் பார்த்த பிறகு, அதா[...] தகுந்தாற்போல் தண்ணீ[...] நன்றாகவும் காய்ச்சிய பிறகு, வடிகட்டி அப்பானத்தைக் குடிக்கும் அளவுக்கு ஆற விட்டுச் சிறிது சர்க்கரை கூட்டிக் கொண்டு இதை அருந்தி வரவும். இதய நோய்க்கு நன்றாக இருக்கும்.

அறுகம்வேருடன் (சமூலம்) இடித்தும் சாறெடுத்து, அச்சாற்றிலே ஆழாக்கு எடுத்து, இதிலே இரண்டு தேக்கரண்டி (நல்ல) தேன் விட்டுச் சாப்பிடுவது இருதயத்தையும் இரத்தக் குழாய்களையும் பலப்படுத்திச் சக்தியைத் தரவல்லது.

அறுகம்புல்லை எடுத்துச் சேகரித்து, தண்ணீரில் கழுவி சுத்தம் பார்த்து பிறகு நன்றாகஅரைத்து நல்ல பசுவின் பாலுடன் சேர்த்து வற்றக் காய்ச்சி, தினமும் இரவில் படுக்கச் செல்லுமுன் அருந்தி வந்தால், பலவீனமடைந்த திரேகம் தேறி நல்ல பலம்பெற்று வருவதைக் காணலாம்.

அறுகம்புல்லையும் - வேரையும் சுத்தம் பார்த்து நன்றாக அம்மியில் அரைத்துக் காய்ச்சிய பசும்பாலில் (அரைத்து வைக்கப் பட்டிருந்ததை) கலந்து பருகி வரும் பக்கத்தில் மூலநோய் குணமாகும்.

அறுகம் புல்லின் வேரைஎடுத்து சுத்தம் பார்த்து, அதனுடன் மாதுளம்பூ, சீரகம், மிளகு, அதிமதுரம் சிறிது சித்தரத்தை வேருக்குத் தகுந்தாற்போல் இவைகளைக் கூட்டிக் கொண்டு ஒன்றாகச் சேர்த்து கசாயமாக்கி 3 நாட்கள், சாப்பிட வெட்டை சம்பந்தமான வியாதிகள் யாவும் போகும்.

அறுகம்புல்லைக் கொண்டு [...]ந்து, சுத்தம் பார்த்துத் தண்[...]ரில், நன்றாக அலசி, சுத்தம் கீரைகளை எப்படிப் பொரியல் செய்து சாப்பிடுகிறோமோ, அதேபோல் செய்து சாப்பிட உகந்தது. ஞாபகச்சக்தி, கைகால் வலி, குடைச்சல், வாய்வு ஆகியவை குணமாவதுடன் தாது விருத்தியும் ஏற்படும்.

இரணங்கள் ஆறாமல் இருந்தால், இந்த அறுகம்புல் பானம் (ரசம்) தீர்த்து வைக்கிறது.

அறுகம்புல்லை எடுத்துவந்து, சுத்தம் பார்த்த பிறகு அதற்குத் தகுந்தாற்போல், தண்ணீர்விட்டு நன்றாகக் காய்ச்சி, பிறகு வடிகட்டி, டைமண்ட் கற்கண்டு கலந்து குடிக்கும் அளவுக்கு ஆற்றிய பிறகு ரசத்தை அருந்தி வரவும், ஆஸ்துமா, ரத்த கொதிப்பு, கண் சம்பந்தமான பிணிகள் யாவும் போகும்.

அறுகம் வேரைக் கொண்டு வந்து, சுத்தம் பார்த்து பசுவின் பாலில் நன்றாக அரைத்து தலை பாரம், தலைவலி உள்ளபோது நெற்றியில் பற்றுப் போட்டால் நோய் விரைவில் நீங்கும்.

அறுகம்புல்லின் குணம் :

**கண் குளிர :-**

அறுகம்புல்லின் வேருணக்கிப்
பொடித்துமே
நறுநெய்யும் விட்டு நவிடியோர்
பாக்கிடை
தறுகாதிட்டு நாள் காலை மாலை
யுமாய் மண்டலம்
வெறும் வயிற்றிலுண் கண்கள்
தெளியுமே

**— சித்தர் குறுநூல்**

**சூடு, சொறி, சிரங்கு மாற**

அறுகம் புல்லும் நற்சீரம்மிளகதும்
தறுகவே யிடித்தோர்படி நீரினில்
சறுகிடா திட்டுக் காய்ச்சியெட்
டொன்றாக்கி
முறுகிடாதாவின் நெய்விட்ட
ருந்திடே

**— சித்தர் குறுநூல்**

அறுகம்புல் வாத பித்த ஐயமோ
டுளை
சிறுக வறுக்கு மின்னுக்கு செப்பி-
லறிவுதருங்
கண்ணோயொடு தலைநோய்
கண்புகை யிரத்தபித்த
முன்னோ யொழிக்கு முறை

இ-ள் :—அறுகம்புல்-திரிதோஷம்-கோழை-கண்ணோய்-சிரஸ்தாபம்-நூம்பிரநோய் - ரத்தபித்தம்-மருந்துச் சூடு, இவைபோக்கும்-அறிவு தரும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



இயற்கை எழிலின்
வண்ணச் சிறகுகள்!
கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள் :
பருத்திச் சேலைகள், அச்சிட்ட பருத்திச் சேலைகள்,
அசல் பட்டுச் சேலைகள், அச்சிட்ட பட்டுச் சேலைகள்,
பாலியஸ்டர் சேலைகள், பாலியஸ்டர் சட்டைகள்,
பருத்திச் சட்டைகள், பட்டுச் சட்டைகள்,
வேட்டிகள், லுங்கிகள், துண்டுகள், படுக்கை விரிப்புகள்
தலையணை உறைகள், மேஜை விரிப்புகள்,
அலங்காரத்துணி வகைகள் மற்றும் ரெடிமேட் உடைகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி



# தமிழரசு

16-6-'81 இதழ்

## தமிழக அரசின் ஈராண்டுப் பணிகள் தொகுப்பு மலராக

வெளிவருகிறது!